விலை ரூபா 2-00 20 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 தை 13 ஐமாஅவ் 15 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (26-1-86) இதழ் 349



தந்தை செல்வா

## குண்டடிபட்டநிலையில் நினைவுச்சின்ன 'ஸ்தூபி'

(ஐ. சண்முகலிங்கம்)

வடக்கு-கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களின் அதிஉயர மான 'நினைவுச் சின்னம்' ஒன்றின் ஸ்தூபி துப்பாக்கி குண்டுகளின் தாக்குதலுக் குள்ளாகி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

'எண்பது' அடி உயரத்தில் கம்பீரமாகக் காட்சி

(17ம் பக்கம் பார்க்க)

### கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பெண்

# ஒரு பாதுகாப்பு புலனாய்வுத்துறை பேர்வழி ஈரோஸ்' சென்னையில் தகவல்!

### சைப்பிரஸிலும் வேலை பார்த்தவராம்!!

(சென்னை)

'ஈரோஸ்' இயக்கத்தினால் அண்மையில் கடத்தப்பட்ட திருமதி பெனிலோப் எவா வில்லிஸ் என்ற பெண்மணி ஒரு பாதுகாப்புப் புலனாய்வுத் துறையொன்றைச் சேர்ந்த நெருங்கிய தொடர்புள்ளவரென்று தெரிவிக்கப்படுகிறது.

64 வயதுடைய திருமதி வில்லிஸ் அண்மையில் முல்லைத்தீவில் இவ்வியக்கத்தினால் கடத்தி செல்லப்பட்டது தெரிந்ததே!

''இவரை விசாரித்தபோது இவர் லண்டனிலுள்ள பாதுகாப்புத்துறை ஆய்வு நிலையத்தின் ரோயல் ஐக்கிய அரச சேவைக்குப் பணி புரிபவரென்பதை அறிந்துள்ளோம் அத்துடன் இவர் தம்வசம் இலங்கை தேசிய புலனாய்வுத் துறைப் பணிப்பகத்தின் உதவிப் பணிப்பாளரின் 'வரவேற்பட்டை' ஒன்றினையும் வைத்திருந்தார்

''இவர் வாடகைக் கார் ஒன்றை அமர்த்திக் கொண்டு முல்லைத்தீவு வந்துள்ளார். இது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

''திருமதி வில்லிஸ் கடந்த ஆண்டு இரு முறை மே மாதமும், ஆகஸ்ட் - செப்டம்பர் மாதமும் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது அவர் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கும் விஜயம் செய்திருந்தார்.

''திருமதி வில்லிஸ் 56ம் ஆண்டு முதல் 60ம் ஆண்டு வரை சைப்பிரஸ் தீவில் இருந்தார்''.

இவ்வாறு ஈரோஸ் அவர் பற்றிய விளக்கமொன்றை சென்னையில் வெளியிட்டுள்ளது.

[17-ம் பக்கம் பார்க்க]

### கிளிநொச்சி ரயில்நிலையத்தில்

# திடீர் துப்பாக்கிப்பிரயோகம்

# 10 பேர் பலி; 11 பேர் படுகாயம்!

## அநேகர் இந்திய வம்சாவளியினர்!!

(ஏ. வி. மாணிக்கப்)

கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற திடீர் துப்பாக்கிப் பிரயோகத்தில் சுமார் 10 பேர் வரை ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பதினெரு பேர் வரை அவசர சிகிச்சைகளுக்காக யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். முற்றிலும் எதிர்பாராத இத் தாக்குதலுக் குள்ளானேரில் அநேகமானேர் கிளிநொச்சிப் பகுதியில் குடியேறியுள்ள அப்பாவி இந்திய வம்சாவளித் தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்றுப் பிற்பகல் சுமார் 2 மணியளவில் கிளிநொச்சிரயில் நிலையத்தில் பிரயாணிகளினதும், மற்றும் ஊழியர்களினதும் நடமாட்டம் நிறைந்திருந்தது, அப்பொழுது ஒரு குண்டுவெடிச்சத்தம் கேட்டது. கிளிநொச்சி பொலிஸ் இராணுவ கூட்டு முகாமிலிருந்து கவச வாகனங்களிலும் ட்ரக்குகளிலும் வந்தவர்கள் ரயில் நிலையத்தை வந்தடைந்தனர். தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

ரயில் நிலையத்தில் நின்றவர்கள் அங்குமிங்குமாகச் சிதறி ஓடினர் அநகர் ரயில்நிலைய அறை ஒன்றுக்குள்ளும் புகுந்து கொண்டனர்.

துப்பாக்கியுடன் வந்தசீருடைதரித்த இருவர் அறை ஒன்றுக்குள் நின்றவர்கள்மீதும்

[17-ம் பக்கம் பார்க்க]

## பயங்கரவாதிகள் சுட்டதாக கூறச்சொன்னர்கள்

### -காயமடைந்தோர்

(யாழ்ப்பாணம்)

''தங்களை நோக்கித் துப்பாக்கிய ல் சுட்டவர்கள், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ற பொழுது 'பயங்கரவாதிகளே துப்பாக்கியால் சுட்டதாகக் கூறும்படி பயமுறுத்தியதாக, காயமடைந்தவர்களில் பலர் தெரிவித்துள்ளார்கள்.

காயமடைந்த பெரிய கறுப்பன் சோமயன் [55 வயது] நான்கட்டக்ச்சியில் விவசாயம் செய்கிறேன். 6 பிள்ளைகளில் மூவர் கம்பளையில் தாயுடன் இருக்கிறர்கள அவர்களைப்பார்ப்பதற்காக ரயிலுக்கு வந்திருந்தேன்.

[17ம் பக்கம் பார்க்க]

### காயமடைந்தோர் விபரம்

காயமடைநத்தார் விபரம்: தங்கம்மா (60 வயது) பிச்சைக்காரி, கந்தையா மனேன் மணி (12 வயது), துரைசாமி புவனேஸ்வரி (13 வயது), நாகேஸ்வரி (35 வயது), சின்னையா நல்லையா (38 வயது), கிருஷ்ணர் ராமசாமி

[17ம் பக்கம் பார்க்க]

## காந்தி நினைவு தினத்தில் கையெழுத்து இயக்கம்!

[கா யோகநாதன்]

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சனநெருக்கமுள்ள பகுதிகளில் இருக்கும் இராணுவ முகாங்களை வாபஸ் பெறுமாறும், யாழ். குடாநாட்டில் 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறும், அரசியல் தீர்வொன்றைக் காண உடனடியாக பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்குமாறும் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவைக் கோரும் கையெழுத்து இயக்கத்தை மகாத்மா காந்தி நினைவு தினமான இம்மாதம் 30ம் தேதி ஆரம்பிப்பதென தமிழ் பிரதேச பிரஜைகள் குழுவின் இணைப்புக் குழு ஏகமனதாக

[17-ம் பக்கம் பார்க்க]

## அப்பாவிதமிழரை பாதுகாக்கவும்!

### த. வி. கூ. பொலிட்பீரோ!!

(சென்னை)

''இலங்கையிலுள்ள அப்பாவித் தமிழ்மக்களை இனப் படுகொலையினின்றும் பாதுகாக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொலிட்பீரோ இந்தியஅரசைக் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக பொலிட்பீரா விடுத்துளள அறிக்கையொன்றில், ''இலங்கை ஜனதிபதி ஜெயவர்த்தனவும், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியும், எம்மால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நகல்திட்ட அறிக்கையின் சில அம்சங்களுக்கு உடன்பாடற்ற கருத்தை வெளியிட்டுள்ளனர். இலங்கை அரசு, தமிழர்களுக்கெதிரான தாக்கு

[17ம் பக்கம் பார்க்க]

## அமைதித் தீர்வுகாண இந்தியா உறுதி!


### டிக்ஸிற் குடியரசுதினச் செய்தி!!

(கொழும்பு)

இலங்கையின இனப்பிரச்னைசகு அமைதித்தீர்வுகாண்பதில் இந்தியா உறுதியாகவுள்ளது.

இவ்வாறு இந்தியாவில் 36வது குடியரசுத் தினத்தையொட்டி இந்தியத்தூதுவர் திரு. டிக்ஸிற் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது; மலர்ந்துள்ள புதுவருடத்தில் இலங்கையில் சமாதானம் நிலைக்குமென்பது எனது நம்பிக்கை. யுத்த நிறுத்தம் அனுஷ்டிக்கப்படுவதற்

(17-ம பக்கம் பார்க்க)



# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஹொண்டா ஜெனறேட்டர் 1500 வாட்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: சொனிக்ஸ் மினி சினிமா, யாழ். வீதி, மானிப்பாய். [C 371]

PL-4 லேத் மெசின் உடன் விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C 356]

பண்டத்தரிப்பு சந்தைக்குச் சமீபமாகச் சகல வசதிகளும் உடைய புதிய வீடும், 6½ பரப்பு வளவும் உடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். கு. நம்பிராசா, வர்த்தகர், பண்டத்தரிப்பு. [C 370]

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள், Nel Farm பிறவுண் சேவற் குஞ்சுகள் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராஜா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். C 360

அழுத்தமான ஆட்டுக்கல், அம்மி, கல்உரல் அனைத்தும் கைதேர்ந்த கலைஞரால் கடையப்பட்டது. தயாரித்து விநியோகிப்போர்: சூரியா ஸ்ரோர்ஸ், வவனியா. கிடைக்குமிடம்: சுல்தான்ஸ் எம். எம். சுல்தான்அப்துல்காதர்அன்பிறதர், கண்டிவீதி, சாவகச்சேரி. C-25

300 அடி நீளமான 2'' அலுகத்தின் பைப் விற்பனைக்குள்ளது. சிறிதளவு மட்டுமே பாவித்தது. அத்துடன் வயரிங் செய்ய உகந்த புதிய ½'' P. V. C. குழாய்கள் 23 விற்பனைக்குண்டு. C. T. அன்ரனி ராஜா, அமலிவனம் சில்வா வீதி, வட்டக்கச்சி. A 122

கட்டுடைச் சந்தியிலிருந்து நவாலி போகும் பாதையில் வீடமைப்பு திட்டத் திற்கும் கட்டுடைச் சந்திக்கும் இடையில் விலாசமான காணிதனிக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விலை பரப்பு எண்ணாயிரம் (8000/-). விளம்பரஇல: C321, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C321]

நல்ல நிலையில் குறைந்த விலையில் வீடியே டெக், தமிழ், ஆங்கிலம் வீடியோ கசட்ஸ் ரேடியோவுடன் சேர்ந்த மினி கசட் பிளேயர், ஒரேமுறையில் 100 கோழிக்குஞ்சுகளை பொறக்கூடிய இங்குப்பேட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 1, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். C 367

சில்லாலை கிழக்கு மெயின் வீதியில் உள்ள 1 பரப்பும் 1 குழியும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: பி. யோசவ், நம்; 5/6/2, அச்சுக்கூடலேன், யாழ்ப்பாணம். [C336]

## விற்பனைக்கு

மலிவு விற்பனை 6' X 3' முதிரை சாப்பாட்டு மேசை, கதிரைகள். Double Bed, குசினி மேசை, Gas Cooker மேசை, Screens, கதவு நிலைகள், முதிரைக் கதவுகள், யாவறணை கதவு, United Engineers Carpentry Workshop சாயி மர அரிவு ஆலை, 91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (C 382)

யாழ். அரசடி வீதியில் இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக ஒன்றரைப் பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீ கிருஷ்ண பவான், 171, பெரியகடை, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 24437. [C 384]

வெளிநாடு செல்பவரின் வீட்டுத்தளபாடங்கள், அல்மாரிகள், கட்டில்கள், சிறிய பெரிய மின்விசிறிகள், ஆங்கில தட்டச்சுயந்திரம், வெளிநாட்டு சூட்கேஸ் வகைகள், Pressuse Cooker, T. Shirts மற்றும் பல பொருட்களும் உடன் விற்பனைக்குன்டு. பத்மநாதன், C/o அம்பலவாணர், திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில், ஆடியபாதம் றோட், திருநெல்வேலிவடக்கு. [C378]

## தேவை

பிரபல்யமிக்க ரேடியோ சேவிஸ் ஸ்தாபனத்திற்கு தகுதிவாய்ந்த ரேடியோ டெக்னீசன் Technicians தேவை. விளம்பர இல. 381, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [A38`]

யாழ்நகரில் தொழில்புரியும் உத்தியோகத்தரும் அவரது துணைவியாருமான கௌரவமான இளம் தம்பதிக்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள்நல்ல சுற்றுடலில் சகல வசதிகளுடனும் கூடிய Annexe தேவை. தொடர்புகொள்ளவும்: விளம்பரதாரர் M 30, மே/பா dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. [A118]

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்குப் பகுதி அல்லது இதற்கு அண்மையான வேறு இடங்களில் சகல வசதிகளுடன் சிறிய வீடு அல்லது வீட்டின் ஒருபகுதி (Annex) தமிழ் கிறீஸ்தவ ஆசிரியர் பதவியில் இருந்தவருக்குத் தேவை. விபரங்களுடன்விண்ணப்பிக்கவும். விளம்பரஇல:C 323, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 323)

வாச்சர் வேலைக்கு(Watcher) ஒருவர் தேவை. வயதுக்கட்டுப்பாடில்லை, யாழ்நகருக்கு அண்மையான பகுதிகளில் வசிப்பவராக இருத்தல்வேண்டும். உடனே விண்ணப்பிக்கவும். விளம்பர இல: A 130 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். A 130

நவாலியில் இயங்கும் வியாபார ஸ்தாபனத்திற்கு பெண் லிகிதர் தேவை. விளம்பர இல. C 353, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C353)

## WANTED

Wanted a qualified Pharmacist for a leading Chemist in Jaffna residing within municipal limits. Apply with full details on or before 31st January 1986. Advt. No: C 379, C/o Eelanadu, Jaffna (C 379)

## வகுப்புகள்

Home ScienceDiploma(மனையியல் டிப்ளோமா Stenography (Shorthand Typing English) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. Montessory Diploma Teachers Training (பாலர் பயிற்சி) ஆரம்பமாகவுள்ளது. Recognised Certificates will be issued. சேரவிரும்புவோர் நேரில் வந்து காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளவும்: அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [C326]

G.S.Q (Bio) [Botany, Zoology, Chemestry) நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. G.S.Q (Maths) (Pure, Applied, Statistics, Chemistry, physics) விரைவில் ஆரம்பமாக உள்ளன. செய்முறைப்பயிற்சிகளுக்கு ஏற்ப சிறந்த முறையில் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது. சேரவிரும்புவோர் நேரில் வந்து காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளவும்: அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [C325]

## மணப்பந்தல்

யாழ்ப்பாண வேளாள கிறிஸ்ரியன் Bsc. அரசாங்க வேலைபார்க்கும் மணப்பெண்ணுக்கு 29-35 வயதுக்கிடைப்பட்ட மணமகன் தேவை மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் [C 380]

## வைத்தியம்

நாட்பட்ட வியாதிகளுக்கு விசேட சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் எம் வி. தில்லைசுந்ரன், (Registered Homoeopathy), 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C 10)

''Schizophrenia'' என்ற நோய்க்கு லாயிக்கட்டல், ஸ்ரெலஜின், ஆட்ரீன் என்ற மருந்துகளை ஆங்கில வைத்தியர்கள் சிபார்சு செய்கிறுர்கள். ஆயுள்வேத, சித்த, ஹோமியோபதி வைத்தியர்களிடமிருந்து நோயின் விபரமும், மருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது. விபரங்களுக்கு: விளம்பர இல. 316, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 316]

மூலவியாதிகள், வாதவியாதிகள், பீனிசம், எக்ஸிமா போன்ற சருமவியாதிகள், தொய்வு, கண்ரோகங்கள், நரம்புத்தளர்ச்சி, மாதவிடாய் கால உபத்திரவங்கள், குழந்தைப்பேறின்மை, குழந்தைகள் சம்பந்தமான வியாதிகளுக்கும், நீரிழிவு ரோகத்திற்கும், சித்த ஆயுர்வேத வைத்திய முறைப்படி சிகிச்சை பெறலாம். டாக்டர் மங்களாம்பிகை D. A. M. மங்களபதி வைத்தியசாலை, [பண்டாரங்குளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, அரச வீதி, நல்லூர். [2530]

## ஓராண்டு நினைவஞ்சலி

திரு. பொன்னையா குணேஸ்வரன் (கண்ணன்)

அசோக் மினிபஸ் கிளினர்



அன்னையின் மடியில்: 18 - 08 - 1966

ஆண்டவன் அடியில்: 04 - 02 - 1985

திதி: 26-01-1986

எங்கள் அன்புச்செல்வம் கண்ணா நீர் மறைந்து ஓராண்டு செல்லமுன் உம் தந்தையாரையும் அழைத்துவிட்டீர். எத்தனை வருடங்கள் சென்றாலும் உம் நினைவு எங்களைவிட்டு அகலாது கண்ணா. உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புத்தாய், சகோதரர்கள்.

கொக்குவில் கிழக்கு. [A386]

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர் பொன்னுத்துரை பூபாலசிங்கம்



ஆண்டவன் படைப்பு: 15-10-1928

அரக்கர் அழிப்பு: 06-02-1985

திதி: 26-01-1986

எங்கள் அன்புத் தெய்வமே 'அப்பா' எங்களை விட்டுப் பிரிந்து சென்று ஓராண்டு ஓடி மறைந்தாலும், எங்கள் இதயங்களில் தோன்றுகின்ற உங்கள் உருவத்திற்கு திரைபோட முடியவில்லையே 'அப்பா'. இந் நினைவு நாளில் உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்,

மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள்

44, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். C 359

## 87-ஆவது பிறந்தநாள் நினைவுதினம்

அமரர் ச. ஆ. நடராசா (ஓய்வு பெற்ற P. W. D. ஓவசியர் பொல்காவலை)



தோற்றம்-தைப்பூசம்: 26-01-1899

மறைவு-ஏகாதசி: 21-06-1968

உங்கள் சேவையை நினைவு கூருகிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் சார்பாக

ந. யோகநாதன்.

27, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி யாழ்ப்பாணம். C 383

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் டாக்டர் கந்தையா விவேகானந்தன் (முன்னாள் சித்ராபார்மஸி உரிமையாளர், கிளிநொச்சி)



மலர்வு: 16-01-1945

உதிர்வு: 26-01-1985

உத்தமனே என் மகனே என் மடியைவிட்டகன்று இறைவன் திருவடி அடைந்து இன்று ஓராண்டு பூர்த்தியாகிறது. உன் அன்னையின் உள்ளமும், உடலும் இன்னும் ஆறுது தவிக்கின்றேன். உன அன்பு மனைவியும் பிள்ளைகளும், சகோதரங்களும் மற்றும் உறவினர், நண்பர்களும் துயருற விட்டு விட்டு இறைவனிடம் சென்றுவிட்டாய். உனது ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல கிளிநொச்சி முருகனை வேண்டுகிறோம்.

தாயார், மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

'சாந்தம்ஸ்' கண்டி வீதி, கிளிநொச்சி. C 258

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### உக்கிரமான போரின் பின்

# தென்யேமன் ஜனாதிபதியாக பிரதமர் அலி அஸார் நியமிக்கப்பட்டுள்ளார்

ஏடன், ஜன. 25

தென்யேமன் பிரதம மந்திரி திரு. ஹைதர் அபூபக்கர் அலி அஸார் நேற்றுமுன்தினம் அந்நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளும் சோஷலிசக் கட்சி மத்திய கமிட்டியின் புதிய தலைவர்கள் இரண்டுவாரம் நடைபெற்ற உக்கிரமான சண்டையின்பின்னர் ஜனாதிபதி அலி நசீர் மொகமட்டைப் பதவியிலிருந்து நீக்கி அவரது கட்சி அந்தஸ்து மற்றும் அரச பதவிகளையும் நீக்கிவிட்டதாகவும், விரைவில் இவர் விசாரணைக்குட்படுத்தப்படுவார் என்றும் தெரியவருகிறது.

திரு அலி நசீர் மொகமட் தங்களை கொல்ல முயற்சிப்பதாகவும், சர்வாதிகாரத்தை அமுல்படுத்த முயல்வதாகவும் ஆளும் மார்க்ஸிட் கட்சியிலுள்ள இவரது எதிர்ப்பாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடும் சண்டையின் பின்னர் நேற்றுமுன்தினம் அங்கு வழமைபோல் அலுவல்கள் நடைபெற்றதாக தெரியவருகிறது.

இங்கு நடைபெற்ற அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் உட்பட சோசலிஷக் கட்சியின் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த சுமார் 59 அதிகாரிகள் கொல்லப்பட்டனர் என்றும் தொடர்ந்து நடந்த சண்டைகளின்போது பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [து]

# 'கோட்டை இராணுவத்தை வாபஸ் பெறுக'

## அன்னையர் முன்னணி ஜனாதிபதிக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]

''பாதுகாப்பு வலயத்தால் பொதுமக்களுக்கு இடையூறுகள் நேராது என உறுதியளிக்கப்பட்டபோதும் எத்தரப்பிலிருந்தாவது சிறிய ஒழுங்கின்மை ஏற்படினும் பெரிய ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு அதிக சாத்தியமுண்டு. யாழ்ப்பாண நகரின் மையத்தில் இத்தகைய ஒரு நிலைமை ஏற்படுத்தும் இராணுவ முகாமையமைதுள்ளமை முற்றிலும் நியாயமற்றதாகும்''

இவ்வாறு ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் அன்னையர் முன்னணி குறிப்பிட்டுள்ளது.

மேலும் இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அரசு அறிவித்த பாதுகாப்பு வலய அறிவித்தலானது போராளிகளின் தாக்குதலிலிருந்து கோட்டையையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கையென்பதை உணர்கிறோம். இப்பகுதியில் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரையிலான மாணவர்கள் கல்விகற்கும் பல பாடசாலைகளுள்ளன. யாழ். குடாநாட்டு மக்களுக்கு சேவைசெய்யும் வைத்தியசாலைகள், பஸ் நிலையம், கடைகள், சந்தைகள், தபாலகங்கள், நீதிமன்றங்கள், அலுவலகங்கள் உள்ளன. இந்த ஸ்தாபனங்களை எல்லாம் வேறு இடங்களுக்கு மாற்றுவதோ அங்கு போவதற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதோ சாத்தியமானதல்ல.

அன்றாட அலுவல்களைக்கூட பயத்துக்கும், மரணத்துக்கும் மத்தியில் செய்ய வேண்டியுள்ளது. எனவே யாழ்ப்பாணத்து டச்சுக் கோட்டையிலிருந்து இராணுவத்தை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், எல்லா இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.'' [ஐ]

# இலங்கைத் தமிழர் நிதி ரூ. 18 லட்சம்

[சென்னை]

இலங்கைத் தமிழர் நல்வாழ்வு நிதிக்காக தஞ்சாவூர் மாவட்டத்தில் பதினெட்டு லட்சம் ரூபாவுக்குமேல் வசூல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [து]

### ''பாதுகாப்பு வலயம்:

# சட்டத்தை வாபஸ்பெற்று மக்கள் அச்சத்தை நீக்குக''

## திருநெல்வேலிப் பிரஜகள் குழு ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாணம் கோட்டை ராணுவ முகாமில் நிலைகொண்டிருக்கும் படையினரின் கடந்தகால செயல்கள் மக்களைப் பாதுகாப்பற்ற நிலைக்கு உள்ளாக்கியிருக்கையில், இம்முகாமை மேலும் பலப்படுத்தலும், படையினரைக் குவிப்பதும், தங்கள் உயிருக்கு மேலும் ஆபத்தான நிலைக்கு ஆளாக்கியிருப்பதாகவே யாழ்ப்பாண மக்கள் கருதுகிறார்கள். தங்களைநோக்கி ஒரு துப்பாக்கி குறிவைக்கப்பட்டிருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள்.''

இவ்வாறு திருநெல்வேலிப் பிரஜைகள் குழுவினரால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மசஜரில் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது குழுவின் தலைவர் திரு. ராஜசுந்தரத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இம்மகஜரில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ அதிகாரிகள் சோட்டை இராணுவ முகாமைச் சுற்றி 1000 மீற்றர் பாதுகாப்பு வலயம் ஒன்றைப் பிரகடனப்படுத்தியுள்ளனர். இந்த வலயம் யாழ் மாவட்டத்தின் முதுகெலும்பையே உள்ளடக்கியுள்ளதென்பது தெளிவு. ஏனெனில், பிரதான அரசாங்க அலுவலகங்கள், மாநகரசபை அலுவலகங்கள், வங்கிகள், மொத்த-சில்லறை வியாபார நிறுவனங்களுடன் பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றையும் இந்த வலயம் உள்ளடக்கியுள்ளது. ஆகையால் இவ்வலயம் நகரின் கேந்திரஸ்தானம் மட்டுமன்றி பெருந்தொகை மக்கள் உலவும் இடமாகவும் உள்ளது.

''கடந்தகால அனுபவங்கள் கோட்டையில் முகாமிட்டிருக்கும் படையினர் பொதுமக்கள் மீதும், அரசாங்கக் கட்டடங்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர் என்பதை எமக்கு தெளிவாகக் காட்டுகிறது. யாழ். பொது நூலகம், வீரசிங்கம் மண்டபம், நகரமண்டபம், கூட்டுறவு ஸ்தாபனம், பெரியகடை ஆகியவை இதற்கு உதாரணங்களாகும்

அத்துடன் தற்போது நடைமுறையிலிருக்கும் அவசரகாலப் பிரமாணங்களின் கீழ் தடைசெய்யப்பட்ட பிரதேசத்தில் நடமாடும் எவரும் அவர் ஒரு பயங்கரவாதி அல்லது பயங்கரவாதிகளுடன் தொடர்புள்ளவர் எனப் படையினரால் சந்தேகிக்கப்படுமிடத்து கொல்லப்பட்டு அவருடைய உடல் அப்புறப்படுத்தப்படலாம். இதுபோன்ற சம்பவங்கள் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் மட்டுமன்றி மாவட்டத்தின் ஏனைய இடங்களிலும் நடந்துள்ளன. இந்நிலையில் கேந்திரஸ்தானத்தில் இவ்வாறு பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புக்காகப் பாதுகாப்பு வலயம்பிரகடனம் செய்துள்ளதால் பாதுகாப்புப் படையினருக்கு இப் பகுதியில் காரணமின்றி எவரையும் கொல்லவோ, துன்புறுத்தவோ கைதுசெய்யவோ அல்லது சடலங்களை அப்புறப்படுத்தவோ அனுமதி வழங்கப்பட்டுள்ளது இச் செயல் தங்களின் உயிருக்கும் உடமைக்கும் நேரடியான ஓர் அச்சுறுத்தல் என்றே மக்கள் உணர்கிறார்கள். மேலும் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள மக்கள் பாதிக்கப்படலாம் என அரசாங்கம் விடுத்துள்ள எச்சரிக்கை மக்களை மேலும் பீதியடையச் செய்துள்ளது.

''இந் நிலையில் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்பட வேண்டுமானால் இம் முகாம் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

''கோட்டை முகாமைச் சுற்றியுள்ள பாரிய மரங்கள் எல்லாம் அழிக்கப்படுகின்றன. சுமார் 300 ஆண்டு பழமை வாய்ந்த டச்சு தேவாலயம் உட்படப் பல கட்டடங்கள் அழிக்கப்படவுள்ளன. குருநகரிலும் இராணுவம் குடியிருந்தபோது பல கட்டடங்கள் தரை மட்டமாக்கப்பட்டன. ஆயினும் பின்னர் அம் முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டது.

''இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என அரசு ஒருபுறம் உறுதியளிக்கும் அதே நேரத்தில் மறுபுறம் ஈடுசெய்ய முடியாத இழப்புக்களை ஏற்படுத்தவல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

''முகாமிலிருந்து கண்மூடித்தனமாகச் சுடப்படுவதனால் இங்குள்ள மக்கள் உளரீதியாக பாதிப்படைந்துள்ளனர்.

''மேற்கூறிய காரணங்களை முன்னிட்டு நகரின் கேந்திரஸ்தானத்தில் அமைந்திருக்கும் இம் முகாமைச் சுற்றிப்பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெற்றும், கோட்டைச் சுற்றுப்புறத்தைப் பழையபடி பொதுமக்கள் பாவனைக்கு உபயோகப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.''

பல்வேறு ஸ்தாபனங்கள், தொழிற்சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் அங்கத்தவர்கள் சுமார் 100 பேர் இம் மகஜரில் கையொப்பமிட்டுள்ளனர்.

# அணு குண்டு சோதனை ராஜீவுக்கு கோபச்சேவ் கடிதம்

புதுடில்லி ஜன: 25

அணு குண்டு வெடிப்புச் சோதனைகள் மீதான தடைவிதிப்பை கால வரையறையின்றி நீடிக்க இயலாது என்று சோவியத் தலைவர் திரு. மைக்கல் கோபச்சேவ் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அணு குண்டு வெடிப்புச் சோதனைகள் மீது முழுமையான சர்வதேசத்தடைவிதிப்பைக் கொண்டு வரமுடியுமென்றும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (து)

# சாரணர் மாநாட்டில் கலந்து கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெற்று வந்த உலக இளைஞர் சாரணர் மாநாடு இன்றுடன் முடிவடைகின்றது.

கடந்த 24 ம் திகதி ஆரம்பமான இம் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து செ. தேவறஞ்சன், இ. இராஜ்குமார் ஆகியோர் சென்றனர்.

# மூதூரில் ஊர்காவல் படையினர் அட்டகாசம்

[மூதூர்]

மூதூர்ப்பகுதியில ஊர்காவல்படையினரின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

கொள்ளி விறகுக் கட்டுகள் விற்று வாழ்க்கை நடாத்தும் முஸ்லிம் மக்கள்தங்கள் தொழிலைச் செய்ய முடியாதளவுக்கு ஊர்காவல் படையினர் தொல்லை கொடுக்கிறார்களாம்.

தலா 5 ரூபாவிற் விலையாகும் கொள்ளிவிறகுக்கட்டுகளை ஒரு ரூபாவீதம் கட்டாயப்படுத்தி ஊர்காவல்படையினர் வாங்கி தாங்கள் 5 ரூபாவுக்கு விற்றுவிடுகிறார்கள் என்றும் இதுசம்பந்தமாக முஸ்லிம் மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# சவூதியிலிருந்து நாடு திரும்பிய யாழ் வாலிபருக்கு சிறை!

[வவனியா]

சவூதியிலிருந்து நாடு திரும்பிய வடபகுதி வாலிபர் ஒருமாதச் சிறையின் பின்னர் வீடு திரும்பினர்.

சவூதியிலிருந்து ஆசையுடன் அந்த வாலிபர் கொண்டுவந்த பொருள்கள் கட்டுநாயக்காவில் பறிமுதல் செய்யப்பட்டன. கோப்பாயைச் சேர்ந்த இந்த வாலிபர் கட்டுநாயக்காவில் வந்து இறங்கியதும் கைதுசெய்யப்பட்டு ஒருமாதத்தின் பின் வீடுசெல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# மூதூர் அகதிமுகாம்களுக்கு நிவாரண உதவி இல்லை

[மூதூர்]

மூதூரிலுள்ள கட்டைபறிச்சான், மணையூர், சம்பூர், பள்ளிக்குடியிருப்பு ஆகிய இடங்களிலுள்ள அகதிகள் முகாம்களுக்கு கடந்த அக்டோபர் மாதத்துக்குப் பின்னர் இதுவரை எதுவித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அகதிகள் இலை, குழை வகைகளை உண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனராம்.

அப்பகுதி அதிகாரி ஒருவர் அகதிகளுக்கான நிவாரண உதவிகள் வழங்குவதில் அதிக அக்கறை எடுப்பதில்லை என்று உயரதிகாரிகளுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது

குறிப்பிட்ட அதிகாரியின் தந்தை, அனுராதபுரத்தில் இடம்பெற்ற பொதுசனத் தாக்குதலின்போது பலியானதைத் தொடர்ந்து அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதில அவ்வதிகாரி பாரபட்சம் காட்டுவதாகக் கூறப்படுகிறது. [மா]

# சித்தமருத்துவ புதியமாணவர் வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைக்கு புதிதாக அனுமதி பெற்றுள்ள புதிய மாணவர்களை வரவேற்கும் வைபவம் நாளைமறுதினம் 27ம் திகதி காலை கைதடி சித்த மருத்துவத்துறையில் நடைபெறும்.

இத்துறையில் இரண்டாம் வருடத்தில் பயிலும் மாணவர்களும், மூன்றும் வருடமாணவர்களும் இவ்வைபவத்தினை ஒழுங்கு செய்துள்ளார்கள். [நா]

# இறந்தவர்களின் மனைவிமார் விசாரணைக்குழுவிடம் புகார்


[யாழ்ப்பாணம்]

குரும்பசிட்டியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா உத்தியோகத்தரான வ. குமாரவேலு (69 வயது) து சிவகுமார் [30 வயது] ஆகிய இருவரின் மனைவிமார் நேற்று யாழ். கோட்டை இராணுவ முகாமிலுள்ளவிசாரணைக்குழுவிடம் புகார் செய்துள்ளனர்.

யாழ், செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம் இவ்விசாரணைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். மயிலிட்டி தெற்குப் பிரஜைகள் செயலாளர் திரு. வி. சிவசுப்பிரமணியம் இராணுவ விசாரணைக்குழு முன் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

கடந்த 17-ம் திகதி காலை பலாலி இராணுவமுகாமிலிருந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்ததில் குரும்பசிட்டி, ஏழாலைதெற்கைச்சேர்ந்த 3 வயோதிபர்களும், ஒரு இளம் குடும்பஸ்தரும் ஒரு சிறுவனும் பலியானதும் 6 பேர் படுகாயமுற்றதும் தெரிந்ததே. [மா]

# இந்தியப் பாராளுமன்றம்: அதன் அமைப்பும் அழகும்



**ஆசியாவின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் 36வது குடியரசு தினம் இன்றாகும். இந்திய ஜனநாயக அமைப்பின் பல்வேறு மாநிலங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும்வகையில் உருவாக்கப்பட்டுள்ள பாராளுமன்றக் கட்டடத்தின் அமைப்பையும் அழகையும் இக்கட்டுரை விளக்குகின்றது**

உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா என்பதை நாம் எல்லோரும் நன்கறிவோம். ஆனால் அந்த ஜனநாயக நாட்டின் அரணாகத் திகழும் பாராளுமன்றக் கட்டடத்தைப்பற்றியும் அதன் அமைப்பைப்பற்றியும், தோற்றம்பற்றியும் நம்மில் எத்தனை பேர்தான் அறிந்துவைத்திருக்கிறோம். இந்தியப் பாராளுமன்றத்தைப்பற்றி வாசகர்களுக்குச் சில பயனுள்ள தகவல்களைத் தரும்விதமாக இந்தக் கட்டுரை வரையப்பட்டிருக்கிறது.

சேர் எட்வின் லுட்யென்ஸ், சேர் ஹேர்பர்ட் பேக்கர்; இவர்கள் இருவரும் பிரிட்டிஷ் கட்டட நிபுணர்கள். இந்திய பாராளுமன்றக் கட்டடத்தை வடிவமைப்புச் செய்த சிற்பிகளே இவர்கள். இந்த மாபெரும் கட்டடம் அன்று வடிவமைப்புச் செய்யப்பட்டபோது, எதிர்காலத்தில் இது உலகின் ஜனநாயக சரித்திரத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்குமென்று அவர்கள் அன்று சிறிதும் நினைத்திருக்கவில்லை.

இந்திய பாராளுமன்றக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் 1921ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ம் திகதி நாட்டப்பட்டது. கொனாட் கோமகன் இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இவரது ஞாபகார்த்தமாகப் பாராளுமன்றத்தை அடுத்துள்ள பாதை ஒன்றுக்கு இவரது பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டடத்தைக் கட்டிமுடிப்பதற்கு ஆறு வருடகாலம் பிடித்தது. அழகிய வட்டவடிவமான அமைப்பைக்கொண்ட இந்தக் கட்டடம், 1927ம் ஆண்டு ஜனவரி மாதம் 18ம் திகதி, அப்போது இந்தியாவின் மகா தேசாதிபதியாக இருந்த ஐவின் பிரபுவால் திறந்துவைக்கப்பட்டது.

இந்தக் கட்டடம் 171 மீட்டர் (560 அடி) விட்டத்தைக் கொண்டது. இதன் சுற்றளவு மூன்றில் ஒரு மைல். ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கட்டடம் வியாபித்திருக்கிறது.

## பெஞ்சமின் ராஜரத்தினம்

அன்று இந்தக் கட்டடத்தை அமைப்பதற்கு 83 லட்சம் ரூபா செலவாகியது. இன்று அதன் பெறுமதி ஐந்து கோடி ரூபா என மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்தியாவின் சரித்திர சம்பவங்கள், இந்தியா அயல் நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகள்பற்றிய சித்திரங்கள் கட்டடத்தின் கீழ்ப்பகுதியை அலங்கரிக்கின்றன. இதன் வடிவமைப்பிற்கு பிரிட்டிஷ் கட்டடவியலாளர்கள் பொறுப்பாகவிருந்தாலும் இந்திய கலையும், கலாசாரமும் ஒரு நாட்டின் பாராளுமன்றக் கட்டடத்திற்கு இதைவிடவும் அருமையான விளக்கம் வேறு தேவையா?

இந்தப் பாராளுமன்றக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்குத் தேவைப்பட்ட பொருட்களுள் கறுப்புச் சலவைக்கல் பீஹாரிலுள்ள காயாவிலிருந்தும், வெள்ளைச் சலவைக்கல் ராஜஸ்தானிலிருந்தும், தக்கு மரங்களும், ஏனைய மரங்களும் பர்மாவிலிருந்தும், மற்றொரு விசேஷ மரவகை தமிழ்நாட்டிலிருந்தும் பெறப்பட்டிருக்கின்றன.

பாதிக்கப்படாமல் அதற்கு ஏற்றவிதமாகக் கட்டடம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். இந்தக் கட்டடத்திற்குப் பன்னிரண்டு பிரதான வாயில்கள் உள்ளன. இவற்றில் ஐந்து வாயில்கள் மனதைக் கவரும் விதத்தில் மிகவும் ரம்மியமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் பன்னிரண்டு வாயில்களிலும் முதலாவது இலக்கத்தைக் கொண்ட வாயிலே எப்போதும் சுறுசுறுப்பாகவிருக்கும். பாராளுமன்றக் கூட்டத் தொடர்கள்நடைபெறும் நாட்களிலும் சரி, நடைபெறாத நாட்களிலும் சரி இந்த வாயில் சுறுசுறுப்பாகவே இருக்கும். இந்த வாயிலிலிருந்துதான் பாராளுமன்றத்திற்கு வரும் வாகனங்களை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்தும் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்திய பாராளுமன்றத்தின் வட்டவடிவமான கட்டட அமைப்புக்கு ஐவின் பிரபு அருமையான விளக்கமொன்றைத் தந்துள்ளார்.

''இந்தக் கட்டடத்தின் வட்டவடிவமான அமைப்பு ஒற்றுமைக்கும் மேலான ஒன்றை எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் இந்த அமைப்பு நிரந்தரத்தன்மையின் அடையாளச் சின்னமாகவும் இருக்கிறது''.

பாராளுமன்றத்தின் நடுப்பகுதியில் மத்தியகூடம் ஒன்று உள்ளது. பாராளுமன்ற அங்கத்தவர்கள் இந்தக் கூடத்தில் நிம்மதியாக அமர்ந்து ஓய்வெடுத்துக் கொள்வதுண்டு. சமயத்தில் இந்தக் கூடத்தில் அவர்கள் ஒன்றுகூடிப் பொதுப் பிரச்னைகள் குறித்தும் விவாதிப்பார்கள். இந்தக் கூடத்தில் வந்துசேரும் எம். பி க்களுக்குத் தேநீர், சிற்றுண்டி, மற்றும் இனிப்பு வகைகளை வழங்குவதற்காக அந்தக் கூடத்தையடுத்து விசேஷ சிற்றுண்டி கல்லாக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கூடத்திலிருந்து ராஜ்யசபைக்கும், லோகசபைக்கும் மற்றும் வாசிகசாலைக் கூடத்துக்கும் போவதற்கான தனி வாயில் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கூடம் இந்திய சரித்திரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்தியா 1947ம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றபோது இந்தக் கூடத்தில்வைத்துத்தான் ஆட்சிப் பொறுப்பு பிரிட்டிஷ் ஆட்சியாளரிடமிருந்து இந்திய மக்கள்வசம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் கூடத்தில் மகாத்மா காந்தியின் உருவப்படம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. தாதாபாய் நௌரோஜி, பாலகங்காதர திலகர் ஆகியோரின் படங்களும் மகாத்மாவின் படத்துக்கு அருகே வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கூடத்தின் சுவர்களிலும் வளைவுகளிலும் இந்தியாவின் பன்னிரண்டு மாநிலங்களின் பன்னிரண்டு இலச்சினைகளும் கண்ணைக் கவரும்விதத்தில் அலங்காரமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா பிளவுபடாமல் ஒரே நாடாக உறுதியுடன் அமைந்திருக்கிறதென்பதை எடுத்துக்காட்டவே இந்த இலச்சினைகள் அங்கே அவ்வாறு வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ரவீந்திரநாத் தாகூர், மதன்மோகன் மாளவியா, லாலா லஜபதிராய், மோதிலால் நேரு, சித்தரஞ்சன்தாஸ், வல்லபாய் பட்

[19ம் பக்கம் பார்க்க]

# இத்தகைய தலைவரை என்று காண்போம்!

என்ன செய்வோம் எவர்க்குரைப்போம், எவ்வாறு தேறுவோம் என்ற கவலையே மறைந்த நீதியரசர் சிவசுப்பிரமணியம் ஐயாவை நினைக்கும்போது எழுகின்றது.

அன்பையும் அறிவையும் அடக்கத்தையும் உண்மையையும் உறுதிப்பாட்டையும் உலகத்துக்கு விளங்கவைக்கும் சிறப்பு, பண்புடைமைக்கு உண்டு. இத்தகைய பண்புடையோர்களாலேயே உலகம் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

எங்கள் மதிப்புக்குரிய தலைவர் சிவசுப்பிரமணியம் ஐயா இவர்கள் வரிசையில் இடம் பெற்ற ஒரு பெரியார். இவர்களுடைய மறைவினால் எமதுள்ளம் பெரும் பாதிப்படைந்துள்ளது. நிதானமும் துணிவும், அறிவும் பொறையும் ஒருங்கே அமைந்தாலன்றித் தலைமைப்பீடத்தை தமதாக்கிக்கொள்ள முடியாது.

இந்த இடத்துக்கு நாம் எவரையும் இட்டுநிரப்ப முடியாது. அவருடைய கலகலப்பான சிரிப்பில் உள்ளத்தின் உண்மையொளியையும், புன்முறுவல் தவழும் முகத்திலே தூய இதயத்தையும், நல்ல வார்த்தைதனிலே கருணைச் சிறப்பையும் காணலாம்.

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் இணையற்ற தலைவராக பல்லாண்டுகளாகப் பணிபுரிந்த பெருந்தகையை நாம் இன்று இழந்து தவிக்கிறோம்.

ஐயா அவர்களின் அன்றலர்ந்த செந்தாமரைபோன்ற வதனமும், அவர்களின் தூய வாழ்வும் எம் நினைவில் இடம் பெற்றுக்கொண்டேயிருக்குமென்பது நிச்சயம்.

செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி.

## பொன்னாலையான் பஜனை நூல் இன்று வெளியீடு

'வாருங்கள் வாருங்கள் எல்லோரும் வாருங்கள் எங்கள் வரதன் பாதம் பணிந்து அவனைப்பாட வாருங்கள்' என்று அழைக்கின்றது ஒரு கவிக்குயில். 'நாராயண தாசன்' என்னும் சிவகுருநாதனே அந்தக் கவிக்குயில். பொய்மையாளரைப் பாடாதே எந்தைப் புகலூர்ப் பாடுமின் புலவீர்காள்! என்று அறை கூவிய நாயன்மாரின் வழி நின்று, பழம்பெரும் பதியாம் பொன்னாலையிலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தேவி பூமிதேவி சமேத ஸ்ரீ வரதராஜப் பெருமாள் மீது பல நூறு தமிழ்ப்பாடல்களைப் பக்தி பரவசத்தோடு இனிய தமிழில் புனைந்து நாராயணன் திருவடிகளில் சூட்டியுள்ளார்கள். பக்திச்சுவை சொட்டச் சொட்டப்பாடிய பைந்தமிழ்ப் பாடல்கள் கேட்போர் மனதை உருகவைக்கும் தன்மையுடையது மட்டும் அன்றி அந்தப் பாடல் வழி இறைவன் புகழை நாம் பாடவும் அவனது திருவருளைப் பெறவும் வாய்ப்பை

[19ம் பக்கம் பார்க்க)

# சேர். பொன். இராமநாதன் உருவாக்கித்தந்த பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில்

இலங்கையில் முழுதுவதும் கற்றனிக் கோயிலாக அமைந்த தனிப்பெருமை வாய்ந்த சிவாலயம் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் கொழும்பு மாநகரத்தில், கொச்சிக்கடையில் உள்ள இவ்வாலயம் கட்டிட வேலைப்பாடு இராசகோபுரம், கல்லிற் பொழிந்த சிற்பங்கள், சிற்பம் நிறைந்த கருங்கல்லாலான தூண்கள் உள்ள கோயிலாக விளங்குகின்றது. கோயிலின் நடுவில் சிவலிங்கம் அமைந்துள்ள மூலஸ்தானம் கருங்கல்லாற் கட்டப்பட்டு இருக்கிறது. மேலேயும் கருங்கற் கட்டிடம், இந்தக் கோயிலிலே உட்பிரகாரத்துக்கு மேலே கருங்கற்தளம் போடப்பட்டுள்ளது.

இலங்கையின் தலைநகரில் அமைந்த இந்தக் கோயிலைக் கற்றளியாக ஆக்கிய பெருமை நமது நாட்டுப் பெருமக்களில் ஒருவரான சேர் பொன் இராமநாதன் அவர்களையே சாரும், தென்னிந்தியாவில் பழைய மன்னர்களும் நாயக்க மன்னர்களும் கட்டிய கற்கோயில்களையும். பொலனறுவையில் காணப்படும் சோழக் கற்கோயிலையும் கண்ணுற்றதன் விளைவாக கற்கோயிலெழுப்பும் பேரார்வம் சேர். பொன். இராமநாதன் அவர்களுக்கு எழுந்தது. அரசர்கள் பல தலைமுறைகளில் கட்டிய கோயில்களைப் போற்கட்ட நினைத்தது இத்திருப்பணியில் அன்னாரது ஆர்வத்தையும், அவரது சைவப்பற்றினையும் காட்டுவதாகும். 1907ஆம் ஆண்டு தொடங்கிய கருங்கல் வேலை 1912ம்ஆண்டில் நிறைவு பெற்றது. சிற்பிகள் செய்யும் வேலை முழுவதையும் தானே நின்று மேற்பார்வை செய்தார் என்றும், சிற்பிகள் பணி சிவப்பணி என மனதிற் பதியும்படி உள்ளத்தை உருக்கும் தேவாரங்களை எடுத்துவிளக்குவார் என்றும் கூறுவர். இப்பெருமுயற்சிக்கு உறுதுணையாக நின்று உதவியவர் தம்பையாக் குருக்கள். இவர் பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் தந்தையாவர்.

### பழைய கோயில்

கற்றளியாவதற்கு முன்பும் இவ்விடத்தில்சிவாலயம் ஒன்று இருந்தது. இந்தக் கோயிலை

## வே. ந. சிவராசா

முதன் முதலில் கட்டியவர் சேர். பொன். இராமநாதன் அவர்களுடையதந்தையாரான பொன்னம்பல முதலியாராவார். சிறந்த சைவரும், பெரும் செல்வந்தருமாகத் திகழ்ந்த பொன்னம்பல முதலியார் 1857ஆம் ஆண்டில் கும்பாபிஷேகத்தையும் நடத்தி வைத்தார். தமது இல்லத்தில் தான் நித்தியம் பூசித்து வந்த பாலயந்திரத்தை சிவகாமி அம்மன் சந்நிதியில் விக்கிரகத்தின்கீழ் பிரதிட்டை செய்வித்தனர் என்பர். மூலத்தானத்தில் மகாலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டது. பொன்னம்பலவாணேஸ்வரர் சிவகாமி அம்மன் இருவரும் வீற்றிருக்கும் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் எழுந்தது. பொன்னம்பலமுதலியார் அவர்களின் சேவையினைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்று இக்கோயிலில் உண்டு.

### ஆலய அமைப்பு

ஆறுகாலப் பூசைச் சிறப்புடைய இந்த ஆலயத்தின் ஆதினமூலத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கிறது. அம்பாள் சந்நிதானம் தெற்கு வாயிலாக அமைந்திருக்கிறது. அடுத்த சிவகாமிசுந்தரி சமேத நடராஜப் பெருமாள் சந்நிதானமும், சுற்றுப் பிரகாரத்தில் விநாயகர் மகாவிஷ்ணு, பஞ்சலிங்கம், முத்துக்குமாரசுவாமி, ஷண்முகர், சண்டேசுரர், நவக்கிரகம், சனீஸ்வரர், சூரியர், சந்திரர் ஆகியோருக்குத்தனித்தனி சந்நிதானங்களும் அமைக்கப்பெற்றுள்ளன.

பசுவொன்று நேராகச் சிவலிங்கத்தின் மேல் பால்சொரிந்து பூசிக்கும் காட்சி, கண்ணப்பர் கண் இடர்ந்து சிவனுக்கு அப்பும் காட்சி, சிவ நடனம் கண்ட வியாக்கிரபாதர் பதஞ்சலி போன்ற இன்னும் பல சிற்பங்கள் இக்கோயில் கற்றூண்களிலும் கற்சுவர்களிலும் கண்டுகளிக்க வேண்டியன.

### நித்தியாக்கினி

இந்தக் கோயிலில் உள்ள இன்னொரு சிறப்பு அர்த்த மண்டபத்தில் காணப்படும் நித்தியாக்கினிக் குண்டம் சிம்ம்பரத்தைப் பற்றிப் பாடுத

[19-ம் பக்கம் பார்க்க]

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

## சாத்வீகப்போருக்கு அரசியல் கபடம் எட்டாம்பொருத்தம்

''கடவுளிடம் முழுநம்பிக்கை இல்லாமல் எத்தகைய பெரும் போராட்டத்தையும் வெற்றியுடன் நடத்தமுடியாது. எல்லா நேரங்களிலும் நமக்கு வழிகாட்டியாக இருந்தவர் அவர் ஒருவரே'' என்றார் மகாத்மாகாந்தி.

இதனை நாம் உணரும் காலம் வந்திருக்கிறது.

பிரஜா உரிமைப் போராட்டம் வெற்றியில் முடிந்தது. பிரார்த்தனைத் திட்டம் கைவிடப்பட்டதென்ற ஒரு குதூகலம், ஒருவித அரசியல் கபடத்தைக் கொண்டது போல் தெரிகிறது.

பிரார்த்தனை ஒருவித பலாத்கார ஆயுதமா? பலாத்காரப் போரில் கபடமில்லை, ஆண்மை உண்டு.

பிரார்த்தனை ஆன்மீகப் பலத்தை வளர்க்கும் வழி; அது ஒருகுறிப்பிட்ட நோக்குடன் சமூக அடிப்படையில் திட்டமிடப்பட்டாலும் அது எவரையும் அச்சுறுத்தும் செயல் அல்ல. எனவே கோரிக்கை நிறைவேறினாலும் பிரார்த்தனைத் திட்டம் அதற்கேற்றபடி மாற்றியமைக்கப்பட்டு தொடர்ந்திருக்க வேண்டும்.

ஆண்டவனுக்கு நன்றி சொல்ல வேண்டாமா?

சாத்வீக எதிர்ப்பு மிகப்புனிதமான மிகச் சிறந்த படிப்பு. ஆத்ம சக்திக்குப் பலாத்காரம் முற்றிலும் விரோதமானது.

ஆனால் சாத்வீகமென்ற போர்வையில் வஞ்சனையும் கோழைத்தனமும் இடம்பெறுமானால், மரணத்தையே தம் மெல்லணையாகக் கொண்டு நடத்தப்படும் ஆயுதப் போராட்டம் அவ்வித சாத்வீகப் போராட்டத்திலும் சாலச்சிறந்தது.

இந்திய சாத்வீகப் போராட்டத்தில் தமிழர்களின் பங்கை மகாத்மாகாந்தி வியந்து கூறியிருப்பதோடு, அவர்களின் இனிய மொழியையும் கற்க முயன்றாரென்பதை நாம் இன்று நினைவிற்கொள்வது நல்லது.

---

**கண்காணிப்புக் குழு ராஜினாமா பேராசிரியர் கா. சிவத்தம்பி விளக்கம்.**

# "வல்வைக் கெடுபிடிகளே அரசியல் நெருக்கடிக்கு முகங்கொடுக்கத்தூண்டின!"

**- சந்திப்பு: பா. அனந்தகிருஷ்ணன் -**

''இலங்கையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தமும், அதனைக் கண்காணிக்கஅமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவும் இலங்கை — இந்திய உயர் ராஜதந்திர வட்டாரங்களினதும், மறுபுறம் ஈ. தே. வி. மு. (E. N. L. F.) உயர் மட்டத்திலும் ஆலோசிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகளாகும்.

ஆனால் மேற்குறிப்பிட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் நானும் ஓர் அங்கத்தவனாகச் சேர்க்கப்பட்டிருப்பதைக் காலையில் நான் செவிமடுக்கும் தமிழக 'மாநில செய்தி'யின் அறிவிப்பொன்றிலேயே கேட்டுத் தெரிந்து கொண்டேன்'' என்கிறார் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் உறுப்பினரும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவருமான பேராசிரியர் கா. சிவத்தம்பி.

''நீங்கள் அரசியலை நன்கு அறிந்த ஒருவர்; ஆயினும் அரசியல் வாதியல்ல தமிழ் இலக்கியத்துறை, கல்வித் துறையில் ஆழமாகப் பணியாற்றுவதே உங்கள் கடமையாக இருந்து வந்தது. ஆயினும் இன்றைய அரசியல் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நீங்கள் முன் வந்ததன் முக்கிய காரணம் யாது'' என்றேன்.

### முற்றிலும் எதிர்பாராதது

அது ஒரு முற்றிலும் எதிர்பாராத சமாச்சாரம் என்றபடி தமது பேட்டியை ஆரம்பிக்கிறார் பேராசிரியர்.

''1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் லண்டன் கேம்பிறிட்ஜ் (Cambridge) பல்கலைக் கழகத்தில் ஓர் ஆய்வாளனாகவும், சிரேஷ்ட கௌரவ விரிவுரையாளனாகவும் [Senior Visiting Lecturer] கடமையாற்றினேன்.

''அப்போது இலங்கையில் வல்வெட்டித்துறையில்- எனது சொந்த ஊரில் மிகுந்த நெருக்கடிநிலை ஏற்பட்டிருந்தது. பொதுமக்களுக்கு உயிர், உடைமைச் சேதங்கள் பலமாக இருந்தன.

இந்நிலையில் நான் லண்டனில் இருந்தபோது எனது ஊரைச் சேர்ந்தவர்கள் பிரஜைகள் குழுவொன்றை ஆரம்பித்தனர். அதற்கு என்னையே தலைவராகவும் நியமித்தனர். இப்புதிய பொறுப்பை அவர்கள் தாமாகவே எவ்வித முன்னறிவித்தலுமின்றி என்னிடம் ஒப்படைத்திருந்தனர்.

நாடு திரும்பிய பின்னரே இதுகுறித்து அறிந்து கொண்டேன். இப்புதிய பொறுப்பிலிருந்து எந்த ஒரு மனிதாபிமானம்கொண்டவனும்விலகிக் கொள்ள முடியாது; ஏனெனில் வல்வைப்பகுதிக் கெடுபிடிகள் மிருகத்தனமானவை யாகவும், அவற்றினால் ஏற்பட்ட இழப்புகள் உடன் கவனத்துக்கெடுக்கப்பட வேண்டியனவாகவுமிருந்தன. இந்த இக்கட்டான நிலையிலேயே எனது புதிய பணியை என்னால் கூடுமான வரை எனது மக்களுக்காக முழுமனதுடன் மேற்கொள்ள முடிவு செய்தேன்.

இது ஓர் அரசியல் பிரவேசமோ, அல்லது நடவடிக்கையோ அல்ல என்பதையும், முற்றிலும் மக்கள் பாதுகாப்புக் கருதிய தென்பதையும் அன்று முதல் இன்றுவரை வலியுறுத்தியுள்ளேன்.''

''இவ்வாறு வல்வைப் பிரஜைகள்குழு ஆரம்பிக்கப்பட்டதும், இக்குழுவை யாழ்ப்பாணம் மற்றும் வடபகுதியின் ஏனைய பிரஜைகள் குழுக்களுடன் ஓர் இணைப்புக் குழுவாகச் சேர்த்துக் கொண்டேன்.

1984-ம் ஆண்டு பிற்பகுதி, 1985-ம் ஆண்டு ஆரம்பப் பகுதிகளில் வடக்கில் வன்முறைகள் விரிவுபடத் தொடங்கியதை யடுத்து இந்த இணைப்புக்குழுவின் பணியும் காத்திரமடைய வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டது.

யாழ்.பிரஜைகள் இணைப்புக்குழு வடக்கில் பாதிக்கப்பட்ட அனைத்துப்பகுதிகளுடனும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தது.

### போர் நிறுத்தம்

இந்நிலையிலேயே போர் நிறுத்தம் பற்றி கடந்த ஜூனில் அறிவிக்கப்பட்டு, கண்காணிப்புக் குழுவும் கடந்த ஆண்டு அக்டோபரில் அமைக்கப்பட்டது.

''இப்போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் நீங்கள் எந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டீர்கள் என்ற கேள்விக்கு பேராசிரியர் அளித்த விளக்கம்: ''இலங்கை இந்திய ராஜதந்திர வட்டாரங்களிலும், மறுபுறம் ஈ. தே. வி. மு உயர் மட்டத்திலுமே இக்குழுபற்றி முடிவெடுக்கப்பட்டது.

ஆனால் இக்குழுவில் நானும் ஒருவன் என்பதை காலையில் நான் செவிமடுக்கும் தமிழக மாநிலச் செய்தியின் அறிவிப்பு ஒன்றே எனக்குத் தெரியப்படுத்தியது.

இதனைத்தொடர்ந்து எனக்கு உத்தியோக பூர்வமான அறிவிப்பு இலங்கை அரசினால் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக வழங்கப்பட்டிருந்தது. இக்குழுவைப்பற்றியோ, இதில் அங்கத்துவம் பெற வேண்டுமென்றோ நான் யோசித்திருக்கவில்லை.

ஈ. தே. வி. மு. தான் சிபார்சு செய்தவர்களில் என்னையும் ஒருவராகச் சேர்த்திருந்தது. ஆனால் அம்முன்னணியுடன் எந்தவித தொடர்பையும் நான் கொண்டிருக்கவில்லை. ஆயினும் வல்வைச் சம்பவங்கள் தொடர்பாகவும், யாழ். பிரஜைகள் இணைப்புக்குழுவிலும் நான் வகித்த பங்கினைக் கருத்தில் கொண்டு ஈ. தே. வி மு. என்னைச் சிபார்சு செய்திருக்கலாமென்று நம்புகிறேன்'' என்றார்.

### சமாதானத் தொண்டு

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு குறித்து எத்தகைய கண்ணோட்டத்தை நீங்கள் கொண்டிருந்தீர்கள்? என்றபோது, ''போர் நிறுத்தம் என்ற அறிவிப்புக் கிடைத்ததும் ஏதாவது புதிய மாற்றம் நிகழலாமென்று வடபகுதி மக்கள் நினைத்தனர். அப்படி நினைத்தவர்களில் நானும் ஒருவன் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நிலவிய கெடுபிடிகள், இழப்புகளுக்கு ஒரு முடிவு ஏற்படவேண்டுமென விரும்பினேன்

இதனடிப்படையில் போர் நிறுத்தக் 'கண்காணிப்பை ஓர் அவசியமாகக் கருதி அதில் ஒரு சமாதானத்தொண்டனாக இருக்கமுடியுமென்று எண்ணினேன் (Peace Maker). அத்துடன் நான் சார்ந்திருந்த யாழ். பிரஜைகள் இணைப்புக் குழுவும் இப்பணியை நான் ஏற்கவேண்டுமென வற்புறுத்தியிருந்தது.

எனவே இலங்கை அரசுடன் வடபகுதி மக்கள் எவ்வித தொடர்பும் அற்றிருந்தவேளை இப்புதிய பணிமூலம் எம்மக்களின்பிரச்னைகளை அறிந்து அரசுக்குத்தெரியப்படுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பமென்று நான் கருதினேன்'' என்றார்.

### அப்பழுக்கற்றவை

உங்களுக்கு இப்பணியில் எதிர்பார்த்த வாய்ப்புக்கள் கிடைத்தனவா? அவைபற்றி ஏதும் கூறுவீர்களா? என்ற கேள்விக்கு அவர் பதிலளித்ததாவது: ''வாய்ப்புக்கள் கிடைத்தன; பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும், [வடக்கு - கிழக்கு] தடுப்புக் காவல் முகாம்களுக்கும், சிறைக்கூடங்களுக்கும் எனது சக உறுப்பினர்களுடன் சென்றிருந்தேன்.

''நாம் தயாரித்த அறிக்கைகள் அப்பழுக்கற்றவை என்றே கூறுவேன். எம்மத்தியில் நல்ல புரிந்துணர்வு இருந்தது. நாம் நன்கு கலந்தாலோசித்தே எமது அறிக்கைகளை ஜனாதிபதியிடம் கொடுத்தோம்.

''இருந்தபோதிலும் நாம் நடந்துகொள்ளவேண்டிய விதிமுறைகள் தொடர்பாக முரண்பாடு, நிச்சயமற்ற தன்மைகள், ஆரம்பத்திலிருந்தே இருந்துவந்தன.

''இத்தகைய மாறுபாடான போக்குகள், சிலபொதுநலன்களைக்கூடப் பாதிக்குமளவுக்கு, சிறப்பாகக் கூறுவதாயின் நான் அங்கம் வகித்த பிரஜைகள் குழுக்களின் செயல்பாட்டுக்குக்கூட குந்தகம் விளைவிப்பதாக இருந்தது. எனவே இந்த முரண்பாடான நிலையும், பின்னர் எனது இராஜினாமாவுக்கு ஒரு காரணமாக அமைந்தது.

### கூட்டாக இராஜினாமா

இதுதவிர கண்காணிப்புக் குழு செயல்பட்டுக்கொண்டிருக்கும்போதே பாதுகாப்புப் படை யுத்தநிறுத்த மீறல்களை அவ்வப்போது சுட்டிக்காட்டினோம்.

இறுதியாகக் கடந்த 4ம், 5ந் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து நானும் திருமலையைச் சேர்ந்த சக உறுப்பினருமான திரு. ஜெயபாலனும் எமது கண்காணிப்புக் குழு பதவிகளைத் துறக்க முடிவு செய்தோம். தொடர்ந்து கடந்த 9ந் திகதி எமது ராஜினாமாக் கடிதத்தை கூட்டாக ஜனாதிபதியிடம் கையளித்தோம். 12ந் திகதி அக்கடிதம் ஏற்கப்பட்டதாகப் பதில் கிடைத்தது.



மேற்குறிப்பிட்ட காரணம் எமது ராஜினாமாவுக்கான ஓர் உடனடி முடிவாகும். ஆனால் எமது மூலகாரணங்களை ஜனாதிபதிக்கு நாம் சமர்ப்பித்த கடிதத்தில் குறித்துள்ளோம்.''

''சில விசேட தகவல்களைப் பெறும் அதிகாரம் அப்பதவியிலிருந்தபோது எமக்குத் தரப்பட்டது. அத்தகவல்களையும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளோம். ஆனால் எமக்குத் தரப்பட்ட அந்த விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி நாம் பெற்ற தகவல்களை அந்த அதிகாரம் எம்மிடமில்லாதபோது குறிப்பிடுவது நாகரிகமல்ல என்றே கூறுவேன். It is not etiquette. அதனாலேயே அம் மூல காரணங்களை நாம் பகிரங்கப்படுத்த முன்வரவில்லை.

கண்காணிப்புக் குழுவின் எதிர்கால நடவடிக்கை எப்படி இருக்குமென்று கருதுகிறீர்கள்? என்றபோது, ''அக்குழுவில் உள்ள அனைவரையும் நான் மதிக்கிறேன். அவர்கள் பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள். பல்வேறு விடயங்களிலும் ஈடுபாடு, மற்றும்

(6-ம் பக்கம் பார்க்க)

# சீனநாடோடிக் கதைகள்

✶ தமிழில்: நீர்வை பொன்னையன்

## குறிக்கோள்

ஒருபாம்பு ஆண்கௌதாரி ஒன்றைக் கடித்துக் கொலை செய்தது. பெண் கௌதாரி துயரத்துடனும், உள்ளக் கொதிப்புடனும் இரவுபகலாக அழுது புலம்பியது. அதனுடைய அவலம்மிக்க சோகமயமான அலறல் வசந்த காலத்தில் காடுமுழுவதும் பாழ்நிலையை உருவாக்கிய ஒரு கருந்திரையை விரித்தது.

அந்தப் பெண் கௌதாரியின் துயரப் புலம்பல் அவ்வழியே சென்றுகொண்டிருந்த ஒரு இசைக் கலைஞனுடைய உள்ளத்தை அதிரவைத்தது. ''இந்த உள்ளத்தை உருக்கும் மரணவேதனையைத் தான் வெளிப்படுத்தமுடியும்.''

கலைஞன் கூறினன்.

வெந்துயரக் கண்டனத்தை பழிக்குப் பழிவாங்க ஏங்கித் தவிக்கின்ற ஒருசோகஇசையை அந்தக் கலைஞன் சிருஷ்டித்தமைத்தான். இச்சோக இசையைக்கேட்ட எல்லாமக்களதும் இதயங்களில் கிளர்ச்சி உணர்வை ஊட்டி குளிர்ந்த அதிகாலை வேளைகளிலும், வெப்ப நாட்களிலும், தனிமை நிறைந்த இரவுகளிலும், ரத்தத்தைக் கொதிப்படையச் செய்து ஒருவித வெறியை ஊட்டியது.

உணர்ச்சிக் கொந்தளிப்படைந்த மக்கள் பாம்புகளைத் தேடி அலைந்து அந்த ஆண் கௌதாரியைக் கொன்ற கொலையாளிப் பாம்பையும் அதன் சகாக்களையும் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கொன்றுகுவித்தார்கள்.

கலைகள் நீதியைப் பேணிப் பாதுகாப்பதற்கும், சகல தீமைகளையும் ஒழித்துக்கட்டுவதற்கும் மக்களைத் தூண்டும் உந்து சக்தியாக இருக்கவேண்டும்.

★

## புத்தாண்டுப் பரிசு

ஹன்ரன் என்ற நகரத்தில் புத்தாண்டின்போது இளவரசனுக்கு புருக்களைப் பிரித்தப் பரிசளிப்பது வழக்கமாக இருந்தது. இது இளவரசனுக்கு மகிழ்ச்சியூட்டியது. அவன் அந்த மக்களுக்கு சன்மானங்களை வழங்குவான்,

இந்த வழக்கத்திற்கான காரணத்தை இளவரசனிடம் யாரோ ஒருவர் கேட்டார்.

''என் அன்பைக் காட்டுவதற்கு புத்தாண்டில் நான் புருக்களை விடுதலை செய்கின்றேன்'' என்று அரசன் கூறினன்.

''நீங்கள் புருக்களை விடுவிக்க விரும்புகின்றீர்கள் என்பதை அறிந்த உமது குடிமக்கள் பல ஆயிரக்கணக்கான புருக்களை வலை விரித்துப்பிடிக்கின்றார்கள். இதன் விளைவாக அநேக புருக்கள் கொல்லப்படுகின்றன. உண்மையில் நீங்கள் புருக்களைக் காப்பாற்ற விரும்பினல்மக்கள்அவைகளைப் பிடிப்பதைத் தடை செய்ய வேண்டும். புருக்களை விடுவிப்பதற்கு நீங்கள் அவைகளை மக்கள் பிடிப்பதற்கு வகை செய்கின்றீர்கள், இதனல் நீங்கள் புருக்களுக்கு விளைவிக்கும் நாசத்திற்கு உங்களது அன்பு ஈடுசெய்யமுடியாது''

ஒருவர் எடுத்துக் கூறினர். இளவரசன் அதை ஏற்றுக் கொள்வானு? அது அவனுக்குக் கௌரவக் குறைவல்லவா?

★

## வீரதீரம்

ஒரு மாட்டுக் கொம்பிற்கு உள்ளே சென்ற ஒரு சுண்டெலி வெளியே வரமுடியாமல் திண்டாடியது. அது கொம்பிற்குள் உள்ளே மேலும் உள்ளே சென்று கொண்டிருந்தது.

''நண்பனே! தயவு செய்து திரும்பிச் செல். நீ உள்ளே செல்லச் செல்ல பாதை ஒடுங்கி, மேலும் ஒடுக்கமாகச் செல்லும்.''

கொம்பு சுண்டெலிக்குக் கூறியது.

''நீ சும்மாகிட நான் எல்லாத் தடைகளையும் உடைத்துத் தகர்த்தெறிந்து, ஒரு பொழுதும் பின்வாங்காமல், ஒரு தோல்வியுமடையாமல் எப்பொழுதும் வெற்றியுடன் வீறு நடைபோட்டு முன்னேறிக் கொண்டிருக்கும் ஒரு வீரதீரன்.''

சுண்டெலி இறுமாப்புடன் பதிலிறுத்தது.

''ஆனல், நீ தவறான வழியில் சென்று கொண்டிருக்கின்றாய்.''

கொம்பு எச்சரித்தது.

''உனது புத்திமதிக்கு நன்றி. ஆனல் நான் எனது வாழ்நாள் முழுவதும் வளைக்குள் இருந்து வந்துள்ளேன். எது சரியானவழி எது தவறான பாதை என்று எனக்கல்லவோ தெரியும்? உனக்கு எப்படித் தெரியும்? நான் எப்படித் தவறு செய்யமுடியும்? உன் வேலையை நீ பார் எனக்கு என் வேலை தெரியும்.''

செருக்குடன் கூறிவிட்டு சுண்டெலி முன்சென்று கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் இந்த வீராதி வீரன் மூச்சுத் திணறி இறந்தார்.

## வல்வைக்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தகுந்த விளக்கங்களைக் கொண்டவர்கள்.

### அரசியல் பேச்சு அவசியம்

''கண்காணிப்புக்குழு நல்ல முறையில் இயங்கவேண்டுமானல் அரசியல் மட்டத்திலான பேச்சுக்கள் நடைபெறுவது அவசியம். இதன்மூலமே அதன் பணிகளை ஆக்கபூர்வமானதாக்கமுடியும்'' என்றார்.

இறுதியாக, ''நீங்கள் ஒரு பேராசிரியர் என்ற ரீதியிலும் சிலகாலம் எமது பிரச்னையில் முக்கிய பங்காற்றியவர் என்ற வகையிலும் எமது இன்றைய பிரச்னை பற்றி உங்கள் கருத்து எப்படி? என்றேன்.

''எமது பிரச்னையை ஒரு தேசிய இனப்பிரச்னையாக மட்டும் கொள்ளமுடியாது. சர்வதேச ரீதியில் இது ஓர் உயர்மட்ட ராஜதந்திரச் சிக்கல்கள்நிறைந்ததாகவுமுள்ளது. இதன் தாக்கம் ஒரு சமூகமாற்ற புரட்சி சம்பந்தப்பட்ட விடயமும்கூட என்பதே எனது அபிப்பிராயமாகும்'' என்றார்.

# குருமாற்றத்தின் இராசிவாரியான பொதுப்பலன்கள்

குரோதன வருஷம் தை மாதம் 10-ம் திகதி [23-1-86] அன்று வியாழக்கிழமை பின் இரவு கும்ப ராசிக்குள் பிரவேசிக்கும் குரு பகவானின் பொதுப்பலன்.

### மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் ஆகிய நட்சத்திரங்களை கொண்ட மேட இராசியில் ஜனனமானவர்களுக்கு 9தாமிடம்12மிடத்துக்கு அதிபதியாகிய வியாழபகவான் பதினேராமிடமாகிய லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், தொழிற்துறையில் தற்போதைய நிலையில் சிறிது மாற்றமும் சகோதர சுகமும், அவர் மூலமான உதவிகளும்கிட்டும்.

மேலும் இக் காலங்களில் எதிர்பாராத வரவுகளுடன் திடீர்ப் பிரயாணங்களுக்கும் இடமுண்டாம். மாணவர்களுக்கு வியாழ பகவானின் இடமாற்றம் நன்மையாக விருப்பினும் இடையிடையே மந்தநிலையும் உண்டு 1985-11-3ல் இடம்பெற்ற சனிமாற்றம் அட்டமத்தில் இருப்பதால் பொதுவாகத் தொழில், பொருள் இவைகளில் கவனம் வேண்டும். அரசாங்கத் துறைகளில் கடமையாற்றுவோர்களுக்குச் சிரமங்கள் இருக்கும் தனியார்துறைகளில் கடமைபுரிவோர் அவப்பெயர்களுக்கு ஆளாக நேரலாம். எனவே எக்கருமம்செய்வதாயினும் சிந்தித்துச் செயல்படவும். வாகனத் தொழில் புரிவோர் போக்குவரத்தில் அவதானம் வேண்டும். வணிகர்களுக்கு திடீர் வீழ்ச்சிக்கு இடமுண்டு. கொடுக்கல், வாங்கல்களில் அளவோடு நடந்து கொள்வது விரும்பத்தக்கது. கைத்தொழில் புரிவோருக்கு ஆயுத பீடைகளுக்கு இடமிருப்பதால் செய்தொழில்களில் நிதானத்துடன் செயல்படவும். குடும்பஸ்தர்களுக்கு இக்காலம் சஞ்சலமான காலமாகும். மணமாகாதவர்களுக்குச் சோதனையான காலமாகும். மாணவமணிகள் கல்வி விடயத்தில் விடா முயற்சி எடுடபின் நடுநிலையை அடையலாம்.

இவ்வாறு சனி பகவானின் இரண்டரை வருடகால பலாபலன்களுக்குக் கும்பராசிக்குள் பிரவேசிக்கும் குரு யாபேருக்கும் சிறியநன்மை தருவார்

எனவே இக் காலங்களில் யாபேரும் குரு வாரமும், சனி வாரமும், உபவாசம் இருந்து கிரகவழிபாடு செய்து இஷ்ட தெய்வத்தைப் பூஜித்து வரச் சகல நன்மையும் உண்டாகும்.

### ரிஷபம்

கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை ஆகிய நட்சத்திரங்களைக் கொண்ட இடபராசியில் ஜனனமானவர்களுக்கு எட்டாமிடம் பதினேராமிடத்துக்கதிபதியாகிய குருபகவான் பத்தாமிடத்துக்குள் பிரவேசிப்பதால் இக்காலங்களில் தொழில் பொருள் இவைகளில் திடீர்த் திருப்பங்களுக்கு இடமுண்டாம்.

குறிப்பாகத் தொழில் மாற்றம் அல்லது இருப்பிடமாற்றம், தொழில் நலன், தொல்லைகள் நிவர்த்தி, பொன், பொருள், பூமி, வீடு, வாசல் சிறப்பும் திடீர் பிரயாணங்களும் ஏற்படலாம். 85-11-3ன் மேல் விருச்சிக ராசிக்குள் சஞ்சரித்தசனிபகவான் 7-ம் இடத்தில் இருப்பதால் இக்காலங்களில்தடைப்பட்டிருந்த காரியங்கள் நடைமுறைக்கு வரும். வெளியிடத்துத் தொடர்புகளும் நடைமுறைக்கு வரும். சொந்தத்தொழில் புரிவோர்களுக்கு இக்காலத்தில் பிறரின் ஊக்குவிப்புக்களும் இடமுண்டாம். பொதுத்துறைகளில் கடமை புரிவோருக்குத் திடீர் வரவுகளுக்கும், கைத்தொழில் புரிவோருக்குத் தொழில் சிறப்புக்கும் இடமுண்டு. குடும்ப வாழ்க்கையில் சமயோசமான பலனும் இனசனக் கொண்டாட்டமும் உண்டு. மாணவமணிகளுக்குச் சிறப்பான காலமாகும். இக்காலம் குறிக்கோளில் வெற்றியும் கல்வியில் முன்னேற்றமும் தொழில் வரவுமுண்டு. விவாகமாகாதவர்களுக்கு விவாகப் பலனுக்கும் இடமுண்டாம்.

இவ்வாறு சனி பகவான் 2½ வருட காலத்திற்குப் பலன் செய்யும் வேளை வியாழ மாற்றமும் யாபேருக்கும் நன்மையான பலனைய செய்யும்.

எனவே இக் காலங்களில் குரு வாரத்திலும் சனி வாரத்திலும் உபவாசம் இருந்து கிரகவழிபாடு செய்து இஷ்ட தெய்வங்களையும் பூஜித்து வர நன்மையுண்டாம்.

[மிகுதி அடுத்த வாரம்]

## புதிய புத்தகம்

### சிவதொண்டன் ஐம்பதாம் ஆண்டு சிறப்பு மலர்

மரத்துக்கு, தான் மரம் என்பது தெரியாது. மனிதன் தான், மனிதன் என்பதை அறிகின்றான்; தன் வாழ்வின் தரத்தை உயர்த்துதற்கு எத்தனையோ திட்டங்கள் வகுக்கிறான். பஞ்ச பூதங்களைத் தன் வழியில் அடக்கியாள முயல்கின்றான். ஆனல் தான் யார்? எங்கிருந்து வந்தான்? தன் கதி என்ன? எங்கே போகப்போகிறான் என்பதை அறியான். அதனலே கவலையில் மூழ்குகிறான்.

இப்படியாக எல்லோருக்கும் பயன் தரும் பல பல அரிய கருத்துக்களுடன் சிவதொண்டன் ஐம்பதாம் ஆண்டு சிறப்பு மலர் வெளிவந்திருக்கிறது.

சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் சுவாமிகளால் நிறுவப்பட்ட சிவதொண்டன் நிலையத்திலிருந்து வெளிவரும் பத்திரிகையே சிவதொண்டன் பத்திரிகையாகும். இப் பத்திரிகையில் நற்சிந்தனை, தரமான தமிழ்-ஆங்கிலக் கட்டுரைகள் என்பன வெளிவருவது வழக்கம். இந்த வழக்கத்தின் வளர்ச்சி முதிர்ச்சி என்பனவற்றை நன்குணரத்தக்க வகையில் இம்மலர் விளங்குகின்றது.

தெரிந்தெடுக்கப்பட்ட தரமான கட்டுரைகளும் அப்பா பரமசிவம் முத்திக்குவழி முதலிய நற்சிந்தனைகளும் இந்தமலரின் வாசனையை அதிகரிக்கச் செய்கின்றன. ஆங்கில அறிவுடையவர்கள் மெச்சிச் சுவைக்கும் விதத்தில் சுமார் ஐந்து கட்டுரைகள் இம்மல

(19ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் எப்படி?

### இன்று

மாதம் — தை

திகதி- 13 [1986 - 1-26]

கிழமை - ஞாயிறு

திதி - பூரணை காலை 7-03ன் மேல் பிரதமை

நக்ஷத்திரம் - பூசம் பிற்பகல் வரை

### மேடம்

நீண்டநாள் மூடுமந்திரமாக இருந்த உண்மை அம்பலத்திற்கு வரலாம். நிலைமையைச் சமாளிப்பதில் வெற்றி காண்பீர்கள். உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணை நிற்பர் விருந்தினர் வருகைக்கும் இடமுண்டு.

### இடபம்

முயற்சியால் முன்னேற்றம் உண்டு. பாராட்டுக்களும் கிடைக்கும். சிலர்இடமாற்றம் பெறக்கூடும். கூட்டு வியாபாரம் சிறந்த பலனைத் தரும்.

### மிதுனம்

மனைவாழ்வில் மகிழ்ச்சி. குழந்தைகளின் முன்னேற்றமும், வருமானத்தில் உயர்ச்சியுமுண்டு புதுமனை, புதுத் தொழிலை மனம் நாடும். நீண்ட பிரயாணத்துக்கு இடமுண்டு.

### கடகம்

அவசரம் வேண்டாம். ஆத்திரத்தை அடக்கவும். பகையும், முன்னேற்றத்தில் முட்டுக்கட்டையும் தோன்றும்.

### சிங்கம்

சிரமங்கள் அதிகரிக்கும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். ஆசைகள் அலைமோதும். நிம்மதியற்றநிலை தென்படும். ஆணவத்தை அடக்கவும்.

### கன்னி

சிநேக வழியால் மகிழ்ச்சியான செய்தி கிட்டலாம். குடும்பத்தில் சுமுக உறவுகள் தென்படும். எதிர்பாராத வரவுக்கு இடமுண்டு.

### துலாம்

கல்வித்துறையில் விடா முயற்சி வெற்றிதரும். சகோதர வழியில் சந்தோஷமான செய்திக்கு இடமுண்டு. அதிக பேச்சைத் தவிர்க்கவும்

### விருச்சிகம்

பொருளாதார நிலை சீரடையும். தானிய விருத்தியுடன் தனவரவிற்கும் இடமுண்டு. குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

### தனுசு

பலவழிகளிலும் பணம் செலவாகும். நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். புதிய பாதையில் வழிபிறக்கும். புத்திர சுகமும் உண்டு. இதயத்தில் இன்பம் பொங்கும். இல்லத்திலும் இனிமை தவழும்.

### மகரம்

மோதவரும் பகை, மோசடிகள் நடக்கும். சிறிய விடயம் கூடச் சிரமமாகத் தோன்றும். உள்வீட்டிலேயே பூசல்கள்தலை தூக்கும். துணிவேதுணையென இருக்கவும்.

### கும்பம்

களஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கும். காதலர்களுக்கு கனிவான வாரம். உணர்ச்சிவசப்படுவதால காரியங்கள் தடைப்படும். வியாபாரிகளுக்கு விருத்திஉண்டு. இவ்வாரம் நன்மையான விடயங்களும் இடம்பெறும்.

### மீனம்

தொழில்துறையில் போட்டிகள் தலைதூக்கும். முன்னேறுவதற்கான சர்ந்தர்ப்பம் ஒன்று கைநழுவிப் போகலாம். உறவாடிக் கெடுப்பதற்குச் சிலர் காத்திருப்பர்.

திருமலை க.வே.ரவீந்திரன்

[4]

கனகலட்சுமி பூஞ்சோலையில் படித்துவிட்டுப் பின்னர் சிறுகுளம் சென்று அங்கு ஒரு சிறுவர் பாடசாலையில் ஆசிரியையாக வேலை பார்த்து, பின்னர் அதைவிட்டு வந்து பூஞ்சோலையில் தானே ஒரு நேசறி வகுப்பு ஆரம்பிக்க யோசனை செய்துகொண்டிருந்த காலத்தில், அரசகேசரியின் தூண்டுதலால் முழங்கேணித் திட்டத்துக்கு வந்து சேர்ந்தாள்.

''உருப்படியான வேலை ஒன்றும் நடக்கவிடமாட்டாள். வாய்தான் தவிரவென்றுமில்லை...''— அவளைப் பற்றித் திட்டத்தில் நிலவிய பொதுவான ஒருகருத்து இது. பொதுவாக அது உண்மைதான். திட்டக்கூட்டம் நடைபெறும் போதெல்லாம் கனகலட்சுமி அடிக்கடி குறுக்குக் கேள்விகள் கேட்டுச் சலசலப்பை உண்டாக்குவாள்.

''இவளவைக்கு என்னதெரியும்? இந்தப் பூஞ்சோலைக்குள் இருந்து கிணற்றுத் தவளையள் மாதிரி... வெளியிடங்களுக்குப் போகவேணும்.. ஐந்தாறு இடத்தைப் பார்க்க வேணும்... ஒரு திட்டத்திலை தலைவிப்பதவி எடுத்துத்தோட்டம் செய்தாப்போலை எல்லாம் தெரிஞ்சது என்று நினைப்பு...!''

அவளுக்குத் திட்டத் தலைவி பூமணி மீது எப்பவும் ஒரு வெறுப்பு. தான் படித்தவள் என்பதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேணுமென்று சதா நினைத்துக்கொள்ளுவாள். ஒருமுறை கூட்ட அறிக்கை வாசிக்கும்போது வாய் தடுமாறி ஏதோ பிழையாக வாசித்துவிட, அவள் அதைப் 'பிடித்து'க் கொண்டாள்.

''அதுக்குத்தான் சொல்லுறது இப்படியான பதவிகளுக்குப் படிச்ச ஆட்களை வைக்க வேணும் என்று...''

பூமணிக்குக் கோபம் வந்துவிட்டது. ''கனகலட்சுமி, நீ மட்டும்தான் படிச்சவள் இல்லை. நானும் உன்னுடைய அளவுக்கு படிச்சிருக்கிறன்...''

''உன்ரை படிப்புத்தான்''

''என்னடி சொன்னனி?''

பூமணி 'நெருங்கி'விட்டாள்.

''சொன்னால் என்னடி செய்வாய்?'' கனகலட்சுமியும் இருந்த இடத்தைவிட்டு எழுந்தாள். ஆனால் பக்கத்தில் இருந்த பெண்கள் விலக்குப் பிடித்துவிட்டபடியால் ஒரு அடிபிடி தவிர்க்கப்பட்டது. இருவரது மனங்களிலும் மாறுத பகைமை உணர்வுக்கு இச் சம்பவம் வித்திட்டது. இச் சச்சரவு அரசகேசரியின் கவனத்துக்கு வந்தபோது அவன் பூமணியின் மீது துள்ளி விழுந்தான்.

''உனக்கென்ன கனகலட்சுமியோடை கதை... திட்டத்திலை சண்டை சச்சரவு எண்டால் சரிவராது. அதுக்கு வேறை இடத்தைத்தான் பார்க்க வேணும்''

''நீங்கள் அப்பிடி ஒரேயடியாய் என்னிலை பழி சொல்ல வேண்டாம். அவள் என்ன சொன்னவள் என்று நீங்கள் விசாரிக்க வேணும்''

ஆனால் திட்ட அங்கத்தவர்களின் சகோதரர்கள் இருவர் தங்கள்சகோதரிகளுடன் நேரே எம்.பி.யிடம்சென்று அவரிடம் திட்டக் குறைபாடுகள் பற்றி எழுத்துமூலம் புகார் ஒன்றைக் கொடுத்தனர்.

எம்.பிக்கு ஒரே குழப்பமாய் இருந்தது. தான் கவனிப்பதாகச் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார். இவர்கள் தந்த புகார்க்கடிதத்தைத் தனது ஜீப் சாரதி மூலம் பரமலிங்கத்துக்கு அனுப்பிச் சம்பவங்களை விசாரித்துத்தனக்கு ஒரு செய்தி அனுப்புமாறு சொல்லிவிட்டார் எம். பி. பரமலிங்கம் புகார் முழுவதையும் வாசித்தான் அவனுக்கு மிகுந்த ஆத்திரம்!

''எட இவங்கள் என்னட்டை வராமல நேரிலை எம்பியிட்டை போட்டினம் வரட்டும் ... '' என்று கறுவிக் கொண்டான்.

''ஓ ... அப்படியே சங்கதி? நீபோ நான் அதை வடிவாய் விசாரித்துப் போட்டுச் சொல்லுறன்''

அன்றுமாலை பூஞ்சோலைக் கடைத்தெரு வாசிகசாலைக் கூட்டம் நடந்தது. பரமலிங்கம்தான் வாசிகசாலைத் தலைவர். அரசகேசரி பொருளாளர் பதவி வகித்தான். கூட்டத்திற்கு அவனும் வந்திருந்தான்.

''என்னடாதம்பி முழங்கேணித்திட்டம் பற்றி ஒரே முறைப்பாடாய்க்கிடக்கு ...''

''முறைப்பாடோ. ? யார் வந்து உங்களிட்டைச் சொன்னது?''


''ஆர் வந்து சொன்ன தெண்டு கேக்காதை தம்பி என்ன நடந்ததெண்டு சொல்லும்...'' — பரமலிங்கத்துக்குச் சாடையாகக் கோபம் தலைக்கேறியது.

''திட்டத்தைப்பற்றியும் அங்கையுள்ள பிரச்னைகள் பற்றியும் இப்பநான் சொல்லப் போனால் உங்களுக்கு விளங்காது அண்ணை''

''விளங்காதோ? அப்ப ஆருக்கு விளங்கும்?''

உங்களுக்குவிளங்காது. இதிலை ஏன் நீங்கள் வீணாகத்தலையிடு

போட்டு வரப்போருளாம்' இந்தமுறை மிளகாய்க்கண்டு நட எவ்வளவு செலவளிச்சது எண்டு உங்களுக்குத் தெரியுமே? இப்ப தண்ணி இல்லையாம். மோட்டர் பழுதாப் போச்சாம். பம் ஒப்பறேட்டர் லீவிலையாம். இதையெல்லாம் நீங்கள் யோசிக்காமல் என்னட்டைக் கோபிக்கிறியள் ... !''




# குறுநாவல்

''என்ன விசாரணை...பூமணி நீ எனக்குச் சொந்தக்காரி என்றுதான் உன்னைத் தலைவியாக்கி விட்டனான்...! இதோடை நிற்பாட்டிகொள் இப்படியான சச்சரவுகளை'' அரசகேசரி எச்சரிக்கை செய்தான். பூமணி மௌனமாய் இருந்துவிட்டாள்.

முழங்கேணியில் நடந்த விஷயங்கள், நடக்கும் விஷயங்கள் யாவும் மெல்ல மெல்லப் பூஞ்சோலைக் கடைத் தெருவில் தினமும் அலசி ஆராயப்படும் சங்கதியாய் ஆகிவிட்டன.

திட்ட அங்கத்தவர்களது பெற்றோர், சகோதரர்கள் என்று பலரும் திட்டத்தில் பெண்களுக்கு இடைக்கிடை உதவி செய்யவும், சிலசமயம், துணைக்காகவும் முழங்கேணிக்குப் போய்த் தங்குவது வழக்கம்.

பூமணியின் தமையன் சுப்பிரமணியம் பூஞ்சோலைச் கடைத்தெருவில் சிறிய தட்டிவான் ஒன்று வைத்திருந்து வாடகைக்கு ஓட்டிச் சீவியம் நடத்தி வந்தான். பூஞ்சோலையில் 'முறட்டுமணியம்' என்றால் தெரியாதவர் இல்லை.

பூமணி திட்டத்தில் நடக்கும் தில்லுமுல்லுகள் பற்றி இடைக்கிடை வீட்டில் சொல்லிவைத்துள்ளாள். கனகலட்சுமியும், பூமணியும் வாக்குவாதப்பட்ட சம்பவமும் வீட்டாருக்குத் தெரியும்.

''கொண்ணைக்கு சொல்லிப் போடாதை மோனை... அவன் முறட்டுவேலை செய்துபோட்டு வந்திடுவான்... உனக்குத் தான் கரைச்சல்...'' - பூமணியின் தாய் மகளை எச்சரித்தாள்.

பூஞ்சோலையில் பலரும் பரமலிங்கத்திடம் இவைகளைப் பற்றிக் கதைத்தனர்.

''பெடியன் அவ்வளவுபிழை விடான்... பார்ப்பம். .''-பரமலிங்கம் சொல்லிவைத்தான்.

கடைத்தெருவில் எம்பியிடம் போனவர்களில் ஒருவரைச் சந்தித்தான்.

''என்ன முருகேசு, இஞ்சை நான் இருக்கிறன் . நீ போய் எம்பியிட்டைப் பெட்டிசம் எழுதிக் கொடுதிருக்கிறாய்...''

''அண்ணை, உங்களிட்டைப் பலமுறை நேரிலை சொல்லிப் போட்டுத்தான் இதை எழுதிக் கொடுத்தனுங்க ... முழங்கேணியில் அரசகேசரியின் அட்டூழியம் தாங்க முடியாதாம். என்ரை தங்கச்சி, தான் திட்டத்தை விட்டுப்

கிறீர்கள்? திட்டவேலைசள் எனக்குத் தெரியும் தானே.''

''அரசகேசரி, நான் தலையிடாமல் வேறையார் தலையிடுவது? எம்பியும் இதைப்பற்றி அறியவேணும் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார். இப்ப நான் ஒரு அறிக்கை அனுப்ப வேணும்''

''எம்பி விருப்பமெண்டால் என்னட்டைக் கேட்கட்டும். நான் சொல்லிக் கொள்ளுவன்''

''என்ன கதை எல்லாம் படுபிழையாய்க்கிடக்கு ... நீ எல்லாவற்றையும் மறந்து விட்டாய் போலை கிடக்கு. அத்திவாரத்தை மறக்கக் கூடாது தம்பி''

''அண்ணை நீங்கள் சொல்லுறது எனக்கு வளங்குது. ஆனால் தயவு செய்து இனி இப்படி மறைமுகமாய்க் கதைக்க வேண்டாம். என்னுடைய அலுவல்கள் எனக்குத் தெரியும். உங்கடை யூனியனிலை என்னென்ன பிழையெண்டு எனக்கும் தெரியும் நான் எப்பவாகிலும் அதைப்பற்றிக் கதைச்சனானே?''

'யூனியனிலை என்ன பிழை? யூனியனைப்பற்றி நீர் கதைக்கத்தேவையில்லை. இப்ப முழங்கேணித் திட்டத்தைப்பற்றித் தான் கதை. அதுக்கு மறுமொழி சொல்லும்.

''யூனியனைப்பற்றி நான் கதைக்க முடியாதென்றால் திட்டத்தைப்பற்றியும் நீங்கள் கதைக்க முடியாது. ஆனால் கொஞ்ச நாளிலை தெரியும் யூனியனைப்பற்றிய சங்கதி''

''என்ன கனக்கக் கதைக்கிறாய்? ''— பரமலிங்கம் கதிரையை விட்டு எழுந்தான்.

''சரி சரி விடுங்கோ கதையளை... இதென்ன சண்டை ... ''— பக்கத்தில் நின்றவர்கள் விலக்குப் பிடித்தனர்.

அரசகேசரி போய் விட்டான்.

இரவு முழுவதும் பரமலிங்கம் நித்திரை கொள்ளவில்லை.

[வளரும்]

## குள்ளர்களை உயரமாக்கும் அற்புத மருந்து

மனித உடலின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் 'சோமடோடிரோபின்'' என்னும் ஹர்மோனைச் சோவியத் விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். வளர்ச்சி மாற்றத்தையும், உயிரினங்களின் அடிப்படைப்பணிகளையும், இந்த மருந்து கட்டுப்படுத்துகிறது.

கருவுற்றிருக்கும் தாயின் உடலில் ஏற்படும் மாற்றங்களையும், குழந்தையின் வளர்ச்சியையும், ஹார்மோன்களின் தொகுதி முறைப்படுத்துகிறது. இம்மருந்தைச் சாப்பிட்டால், குள்ளர்களின் குழந்தைகள் கூட, சாதாரண உயரத்தை அடைய முடியும். கடுமையான தீக்காயங்கள், எலும்பு முறிவுகள், ஆறுத ரணங்கள் ஆகியவற்றைக் குணப்படுத்தவும் இதைப் பரவலாகப் பயன்படுத்தலாம்.

இம்மருந்து சோவியத் யூனியனில் மிகக் குறைந்த செலவில், தேவையான அளவில் தயாரிக்கப்படுகிறது. இதர நாடுகளில் இதன் விலை மிக அதிகம்.

## பயன் கருதாப் பெரும் பணி

நாம் செய்யும் பணிகள் பயன்கருதிச் செய்வனவாகும். செயல்கள் யாவும் நோக்கம் உடையன என்பது உளநூல். மனோதத்துவ நிபுணர்களையும் புறம்கண்ட சைவத் தமிழ்ச் சிந்தனையாளர் பயன்கருதாச் செயல்களையும் கண்டுள்ளனர். நிஷ்காமியகருமங்கள் சுயநலங் கருதாதவை. அவை பதார்த்தம் என்னும் பெருந்தன்மையான நோக்கில் பிறர்நலம், பொதுநலம் கருதியவை. நாங்கள் இன்று நடும் மரங்கள் உடனடியாகப் பயன்தரவேண்டும் என்பதல்ல. அது எமது பிற்காலத்திலோ, எமது பிற் சந்ததியார் காலத்திலோ, பயன்தருவதாகும். அவ்வளவில் அது அமைவதே போதுமானது.

வீட்டுவளவு குளிர்மையும், பசுமையும் அமைந்தால் நல்ல சுற்றாடலாகும். மக்கள் நெருக்கமாக வாழுமிடங்களில் சுவாசிக்கும் காற்றைத் தூய்மைப் படுத்தும் மரங்களின்அடர்த்தி நம்கண்களுக்கு நல்ல பசுமைக் காட்சியும் தருகின்றது. எந்த மரத்தாலும் எவருக்கும் எவ்வித துன்பமும் என்றாயினும் உண்டாவதில்லை. மரங்கள் என்றும் பலன் தருவன. தறித்தமரங்கள் பலவித பயன்களைத் தருகின்றன. மரந் தறிக்கும்போது கோடரிக்குப் பிடியாகப் பயன் தந்த மரம், தறிப்பவர்களுக்கு நிழலும் தரும். மண்ணீரம் காயுமுன் மரம் நடுவோம்.

— மில்க்வைற் செய்தி

## கடுகு

### தகழி பற்றிய விவரணப் படம்

புகழ்பெற்ற மலையாள நாவலாசிரியர் தகழி சிவசங்கரன் பிள்ளை பற்றிய விவரணப்படம் ஒன்று தயாரிக்கப் பட்டுவருகிறது. இது ''தகழி'' பற்றிய இரண்டாவது படம்.

### ''குவா'' இனி பஞ்சமில்லை......

கருப்பை இல்லாத பெண்களும் இனிக்குழந்தை பெறலாம். இப் பெண்ணின் கருமுட்டையைஆணின்ஜீவ அணுக்களோடு சோதனைக் குழாயில்சேர்த்து கருத்தரிக்கவைத்து ஐந்து மாதத்தின்பின், மற்றொரு பெண்ணின் கருப்பையில் அதனை வளரச் செய்து குழந்தையைப் பெறலாம். ஜேர்மன் மகப்பேற்று நிபுணர் கியாட் தமது ஆய்வின் மூலம் நிரூபித்துள்ளார்.

### பாப்பு வால் நட்சத்திரம்

இந்திய விஞ்ஞானியான வைணி பாப்பு என்பவர், ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் போது 1948ம் ஆண்டு கண்டுபிடித்த வால் வெள்ளி அவரது பெயரால் 'பாப்பு வால் வெள்ளி' என அழைக்கப்படுகிறது.

### டுபாயில் தோசைக்கடை

இலங்கையர் இருவர் சவுதிஅரேபியர் ஒருவருடன் சேர்ந்து டுபாயில் தோசைக் கடையொன்றை திறந்துள்ளனர். இங்கு பிட்டு, அப்பம், சீனிச்சம்பல், இட்லி, வட்டிலாப்பம் ஆகிய உணவுகளே பரிமாறப்படுகின்றன. வெள்ளிக் கிழமைகளில் சோறும் கறியும் வழங்கப்படுகிறது. இது இலங்கையின் முதலாவது ஹோட்டல். சமையல் காரர்கள் இலங்கையர் தான்.

— ஸச்சி

மங்களகர வைபவங்களுக்கேற்ற அன்பளிப்புக்களை தெரிவுசெய்திட

## "சங்கு மார்க்" எவர்சில்வர் பாத்திரங்கள் உத்தரவாதத்துடன்

உங்கள் தெரிவில் சிறப்புத் தள்ளுபடியுடன்

## செல்லா சன்ஸ் சேல்ஸ் சென்ரர்

118, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22054
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)
A 142

---

யாழ். மக்களுக்கு

## ஓர் நற்செய்தி

வெளிநாட்டுப் பயணத்திற்கான விமான டிக்கட்டுகள், பாஸ்போட், விசா, பிரயாணிகள் காசோலைகள் மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:

## விஜயமாலா ரவல்ஸ்,

213, 215 செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 547205

நேரில் தொடர்புகொள்ள முடியாதவர்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்:
திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னுகம்.
(9315)

---

உ
ஸ்ரீ ராமஜெயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தமிழ் குரோதன ஹூ தை மாதம் 17ம் திகதி [31-01-86] வெள்ளிக்கிழமை காலை 9-24 மணிமுதல் 10-36 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

| எமது மகன் | எமது மகள் |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **சாந்தகுமார்** | **வசந்தி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு குடும்பசமேதராய் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் பகல் போசன விருந்திலும் பங்குபற்றுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு திருமதி |
| **வே. சண்முகம்** | **நா. கந்தசாமி** |
| [இளைப்பாறிய சிரேஷ்ட இறைவரி மதிப்பாளர்] | [உதவி சுங்க சேகரிப்பாளர்] |
| 54, டோசன் வீதி, | 15, கொலிங்வூட் பிளேஸ், |
| கொழும்பு-2. | கொழும்பு-6. |

யாழ்ப்பாணம் முகவரி:
அம்பலவாணர் வீதி,
திருநெல்வேலி.

(தனிப்பட்ட அழைப்புகள் கிடையாது)
C-333

---

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

---

## ஆசிரியர்கள் இடமாற்றம்

(கொழும்பு)

யாழ் மாவட்டத்துக்கு வெளியே 10 ஆண்டுகளும் அதற்குமேலும் கடமையாற்றி இடமாற்றம் கோரிய ஆசிரியர்களுக்கு ஆசிரியர் இடமாற்றத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் திரு. ஆ. கந்தையா தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் சேவையின் அடிப்படையிலேயே இடமாற்றம் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆசிரியர் விடுதலை!

[பூநகரி]

ஹபரணையில் வைத்து கைது செய்யப்பட்ட முழங்காவில் ஆசிரியர் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

முழங்காவில் அ. த. க. பாடசாலையின் உதவி ஆசிரியரான திரு. மா. சிவபாலசுந்தரம் விடுமுறைக்காக தமது வீடு சென்றுகொண்டிருந்தபோது ஹபரணையில் வைத்து கைதுசெய்யப்பட்டார். பாடசாலை அதிபரும் பூநகரி பிரஜைகள் குழுவினரும் எடுத்த முயற்சிகளினால் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

## சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

''சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்'' நாடகம் இன்று மாலை 4 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

மீண்டும் இந் நாடகம் இன்றிரவு 7 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி அரங்கிலும் அரங்கேற்றப்படவுள்ளது.

## 'ஈரோஸ்' உரிமை கோருகிறது

[யாழ்ப்பாணம்]

மூதூர் மாவட்டத்திலுள்ள தெஹிவத்தையில் இடம் பெற்ற இராணுவத்தினர் மீதான தாக்குதலை தாமே மேற்கொண்டதாக 'ஈரோஸ்' விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் இரு இராணுவ வாகனங்கள் முற்றாக சேதமாக்கப்பட்டதுடன், 5 க்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது. [ம ]

---

## WANTED

Tutors for
(1) Hair Dressing
(2) Tailoring
(3) Icing & Cookeries

Contact Early

## North Ceylon Technical Institute

14, ST. PETERS LANE,
HOSPITAL ROAD, JAFFNA.
A 139 T' Phone: 24355

---

## தமிழ் எழுத்துறுப்புப் புத்தகம்

1ஆம் புத்தகம் முதல் 6 ஆம் புத்தகம்வரை மாணவர்களின் எழுத்து உறுப்புக்கான பயிற்சிப் புத்தகத்தொடர் மீண்டும் வெளிவந்து விட்டது.

விற்பனையாளர்கள்:

ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை
235, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வெளியிடுவோர்:

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 22356

A 140 வியாபாரிகளுக்கு கழிவுண்டு

---

இலங்கை மக்களின் முதல் தேர்வு

## "சிக்மா பம்ப்ஸ்"

## CEYGMA PUMPS

உங்கள் விவசாய தேவைகளுக்கும் வீட்டுப்பாவனைக்கும் உகந்த

★ மண்ணெண்ணெயில் இயங்கும் உலகப் பிரசித்தி பெற்ற 'இங்கிலிஷ் வில்லியர்ஸ்' என்ஜின் பொருத்தப்பட்ட 2'' ஜூனியர் சிக்மா பம்ப்ஸ்

★ மின்சாரத்தில் இயங்கும் அமெரிக்கன் (AMERICAN) மோட்டர் 1 H.P., 1½ H.P. பொருத்தப்பட்ட ''சிக்மா பம்ப்ஸ்'' ஆகியன தற்பொழுது விற்பனையாகின்றன.

மேலும் விபரங்களுக்கு;

## யுனைரெட் அக்ரோ என்ஜினியரிங்

| அலுவலகம்: | தொழிலகம்: |
|---|---|
| 274/1, ஆஸ்பத்திரி வீதி, | நாவற்குழி, |
| யாழ்ப்பாணம். | கைதடி. |
| தொலைபேசி: 22747 | A 373 |

---

# DIPLOMA IN PHARMACY

1986- JULY மாதம் அரசாங்கத்தால் நடாத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் (PHARMACIST) பரீட்சைக்கு பதிவுசெய்தவர்களுக்கும், பதிவுசெய்ய எண்ணியுள்ளவர்கட்கும் விசேஷடமாக போதிக்கப்படும்.

கடந்தகால கேள்விகட்கு விடைகள்,
எதிர்பார்க்கக் கூடிய வினா-விடைகள்,
சிறந்த செய்முறைப் பயிற்சி.

ஆயுள்வேத டாக்டர்கள், பாமஸி தொழில்புரிபவர்கள், வெளிநாடுகளில் வேலைபுரிய விரும்புபவர்கள் ஆண்-பெண் இருபாலர்கட்கும் இலகுவான போதனைகள்.

## NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peters Lane,
Hospital Road, Jaffna.
T. PHONE: 24355. [A-138]

# பண்டைத் தமிழர் கல்விப் பண்பாடு

ஒரு நாட்டினதோ அன்றி சமுதாயத்தினதோ நாகரிகத்தினதும் கலாசாரத்தினதும் பிரதிபலிப்பாக அமைவது அச்சமுதாயத்தில் நிலவும் கல்விப் பாரம்பரியமே எனவே ஒரு சமூகத்தில் நிலவும்கல்விப் பண்பாடானது அச்சமூகத்தின் பாரம்பரிய மொறைத் தழுவிநிற்பதோடு, அப்பாரம்பரியத்தின் விழுமியங்களையும் பறைசாற்றி நிற்கின்றதெனலாம்.

கல்வி பற்றி வரைவிலக்கணம் கூறிப்போந்த பெரியார்கள் பலர் எனினும், ''கல்வியென்பது ஒருவனை நற்பிரஜையாகவும், முழு ஆளுமை உடையவனாகவும் உருவாக்கும் சாதனமாகும்'' எனக்கூறின் பிழையாகாது சுவாமி விவேகானந்தர் கல்விபற்றிக் கூறும்போது ''மனிதனிடம் மறைந்து கிடக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வியாகும்'' என்கிறார்.

எம்மவர்க்குக் கிடைக்கக்கூடிய மிகவும் பழைமை வாய்ந்த நூலான தொல்காப்பியம்,

''கல்வி தறுகண் இசையே
கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம்
நான்கே''-எனக்

கல்வி பற்றி எடுத்துரைக்கின்றது. ஒருவனுக்குக் கிடைக்கக் கூடிய பெருமைகளில் கல்வியால் கிடைக்கக்கூடிய பெருமையே முதன்மையானது என்பது இதன் பொருள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த தெய்வப் புலமை திருவள்வரும்.

''கேடில் விழுச்செல்வம்
கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை'' எனக்

கூறுகின்றார். இதிலிருந்து பண்டைய தமிழர் செல்வத்தையோ அன்றிச் செல்வரையோ பெரிதும் போற்றாது, கற்றறிந்த சான்றோரையே போற்றும் பண்பாடுடையோராகத் திகழ்ந்தாரென்பது புலனாகின்றது.

மேலும், கல்வியைப் போற்றிய தமிழர் குருபக்தியை முன்னிருத்தியே கல்வி பயின்றனர். இதன் காரணமாகப் பண்டைய கல்விமுறையில் ''குருகுலவாசம்'' இன்றியமையாததாக இருந்து வந்துள்ளது. இதன் காரணமாகக் குரு-சீட உறவு பலமடைந்து வந்துள்ளதோடு குருபக்தியும் வளர்ந்துவந்துள்ளமை கருத்திற் கொள்ள வேண்டிய தொன்றாகும்.

### குருகுலக் கல்வி

வேதகால வழமையின்படி மனிதனின் வாழ்க்கை நாலு நிலைகளாக வகுக்கப்பட்டிருந்தன. அவைகள்;

[1] பிரமச்சரியன்,.
[2] கிரகஸ்தன்,
[3] வானப்பிரபஸ்தன்,
[4] சந்நியாசி' என்பனவாகும்.

பிரமச்சரிய நிலையிலேயே ஒருவன் தனது கல்வியைச் சிறந்த ஆசிரியரை நாடிப் பெறுவது பாரம்பரியமாகும்.

இந்த நிலையிலேதான் குருகுல வாழ்க்கை முக்கிய அம்சமாக விளங்கிற்று. தனது குருவைத்தேடிச் செல்லும் மாணவன் குருகுலத்தில் வேத ஆகமங்களை ஐயந்திரிபறக் கற்பதோடு இலக்கியம், இலக்கணம், செய்யுள் முதலியவற்றையும் பல்கலைகளையும், மத அனுட்டானங்களுக்குத் தேவையான மந்திர சுலோகங்களையும், கற்கக்கூடியதாக இருந்தது. இக்கல்விமுறையில் மனனம் செய்தல், தியானித்தல், கலந்துரையாடல் என்பன சிறந்த பாடமுறைகளாகக்கருதப்பட்டன. சமயம் மனிதனுக்கு இன்றியமையாததாக இருப்பதனால் சமய அனுட்டானமும் பாடவிதானத்தில் ஒன்றிணைந்ததாக இருந்ததில் வியப்பில்லை.

**வண்ணை சே. சிவராசா**

குருவை அண்டிவாழும் மாணாக்கன் குரு அளிக்கும் கல்விக்குக் கைமாறாக குருவினது வாழ்க்கைக்குத் தேவையான நெல்முதலிய தானியங்களைக் கிராமமக்களிடம் சென்று பெற்றும், பசு போன்ற கால்நடைகளைப் பராமரித்தும் விறகு முதலியனவற்றைச் சேகரித்தும் உதவிபுரியவேண்டியது தலையாய கடமையாக இருந்தது.

இவ்வாறான குருகுலமுறையானது, பண்டைக்காலத்தில் மட்டுமல்லாது, மிகஅண்மைக் காலம்வரையும் வழமையில் இருந்து வந்துள்ளமையை நாம் அவதானிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. குருகுல முறையின் ஒழிந்த பண்பாடாக மிக அண்மைக்காலம் வரை தமிழகத்தில் மட்டுமல்லாது ஈழத்திலும் கூடப் பிரபல்யமாக விளங்கியதிண்ணைப் பள்ளிக்கூடமரபாகும்.

குருகுலக்கல்விமுறையானது இந்து முறையை- பிராமணீய முறையைத் தழுவியதாக இருந்து வந்துள்ளது. இது எமக்கே உரித்தான தனித்துவமான முறையாகும். இப்பண்பாடு காரணமாகக் குரு- சீடருக்கிடையேயான உறவுமுறை மிகவும் நெருக்கமானதாகவும் கட்டுப்பாடுடையதாகவும் விளங்கிற்று. மாணவன்பெற்ற கல்வியும் கட்டுப்பாடும். அவன்கல்விகற்று வெளியேறிய பின்பும் அவனது வாழ்வோடு தொடர்ந்து வந்துள்ளது. முதிர்ச்சிபெற்ற மாணவருக்கு தர்க்கவியல், உளவியல் நிகண்டு. நன்னூல், தொல்காப்பியம் போன்றவையும் கற்பிக்கப்பட்டன மேலும் க்ஷத்திரிய வம்சத்தவர்களுக்கு வில்வித்தை வாள்வித்தை போன்ற போர்முறைகளும் போதிக்கப்பட்டன ஆனால் இவை அநேகமாகப் பிராமணர்களின் தனி உரிமையாகவே இருந்துவந்துள்ளன.

குருகுலத்தில்வாழும்மாணாக்கன், சில வேளைகளில் வேலை செய்யும் போதும், குரு சற்றே சிரமபரிகாரம் செய்யும் போதும், தான்மனனம்செய்த சூத்திரங்களையும் சுலோகங்களையும் ஒப்புவிக்க வேண்டியிருக்கும். மேலும், குருவுக்கு மட்டுமல்லாது, குருவின் மனைவிக்கும் தாயின் ஸ்தானத்தில் வைத்து ஒத்தாசையாக, நீர் கொண்டு வருதல், இல்லத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் போன்ற வேலைகளிலும் ஈடுபடுவர்.

### மாணவர் தலைவன்

மாணவர்களிடையே ஒழுக்கம், நேர்மை என்பவற்றில் சிறந்தவனும் அறிவில் முதிர்ந்தவனுமே மாணவர்களின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப் படுவான். குருவானவர் தனது நித்திய கடமைகளில் ஈடுபட்டிருக்கும் போதும் ஒழுங்கை நிலைநாட்டுவதும், பாடங்களைப் போதிப்பதும் தலைமாணாக்கனின் கடமையாகும்.

### குருவணக்கம்

தமிழர்களின் கல்விப் பண்பாட்டில் குருபக்தி மேலோங்கி இருந்து வந்துள்ளது அட்சர ஆரம்பத்தின்போதும் உபநயனத்தின்போதும், வித்தியாரம்பத்தின்போதும் விநாயகர் துதிக்கு அடுத்ததாகக் குரு வணக்கம் முக்கியம் பெறுவதை இன்றும் நாம் அவதானிக்கலாம்.

செல்வந்தர் வாழும் ஊரிலும் பார்க்கக் கற்றோர் வாழும் ஊரே சிறந்ததென பண்டைத் தமிழர் மதித்தனரென்பதற்குப் புறநானூற்றுக் காட்சி சான்று பகர்கின்றது, பிசிராந்தையார் என்னும் புலவரிடம் அவரது தலைமுடி வயது சென்றும் நரையிலவாக இருப்பதற்குரிய காரணமென்ன என வினவப்பட்டபோது,

''ஆன்றவிந்தடங்கிய
கொள்கைச்
சான்றோர் பலர் யான்
வாழும் ஊரே'' எனக்

கூறுகின்றார். அதாவது, அறிவு நிறைந்த புலன்கள் அடங்கிய கொள்கை நிறைந்த சான்றோர் வாழும் ஊரில் தான் வாழ்கின்றதால் தலை நரைக்கவில்லை என்றார். புலவரின் இக்கூற்று தமிழரின் கல்விப் பண்பைப் பறைசாற்றி நிற்பதில் வியப்பில்லை.

தமிழர்களின் கல்விப் பண்பும் நெறியும் சமய வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்திருந்தன. இந்துக்களான தமிழர்களின் நோக்கம் பிறவிப்பெருங்கடலை நீந்தி முக்தி பெறுதலேயாகும்.

''பிறப்பென்னும்
பேதைமை நீங்க
சிறப்பென்னும்
செம்பொருள் காண்பதறிவு''

என்ற வள்ளுவரின் வாக்குப்படி கல்வியின் நோக்கம்; மனிதனின் மனதை வழிப்படுத்தி, அகத்தூய்மை பெறுவதும் அதனால் ஆன்மா சிறந்த பேறான முத்திநிலையை அடைவதுமேயாம்.

இதன் காரணம் பற்றியே, கற்றவன் தமிழரிடையே வாழ்க்கையின் வழிகாட்டியாகவும் மரியாதைக் குரியனவாகவும் மதிக்கப்பட்டு வந்துள்ளான்.

இவ்விதமான தமிழரின் கல்விப் பண்பாடானது, ஆழமானது மட்டுமல்லாமல் பல நூற்றாண்டுகள் பெருமை வாய்ந்ததாகவும் விளங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்விச்சிறப்புமலர்

# முதியோர் கல்வி: ஒரு நோக்கு

✶ திலீதா

''ஓதுவது ஒழியேல்'' என்பது ஆத்திசூடி; மனிதன் தன் ஆயுள் முழுவதுமே கற்றுக் கொண்டிருக்கிறான். பேராசிரியர் ப. சந்திரசேகரம் கூறியது போல் கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான். இக் கோட்பாட்டுக்கமைய இன்று கல்வியின் பயிற்சி முறைகளிலும், கொள்கைகளிலும், நோக்கங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் கல்வியின் அமைப்பும் மாற்றமடைந்துள்ளது. கல்வியை மக்கள் பல வழிகளிலும், பல நிலைகளிலும், பல முறைகளிலும்பெறலாம். இதனால் பல நாடுகளில் இன்று மூன்று வேறுபட்ட நிலைகளில் கல்வி வழங்கப்பட்டுவருகிறது. முறைமையானகல்வி (Formal Education), முறைசாராக் கல்வி (Non Formal Education); முறைமையில்லாத கல்வி (Informal Education) என்ற மூன்று நிலைகளில் மக்கள் கல்வியைப் பெறலாம். பாடசாலைகளில் வரையறுக்கப்பட்டகலைத்திட்டத்திற்கமைய நிறுவன ரீதியில் வழங்கப்படும் நியமமான கல்வி முறைமையான கல்வி எனப்படும். முறைமையில்லாக்கல்வி வெகுஜனத் தொடர்பு சாதனங்கள், சேமநல நிறுவனங்கள், மக்களைச் சமூகமயமாக்கும் சமயநிறுவனங்கள் போன்றவற்றால் வழங்கப்படுகின்றது. பாடசாலை வழங்காத கல்வியைப்பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்படும் கல்வியாக முறைசாராக் கல்வி விளங்குகின்றது.

### பாடசாலைக்கல்வியின் பயன் பொருத்தம்

பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையானதும் இம்முன்னேற்றத்திற்குத் தேவையான அடிப்படையைத் தேடிக் கொள்ள உதவுவதும் கல்வி, சரியான சமுதாய வளர்ச்சிக்கு இது ஒரு இன்றியமையாத நிபந்தனையாகும். சமுதாயத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், அதற்கானமனப்பாங்கை வளர்ப்பதற்கும் பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வி பயன் பொருத்தமானதா?

இவான் இலிச் என்ற கல்வியாளர் சமுதாயப் பொருளாதாரமுன்னேற்றத்துக்குப்பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வி பயன்பொருத்தமுடையதாக அமைவதில்லை எனக் கருதுகிறார். பாடசாலைகள் அவற்றின் சமூகத்தேவையையும், பயன்பாட்டையும் முழுமையாக இழந்துவிட்டனவென்றும் சமூகத்தில் மக்களைத் தரம்பிரிக்கும் நிறுவனங்கள் என்றவகையில் மாத்திரம் இவைகள் விளங்குகின்றன என்றும் கருதுகிறார். ஆகவே முன்னேற்றத்திற்கான தேவைகளை நிறைவேற்றுவதற்கு முறைசாராக்கல்வி முக்கியமாகும். இதனால் இன்று முறைமைசார் கல்வியைவிட முறைசாராக்கல்வி பயன்பாடு உடையது என்பது இதன் மற்றொரு பண்பாகும்.

முறைமைசார்கல்வி சமூகத்துக்கு வேண்டியபங்களிப்பைச் சரியாகச் செய்யவில்லை என்பதும், தற்காலச்சமூகம்வேண்டி நிற்கும் பயன்பாட்டை வழங்கவில்லை என்பதும் பலநாடுகளில் கண்டறிந்த உண்மையாகும். இந்தியாவில் எளியமக்கள் வகுப்பைப் பற்றிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் விசாரணைக் குழு அறிக்கை இதை ஊர்ஜிதப்படுத்துகிறது. எனவே பள்ளிகளில் கற்றவர்களும், மற்றவர்களும் பயன்படும் வகையில் பாடசாலைநிறுவனங்களுக்கு வெளியே உள்ளவளங்களைப் பயன்படுத்திப் பொருத்தமான கல்வியை வழங்கலாம் என்பது கல்வியாளரின் எதிர்பார்ப்பாகும். அத்துடன் இன்னோரன்ன காரணங்களால் படிப்பதற்குச் சந்தர்ப்பம் இழந்தவர்களுக்கும் முறைசாராக்கல்வி ஒரு வரப்பிரசாதமாகும். மற்றும்படி, கற்றவர்கள் புதிய மாற்றங்களோடும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளோடும்இசைந்துபோக முறைசாராக்கல்வி வகை செய்கிறது.

முதியோர் மத்தியில் விரிவான முன்னேற்றமும், வாழ்க்கைத்தர உயர்வும், அறிவுள்ள கருத்துக்களும், நாட்டில் சமூகப் பொருளாதார முன்னேற்றமும் வேண்டின் முறைசாராக் கல்வியே அவசியமாகின்றது. முதியோர் எழுத்தறிவற்றவர்களாக இருந்தால் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி தம் உழைப்பில் வெற்றி காண முடியாது. புதிய மாற்றங்களை ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். கிராமத்தில் பணிபுரியும் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் போன்றவர்கள் தாம் தொடர்பு கொள்ளும் மக்கள் எழுத்தறிவு அற்றவர்களாக இருந்தால் தாம் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியாது. மட்டக்களப்பில் சில கிராமங்களில குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் நடைமுறையில் இதே தடைபாடுகள் தான் எழுந்தன.

முறைசாராக்கல்வி முறையில் முதியோர் கல்வியைப் பயன்படுத்துவது இலங்கையில் — குறிப்பாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் தாழ்வான மட்டத்தில் தான் இருக்கிறது. அரசாங்க மட்டத்தில் முதியோர் கல்வி அதிகாரிகள், விரிவாக்க உத்தியோகத்தர்கள், பல்வேறு நிறுவனங்கள், அஞ்சல் வழிக் கல்வி நெட்பாண் போன்ற தொண்டர் ஸ்தாபனங்கள் இக் கல்வியை வழங்குகின்றன. முதியோர் கல்வியை வளர்ப்பதில் துணைசெய்வதற்கு வேண்டிய எழுத்தறிவு வகையானது பணிசார்பானது (Functional Literacy) என்பதினை மறந்து முதியோர் கல்வி அதிகாரிகள் ஆங்கில வகுப்புகளை நடாத்துவதும், மற்றும் வழமையான வகுப்பறைக் கற்றல் முறைகளைப் பயன்படுத்துவதையும் அவதானிக்க முடிகிறது.

### சோவியத்தில் முதியோர்கல்வி

பணிசார் எழுத்தறிவு என்பதன் பொருள் முன்னேற்றத்திற்கான விருப்பத்தைத் தூண்டி விடவும் முன்னேற்றத்திற்கான ஆற்றலைத் உருவாக்கவும் ஏற்ற வகையில் எழுத்தறிவை அமைத்துக் கொள்வது என்பதாகும். இத்துறையில் சோவியத் ஒன்றியத்தின் சாதனை பிரமிக்கத்தக்கது. புரட்சிக்குப்பின்

(15ம் பக்கம் பார்க்க)

# சமுத்திரா மல்ரி சேவிசஸ்

வேகமாய் சுழலும் காலச்சக்கரத்துக்கு ஈடுகொடுத்துவாழ இதயத்தால் துடிக்கும் ஈழம் வாழ் மக்களே!
உங்கள் தேவைகளை உணர்ந்து சேவைகளை உடனுக்குடன் வாரி வழங்கக் காத்திருக்கும் சமுத்திரா மல்ரி சேவிசஸ் நிறுவனத்தினர் தங்கள் சேவைகளைப் பன்முகப்படுத்தி, அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க கிளை நிறுவனங்களை குடாநாடு முழுவதும் விஸ்தரிக்க வுள்ளார்கள்.

★ திருமணசேவை (மணப்பந்தல்)—டாக்டர்கள், எஞ்ஜினியர்கள், எக்கவுண்டன்ஸ், பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், விவாகரத்துப் பெற்றவர்கள், தாரமிழந்தோர், வயது வந்தோர்வரை சகல தரத்திலும் எம்மிடம் மணமக்கள் இருக்கிறார்கள்.

★ மங்கலமென்ப மனைமாட்சி—வள்ளுவர். ★ இல்லறமல்லது நல்லறமன்று— ஔவை.
உங்கள் எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்க இன்றே எமது சேவையை நாடுங்கள்.

★ மின்சார உபகரணங்கள் / தளபாடங்கள் } வாங்கி விற்கும் சேவை

வெளிநாடு செல்வோர், பாவனையில் இல்லாது மேலதிகமான பொருட்களை விற்க விரும்புவோர் நியாய விலையில் உங்கள் பொருட்களை விற்பனை செய்வதற்கு எமது சேவையை நாடுங்கள். பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புவோரும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

## ★ காணி, வீடு வாங்கிவிற்கும் சேவை:-

யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் காணிகள், வீடுகள் விற்பனை செய்து தரப்படும். உங்கள் காணிகளை / வீடுகளை வெகு விரைவில் விற்க எமது நிறுவனத்தை நாடுங்கள். காணிகள், வீடுகள் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் கொள்வனவுசெய்ய விரும்புவோரும் எமது சேவையை நாடுங்கள்.

## ★ சிறு உற்பத்தியாளர்களுக்கான சேவை:-

உங்கள் தொழில் நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் தரமான பொருட்களை மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையச் செய்வதற்கு அனுபவம் மிக்க எமது பிரதிநிதிகள் மூலமாக, விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்துதரப்படும்.

## ★ கடவுச்சீட்டு, பிறப்பு/ இறப்பு சாட்சிப்பத்திரங்கள் ஏற்பாடு செய்தல்:-

வெளிநாடு செல்வதற்கு கடவுச் சீட்டுகள், பிறப்பு/ இறப்பு சாட்சிப்பத்திரங்கள் என்பன எம்மால், விரைவில் செய்துதரப்படும். வீண் அலைச்சலையும்/ வீண் பொழுதையும் தவிர்த்துக்கொள்ள எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

## ★ தட்டச்சு இயந்திரங்கள் பழுதுபார்க்கும் சேவை:—

பழுதான நிலையில் மூலைக்குள் முடங்கிக் கிடக்கும் உங்கள் தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் அனுபவமிக்கவர்களால் திருத்தம் செய்து தரப்படும்.

## ★ படப்பிடிப்பு / வீடியோ படப்பிடிப்பு சேவை:—

திருமணங்கள், பிறந்த நாட்கொண்டாட்டங்கள் மற்றும் வீட்டில் பொது இடங்களில் நடைபெறும் எந்த வைபவகங்களுக்கும் படப்பிடிப்பு, வீடியோ படப்பிடிப்பு, ஒலி, ஒளி அமைப்பு என்பனவும் எம்மால் சிறந்த முறையில் செய்துதரப்படும், உங்கள் விழாக்களை சிறப்பாகவும், இலகுவாகவும் செய்து முடிக்க எமதுசேவையை நாடுங்கள்.

## ● கட்டிட வேலைப் பகுதி:-

(i) Architectural Designers
(ii) Engineers and Civil Engineers Contractors
(iii) Renovations (iv) Maintenance (v) Repairs

## ● உப சேவைகள்:-

1. காணி அளவிடுதல், பிரிவிடுதல் ஆகியவற்றுக்கான உத்தரவுபெற்ற நில அளவையாளர் சேவை.
2. வீட்டுக்கு நிலம் எடுத்தல்.
3. விவாகப் பொருத்தம் பார்த்துக்கொடுத்தல்.
4. வயரிங் வேலைகள் ஒப்பந்த அடிப்படையில்.
5. சட்ட ஆலோசனைகள் [உத்தரவுபெற்ற சட்டத்தரணிகள் மூலம்]

உங்கள் தேவைகளையே சேவை நோக்கமாகக் கொண்ட எமது கிளை நிறுவனங்கள் வெகுவிரைவில்

● சாவகச்சேரி ● சுழிபுரம் ● வேலணை ● கிளிநொச்சி

ஆகிய இடங்களிலும் நிறுவி கூடியபங்கு சேவையாற்றவுள்ளது.
உங்கள் தேவைகளை உடனுக்குடன் கவனித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
உங்கள் தேவைகள் எதுவாக இருந்தாலும் கடிதமூலமோ / நேரடியாகவோ தொடர்பு கொள்ளுங்கள்.

### சமுத்திரா தொடர்பு சேவை எமது சமுதாயத்தின் வரப்பிரசாதம்!

தொடர்பு முகவரி:

# சமுத்திரா மல்ரி சேவிசஸ்

இல: 303, பலாலி றோட், கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

கிளை நிறுவனங்கள்:

முருகமூர்த்தி லேன், நெல்லியடி, கரவெட்டி.

-:-

கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை.

# புதியன புகுத்தும் கல்வி வெள்ளை அறிக்கை!

**கு. சோமசுந்தரம்**
(கல்வி அதிகாரி, யாழ். கல்வித் திணைக்களம்)

மனிதனை மனிதனாக வாழ வைப்பதும் பின் இறைவனோடு ஒன்றத்துணையாக நிற்பதும் கல்வியாகும். கல்வியின் பண்பையும் பயனையும் நன்குணர்ந்து, பண்டுதொட்டு அதனைப்போற்றி வருபவர்கள் நாம். அந்நியர் ஆட்சிக்காலத்தில் குறிப்பிட்ட ஒரு சிலருக்கே கல்வியைப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. பெரும்பான்மையினருக்கு கல்வி பெறும் உரிமை மறுக்கப்பட்டது அந்நியரின் ஆட்சியை இலங்கையில் நிலைபெறச் செய்வதற்கும், பரிபாலனத்தில் உதவுவதற்கும் ஏற்புடைய கல்வியே இச்சிறு கூட்டத்தினருக்கு அளிக்கப்பட்டது. 1945 ஆம் ஆண்டு, கன்னங்கரா விசேட குழுவின் விதப்புரைகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்நாட்டின் கல்வி வரலாற்றில் மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அவையாவன: இலவசக் கல்வி முறை, அன்னை மொழிமூலம் கல்விப் போதனை, கிராமப் பிரதேசங்களில் மத்திய மகா வித்தியாலயங்கள் நிறுவியமை என்பனவாகும். இந்நிகழ்ச்சிகள் நாட்டின்கல்வியில் பெரும் திருப்பத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்தின. கல்விகற்க சமவாய்ப்பு, சமத்துவம் என்ற சனநாயகப்பண்புகள் பல்கிப் பெருகின. 1960ம் ஆண்டில், இலங்கை முழுவதிலும் தேசியக் கல்விமுறையை ஒரே சீராக நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றமை இன்னொரு முக்கிய நிகழ்ச்சி. நாடு சுதந்திரமடைந்தபின்னரும்கூட நீண்ட காலத்துக்கு ஆங்கிலேயர் காலக் கல்வி முறையே தொடர்ந்தும் நிலவி வந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில சீர்திருத்தங்களைப் புகுத்த முயற்சிக்கப்பட்டதே தவிர, நாட்டின் தேவைகளுக்கேற்ப கல்வி முறையை முற்றாக மாற்றியமைக்கமுடியவில்லை. 1962ம் ஆண்டின் தெசியக் கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை, 1964, 1965ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசாங்க அறிக்கைகள், 1967ம் ஆண்டின் கல்விமுறி ஆகியன கல்வியமைப்பினையும், பாடசாலை முறைமையினையும் மாற்றும் நோக்கங்களையும் உள்ளடக்கியிருந்தாலும், அவை நடைமுறைப்படுத்தப்பட முடியாமல் போய்விட்டன. பொருத்தமற்ற கல்வி முறையினால் படித்து சான்றிதழ் பெற்றுவிட்டு அதற்கேற்ற தொழில்கள் கிடையாமல் வேலையற்றிருக்கும்இளைஞர்களின்தொகை அதிகரித்தது. இளைஞர்கள் மத்தியிலே விரக்தி, குழப்பம், கிளர்ச்சிஏற்பட்டதைநாம்அறிவோம். 1971ம்ஆண்டு இளைஞர் கிளர்ச்சியைத் தொடர்ந்து 1972ம் ஆண்டில் நாட்டின் தேவைகளுடன் கல்வி முறையை இணைக்கக்கூடிய வகையில், கல்விச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. எனினும் இவை மக்களின் ஆதரவைப்பெறமுடியாமற்போயின. காரணம் இவ்வாலோசனைகள், நடைமுறைப்படுத்தப்படுவதறகுமுன் மக்களின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படாமையே எனலாம்.

## வெள்ளை அறிக்கை

இன்று எமது நாட்டின்பொருளாதார, சமூக மேம்பாட்டிற்குக் கல்வி உதவும் வகையில் அது புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அரசு கல்வி வெள்ளையறிக்கையைத் தயாரித்து மக்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்காகச் சமர்ப்பித்துள்ளது.

தத்துவம், கல்வி ஆகிய இரண்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு தத்துவம் கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. கல்வி செயல்பாடாக, சாதனையாக விளங்குகின்றன. தத்துவத்தின்பால் எழுந்த கல்வியே சிறந்தது, கல்வியின் விளைவாகப் பெற்ற அனுபவங்களும் தத்துவ வளர்ச்சிக்கு உதவுகின்றன. இந்தப் பின்னணியில் நாம் கல்வி வெள்ளையறிக்கையை நோக்குவோம். இதில் தரப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்திற்காய ஆலோசனைகளை முழுமையாக நோக்குமிடத்து, ஒரு வளர்முக நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் ஒழுக்கத் தேவைகளை நிறைவு செய்யும்பொருட்டு. அளிக்கப்படவேண்டிய சமநிலையும், ஒருங்கிசைவும் கொண்ட தேசியக்கல்வி முறைபற்றிச் சிந்தித்துள்ளமை தெளிவாகின்றது. நற்குடிமக்களை உருவாக்குதல்; மாபெரும் சொத்தான மனித மூலவளத்தைப்பயனுள்ளதாக்குதல்; கல்வியையும், பயிற்சியையும் தொழிற் சந்தைத் தேவைகளுக்கேற்ப இயக்குதல்; ஒவ்வொரு குடிமகனும் தன் ஆற்றலுக்கேற்பக் கல்வியில் அதியுச்சநிலையை அடைவதற்கு வாய்ப்பளித்தல்; வாழ்நாள் முழுவதும் கல்விபெற வாய்ப்பளித்தல்; கல்வியின் தரத்தை உயர்த்துதல் போன்றவற்றிற்கெல்லாம் இடமளிக்கப்பட்டிருக்கின்றது. இந்நாட்டின் கல்வி வரலாற்றில் முதன் முறையாக ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, மூன்றும் நிலைக்கல்வி, உயர் நிலைப் பல்கலைக்கழகக் கல்வி, தொழில், தொழில்நுட்ப, தொழில் நுணுக்கக் கல்வி ஆகிய பல் துறைக் கல்விகளையெல்லாம் உள்ளடக்கிச் செயற்படுத்தும் முறையினையும் இவ்வெள்ளையறிக்கை எமக்குக் கூறுகின்றது.

பொதுக் கல்வி முறையில் புகுத்தப்பெறவுள்ள மாற்றங்களில் முக்கியமானவை. பாடசாலைக் கல்வி அகற்சியினை மாற்றியமைத்தல், பாடவிதான மீளமைப்பு, பாட நூல்கள், பரீட்சைகள் என்பன தொடர்பான மாற்றங்களாகும். இம் மாற்றங்கள் பிள்ளையின் பூரண ஆளுமை வளர்ச்சிக்கு உதவுவதுடன். பிள்ளையை எதிர்கால சமூகத்தோடு பொருந்தி வாழவும், தொழில் புரியவும் ஏற்றவாறு தயார்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டவையாகும். பொதுக் கல்வியின் மொத்த ஆண்டுக்காலம் பதினொன்று. இதில் ஆரம்பக் கல்விக்கு ஐந்து ஆண்டுகளும், கனிஷ்ட இடைநிலைக்கல்விக்கு மூன்று ஆண்டுகளும், சிரேஷ்ட இடைநிலைக்கல்விக்கு மூன்று ஆண்டுகளும்தரப்பட்டுள்ளன. எட்டாம் வகுப்பு இறுதியில் பரீட்சை நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கம்படும். தற்போதைய க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைப் போன்று பதினொராந்தர இறுதியில் பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சை நடாத்தப்படும். பதினொரு ஆண்டுப் பொதுக்கல்வியைத் தொடர்ந்து 12.ஆம், 13ஆம்தரக் கல்லூரிக் கல்வி, அறிவுத்தேட்ட வகையான உயர் பல்கலைக் கழகக் கல்வியைத் தொடர விரும்புவோர்க்கு உரியது.

ஆரம்பக் கல்விக்குரிய காலம் ஐந்து ஆண்டுகளாகும். வீட்டுச் சூழலில்இருந்து முற்றிலும் புதிதான பாடசாலைச் சூழலுக்கு அடியெடுத்து வைக்கும் பிள்ளையின் தனித்துவத்தைப் பேணும் வகையிலும்; ஆக்கத் திறனையும், பல்வேறு வகை ஆற்றல்களையும் வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும் முறையிலும்; அநுபவங்களைப் பெறுவதற்கும் சூழலுடன் பொருந்தி இசைவுற நடந்து கொள்வதற்கும் ஏற்றவகையிலும் பாடவிதானம் அமைக்கப்படும். பாடங்களை ஒன்றிணைத்துக் கற்றல் முறையை ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் அதே வேளை, வாசிப்பு. எழுத்து என்பவற்றின் அடிப்படைத் தேர்ச்சிகள் புறக்கணிக்கப்படமாட்டாது. இவ்வாற்றல்களைப் பிள்ளைகள் வெறும் இயந்திர இயக்க முறையிலன்றி, தேர்ந்தறிபாங்கில் விளையாட்டு முறையில் விருப்பத்தோடு பயின்று கொள்ள உதவி வழங்கப்படும். பிள்ளைகளின் முருகியல் உணர்வு வளர்ச்சிக்குரிய அபிநயம், நடிப்பு, நடனம், பாடல், வரைதல் போன்றனவும், உடல் விருத்திக்குரிய தேகப் பயிற்சியும் பாடவிதானத்தில் இடம்பெறுகின்றன.

ஆறுந்தரம் முதல் எட்டாந் தரம் வரை உள்ள கனிஷ்ட இடைநிலைக் கலைத்திட்டத்தில், முதல்மொழி, சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, அழகியற் கல்வி, [illegible] த் தொழிற்றிறன்கள், உடனலவியல் உடலியற்கல்வியும ஆகிய ஒன்பது பாடங்கள் இடம் பெறுகின்றன. இவ்வாறே ஒன்பதாம் தரம் முதல் பதினொராம் தரம் வரை உள்ள சிரேஷ்ட இடைநிலைக் கலைத்திட்டத்திலும் மேற் கூறிய பாடங்களே ஒரு மாற்றத்துடன் போதிக்கப்படும். வாழ்க்கைத் தொழிற்றிறன்கள் எனும் பாடத்திற்குப் பதில் இங்கு தொழில் நுணுக்கப் பாடங்கள் கற்பிக்கப்படும். இப்பாடங்கள், தொழில்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவும், தொழில் மகத்துவத்தை உணர்த்தவும், தொழில் செய்யும் மனப்பாங்கினை ஏற்படுத்தவும் உதவுகின்றன. இடைநிலைக் கலைத்திட்டத்தில் ஒரு சமநிலையைக் காணமுடிகிறது.

## கல்வியும், வாழ்வும்

பொதுக் கல்வி, தனிய நூல் சார்ந்த கல்வியாக மட்டும் இருக்கக் கூடாது. அவ்வாறு, முன்னைய காலங்களில் இருந்தமையினாலேயே படித்துச் சான்றிதழ்களைப் பெற்ற இளைஞர்கள் உடைநலங்கா உத்தியோகங்களை நாடி அலைந்து கிடைக்காமையினால், வேலையற்றோராகி நாட்டுக்குச் சுமையாக உள்ளனர். கல்வியானது அறிவு, ஆற்றல்கள், மனப்பாங்கு ஆகியனவற்றை அளிப்பதாக அமைய வேண்டும். கல்விக் கூடங்கள் வாழ்க்கைக் கூடங்களாக இருக்கவேண்டும். குழந்தைகளின் உள்ளங்கள் தொழில் மகத்துவம் பற்றி மகோன்னத கருத்துக்களைக் கொண்டனவாக வளர்க்கப்படவேண்டும். கலைத்திட்டதில் வாழ்க்கைத்திறன் பயிற்சியும், தொழில் நுணுக்கப் பாடங்களும் இடம்பெற்றிருப்பது வரவேற்கக்கூடியதே, இவற்றின் மூலம் மாணவர்களை தொழிலுலகிற்கு அறிமுகப்படுத்துவதோடு ஒருதொழிலைக் கற்பதற்கும், பின்னர் செய்தற்கும் வேண்டிய உளப்பாங்கு, கைத்திறன்கள் உருவாக்கப்படுகின்றன. மேலும்தொழில் நுணுக்க கல்வியில் நாட்டமுள்ளவர்கள் கண்டுபிடிக்சப்பட்டு, பொதுக் கல்வியின் 9, 10, 11 ஆந் தரங்களுக்கு இணையான. க. பொ. த. தொழில் நுணுக்க நெறி வகுப்புகளிற் கற்க வாய்பேற்படுகின்றது. அன்றியும் பொதுக்கல்வி முறையில் தொழில் நுணுக்கப்பாடங்களும் போதிப்பதால் கருத்துக் கல்வியும் தன்னியக்க ஆற்றலும் ஒன்றிணையும். இது உடலுழைப்புத் தத்துவ அடிப்படையில் எழுகின்றதெனக் கொள்ள இடமுண்டு.

## மூன்றும் நிலைக் கல்வி

கல்வித்துறை முழுவதையும், பாடசாலை முறைமை, பல்கலைக்கழக முறைமை. மூன்றும் நிலைக்கல்வி என்று மூன்று பிரிவுகளுக்குள் அடக்கி விடலாம். மூன்றும் நிலைக் கல்வி என்பது தொழிற் கல்வியோடும், பயிற்சியோடும் கூடியது என்று பருமட்டமாகக் கூறலாம். இத்தகைய தொழில், தொழில் நுட்ப, தொழில் நுணுக்கக் கல்வியையும் பயிற்சியையும் பெறுவதன் மூலம் மாணவன் தொழிலுலகிற்கு இட்டுச் செல்லப்படுகிறான். இந்நாட்டின் கல்விமுறைமைகளைச் சீர்திருத்த எடுக்கப்படும் முயற்சிகளில் இம் மூன்றும் நிலைக்கல்வியையும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியம். அந்த அவசியம். இந்த வெள்ளை அறிக்கையயில் உணரப்பட்டிருப்பது தெரிகிறது. என்வே, மூன்றும் நிலைக் கல்வி பற்றி இதில் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஆலோசனைகள் வரவேற்கப்படவேண்டியன.

இவ்வெள்ளை அறிக்கையின் அறிமுகமாகக் கூறப்பபட்டு உள்ள கருத்துக்கள் இந்நாட்டுப் பொருளியலுக்கும், கல்விக்கும் தொடர்புடையனவாக இருக்கின்றன. மூன்றும் நிலைக் கல்வி இத்தொடர்பை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

பாடசாலைகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் வெளியே ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பல்வேறு செயற்திட்டங்களையும் ஒன்றிணைத்து விரிவுபடுத்திப் பன்முகப்படுத்துகின்ற பணியை இவ்வாணைக்குழு பொறுப்பேற்று நடத்தும் - இவ்வாணைக்குழுவினால் தொழில் நுணுக்கக் கல்வி அதிகார சபைகள் நிறுவப்படும். இவை எல்லாமட்டங்களிலுமான தொழில் நுணுக, தொழில் முறைக் கல்வியை ஒழுங்குபடுத்தி, நடத்திச் சான்றிதழ்களை வழங்கும் தொழில் நுட்பக் கல்வி நெறிகள், சீவனோபாயக்கல்வி நெறிகள். விவசாய கல்வி நெறி, ஆசிரியர் கல்வி, தாதிப் பயிற்சி கைத்தொழிற் பயிற்சி, கவின் கலைகள் போன்றன வற்றை அளிப்பதற்கு நிறுவனங்கள் நிறுவப்படும் என வெள்ளையறிக்கை கூறுகிறது. விவசாயக் கல்விக்கும் பயிற்சிக்கும் விவசாயக் கல்விச்சபை நிறுவப்படும். ஆங்கிலமொழி மூலம் குறிப்பிட்ட சில தொழில் நுணுக்கப் பாடங்களைப் போதித்தல் திறந்த பாடசாலை, திறந்த பல்கலைக் கழகம் ஆகிய முறைகளின் மூலம் மூன்றும் நிலைக்கல்வியையளித்தல் என்பன குறிப்பிடத் தக்க ஒழுங்கு முறைகளாகும்.

இத்துணைநல்ல, சிறந்த அம்சங்களைக் கொண்ட இவ் வெள்ளையறிக்கையைப் பற்றி மக்கள் மத்தியில் பீதி இருக்க வேண்டிய அவசியமே இல்லை, மாற்றங்களுக்கு நெகிழ்ந்து கொடுக்காத இயல்பினை எம்மவர் கொண்டமையினாலேயே மாற்றங்களைக் கண்டு அஞ்சுகிறார்கள். மாற்றம் என்பது வளர்ச்சியே நாம் வளர வேண்டுமானால், வாழ்க்கையில் உயர வேண்டுமானால் நல்ல மாற்றங்களுக்கு முகம் கொடுகத்தான் வேண்டும்.

''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே.''

## கல்வியும் அரசியலும்

கல்வியும் அரசியலும் ஒன்றோடொன்று இணைந்தவை. கல்வி அரசியற் தத்துவத்தின் அடிப்படையில் வளரவேண்டும் என்று கொள்வோர் உளர். அரசியலுக்கும் கல்விக்கும் இடையிலுள்ள தொடர்பு தத்துவஞானி பிளேட்டோ வாழ்ந்தகாலத்திலேயே உணர்ந்து வலியுறுத்தப்பட்டது. அரசியல் விவகாரங்கள் எல்லாவற்றுள்ளும் கல்வியேமுக்கியமானது என்று பிளேட்டோ கூறினார். அரசியல் தத்துவமும், கல்வித் தத்துவமும் சமூக நலனில் அக்கறை உள்ள தத்துவங்களாகும். மக்கள் நலன் பேணுதல் அரசின் கடமையாகும். மக்கள் நலன்பெற அவர்களுக்குக் கல்வியளிக்கப்படல் வேண்டும். சமூகமுன்னேற்றங்களுக்கும் அடிப்படைத் தேவையாக விளங்குவது கல்வியாகும். எனவே நலன்புரிகின்ற அரசு கல்வியில் அதிக சிரத்தை காட்டவேண்டும்.

—பேராசிரியர் ப. சந்திரசேகரம்

★

எவனொருவன் பிள்ளைகளின் கல்விக்கு ஏற்ற சூழல் ஏற்படுத்தத் தவறுகிறானோ அவனுக்கு தந்தையாகும் உரிமைஇல்லை.

—ரூஸோ

★

நவீன கல்வி முறையானது, படிப்பித்தலையே வாழ்க்கையாகக்கொண்ட ஆசிரியர்களின் கருத்துக்களையும் கொள்ளாது, தனி அரசியல் வாதிகளாலோ, அரசாங்க நிறுவனங்களாலோ அல்லது தத்துவ வாதிகளாலோ தனித்து முடிவுகளை எடுக்கக் கூடியளவு சிக்கல் அற்றதல்ல.

—ரெனி மெஹ்யு

★

மனித வாழ்க்கையின் துக்ககரமான அம்சம் யாதெனில், மனிதர் தவிர்ந்த ஏனையவற்றை கட்டுப்படுத்த நாம் கற்ற அளவு, மனிதரை மனிதர் நேசிப்பதை கற்கவில்லை.


—பேரா டொன்பீ

★

ஒரு நாட்டின் கல்விக் கூடங்களின் கருமமானது அதன் புனிதத்தன்மையைக் காப்பாற்றத் தக்கதாகவும், அதன் வரலாற்றுப் பெருமைக்குரிய சமூகத்தை காப்பாற்றும் வகையிலும், கடந்தகால சாதனைகளை நிலைநிறுத்தத் தக்கதாகவும், சிறந்த எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

—சே. பேர்ஸி நன்

# ஜனர்த்தன்ஸ் வாழ்த்து!



அவலத்துக்குள்ளாகி வரும்
நமது கல்வி சிறப்புற்றுத் தழைக்க


## எமது ஆசி!!



உயர்ரக உருக்குத் தளபாட [STEEL]
உற்பத்தியின் முன்னோடிகள்

## ஜனர்த்தன்ஸ்






கல்லூரிகள், பாடசாலைகள்,
தனியார் கல்வி நிறுவனங்கள், அலுவலகங்கள்,
இல்லங்கள், மருத்துவமனைகள்
யாவற்றுக்கும் அமைவாகத் தொகையாகவும்,
மலிவாகவும், ஜனர்த்தன்ஸ் உருக்குக்
கதிரைகளை ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம்.

இறைவனுக்குச் சமமான கல்வியின் நோக்கத்தை நன்குகப்
புரிந்துகொண்டு அதற்கேற்ப விருப்பு வெறுப்பின்றி
முடிவு எடுக்கக்கூடிய நிபுணர்களே எமக்குத் தேவை.

—சேர் பொன். இராமநாதன்





பாடத்திட்டம் மாணவனையே மையமாகக் கொண்டு,
சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுபவையாய்
இருத்தல் வேண்டும். —ரூஸோ

# JANARDEN'S INDUSTRIES

K. K. S. ROAD, -:- INUVIL.

# ஆரம்பக் கல்வித் திட்டத்தின் பொது நோக்கங்கள்

க. கணேசலிங்கம்

குழந்தைகள் பல புதிய அனுபவங்களைப் பெறுவதும் தம்மைச் சுற்றி நடப்பவற்றை நன்கு அறிந்துதெளிந்து நாளாந்த முன்னேற்றங்களில் தம்மையும் ஈடுபடுத்துவதும் விசாரணையுடன்கூடிய ஆராய்ச்சி மனோபாவத்தை, தர்க்க ரீதியான சிந்தனையை வளர்த்துக் கொள்வதும் அறிவையும் திறமைகளையும் விருத்தி செய்யவும் கருத்துக்களைப்பரிமாறிக் கொள்ளவும் அழகியலறிவைச் சுவைக்கவும் விருத்தி செய்யவும் உதவுவதும், பிரச்னைகளை விஞ்ஞானரீதியில் அணுகும் மனப்பான்மையை வளர்ப்பதுமே இன்றைய ஆரம்பக் கல்வியின் பொதுநோக்கங்களாக இருந்து வருகின்றது.

இந்தப்புதிய ஆரம்பக் கல்வித்திட்டம் செயல்படுத்தப்படும் போது ஒவ்வொரு மாணவனின் நோக்கும் திறன் (Observation) பாகுபடுத்தும் திறன் (Anlytical) நேர்த்தியாகத் திருப்பிச் சொல்லும் திறன் (Reproducing C pacity and presentation) ஆகிய கலைகள் வளர்க்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாளாந்த வாழ்க்கைக்கு உதவக்கூடியவகையில் கேட்டல், பேசுதல், எழுதுதல், கருத்துப் பரிமாறுதல் போன்ற தொடர்புகொள் திறன்களை விருத்திசெய்தல், அன்றாடத் தேவைக்கு ஏற்ப கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு வேண்டிய கணித அறிவையும், திறன்களையும் விருத்திசெய்தல், விஞ்ஞானரீதியான சிந்தனைக்கும் அவதானத்துக்கும் வழிப்படுத்தல், சுயாதீனமாகவும் ஆக்கபூர்வமாகவும், திறனுய்வுடன் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான திறனை விருத்திசெய்தல். ஆக்க சிந்தனையை விருத்தி செய்வதற்கான மொழிசார், மொழிசாராத்திறன்களை வளர்த்தல், பௌதிக, சமூக, கலாசார பண்பாட்டுத்துறைகளில் பொது அறிவைப் பெறுதல், பரந்த மனப்பாங்கை விருத்தி செய்தல், ஆக்கப்பொருள்களை ஆக்கிக்கொள்ளும் திறனைப் பெறுதல்ஆகிவையும்நோயற்ற வாழ்வுக்குத் தேவையான நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்களையும், சுகாதார அறிவையும் வழங்குதல், இத்தகைய பழக்கவழக்கங்களை விருத்தி செய்தல் ஆகியவையும் இந்த நோக்கங்களில் சிலவாகக் கருதப்படுகின்றன,

கல்வி முக்கியமாக ஒரு பிள்ளையை சமூக இசைவாக்கத்திற்குட்படுத்தவும் தனித்துவமும் ஆளுமையுமுள்ள மனிதனுக ஆக்கவும் பயன்படவும் வேண்டும். இந்தப்பண்புகளை மாணவர்களிடையே வகுப்பறைக் கல்வியினுல் மாத்திரம் உருவாக்கமுடியாது. எனவே தான் கல்விவள்ர்ச்சியடைந்த மேல்நாடுகளில் மாணுக்கரின் திறன்களை அபிவிருத்திசெய்யப் புதிய கற்பித்தல் முறைகள் கையாளப்படுகின்றன.

சூழல் தொடர்பான விஞ்ஞான ரீதியான மனப்பாங்கை வளர்த்தல் (மாணவர் தாம் வாழும் சூழலை உற்றுநோக்கி ஆராய்ந்து கண்டவற்றை ஒழுங்குபடுத்தவும், தர்க்க ரீதியான சிந்தனையை வளர்க்கவும் விஞக்களைஎழுப்பி விடைகாணவும், அறிவையும், திறமைகளையும் விருத்திசெய்யவும், கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவும் அழகியலறிவைச்சுவைக்கவும் விருத்தி செய்ய உதவுவது) அழகினை இரசிப்பதற்கு வேண்டிய ஆற்றலையும் திறனையும் வளர்த்துக்கொள்ளல், பொது இடங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு வேண்டிய பின்னணியை ஏற்படுத்துதல், சூழலைப்பாதுகாக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தை உணரவைத்தல், பொதுச்சொத்துக்களைப் பாதுகாக்கவும் சட்டங்களுக்கு மதப்பளிக்கவும் வழிப்படுத்தல், சமாதானத்துக்கு வழிப்படுத்தல், பிறருக்கு உதவும் பண்பு, கூட்டியக்கம், ஒத்துழைப்பு, நெகிழ்வு, துணிவு, கனிவு, ஆகிய பண்புகளை விருத்திசெய்தல் - இவையும் ஆரம்பக்கல்வியின் நோக்கங்களாக இருக்கின்றன.

உறுதியும் ஊக்கமும்நல்கிடும் கருத்துக்கள், பக்குவமான பாதுகாப்புணர்வுஇவைபிள்ளைகளுக்கு இளமையிலிருந்தே போதிக்கப்பட வேண்டியவை.

எதிர்காலக் கல்விக்கு அடிப்படையான திறமைகளை உருவாக்குவதற்கும் தாம் பெற்ற அநுபவங்களைப்பகிர்ந்துகொள்ளத தூண்டுவதற்கும் ஆரம்பக்கல்வி வழிஅமைக்கின்றது.

இதற்கான அறிவுரைகளைப் பிள்ளைகள் செவிமடுக்கவைத்தல் அவசியமாகின்றது.

மகிழ்ச்சிகரமானதொரு சூழ்நிலையிலேயே கற்பித்தல் சிறப்பாக நடைபெறவாய்ப்புண்டு. இதனைக் கருத்தில்கொண்டு இதற்கானதொரு சூழ்நிலையை உருவாக்குதல் நல்ல பயனை அளிக்கும்.

கலந்துரையாடல்கள் கருத்தரங்குகள், கண்காட்சிகள், படக்காட்சிகள் ஆகியன மாணவனை வகுப்பறைக்கு வெளியே கொணர்ந்து கல்வியூட்டும் வழிமுறைகளாக இருக்கின்றன. ''செய்து காட்டுபவர்கள் தான் குழந்தைக்குத் தேவை; குறைகாண்பவர்களல்ல'' என்பதும் உணரப்படுதல் நல்லது. குழந்தைகள் தாம் அறிந்ததிலிருந்து அறியாததைக் கற்றுக்கொள்ள வேண்டும். பல செயல்களைச் செய்து, ஆராய்ந்து விளையாடிப் பல விடயங்களைக்குழந்தைகள் அறிகின்றனர்.

## விளையாட்டு

பாலர்வயதிலேயே குழுவாக இயங்கும்போது ஒரு நற்பிரஜைக்குத் தேவையான பண்புகள் அனைத்தும் அப்பிஞ்சு உள்ளங்களில் பதியப்படுகின்றன. மற்றவர்களை மதித்தல், விட்டுக்கொடுத்தல், உதவுதல், தலைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிதல் போன்றவையைத் தாமாகவே பாலர்கள் பழகிக் கொள்கின்றனர்.

பாலர்களைக் குழுக்களாக அமைத்துச் செயல்பட விட வேண்டும். இதற்கு விளையாட்டு முக்கியமானது. அப்போது தனக்குத்தெரியாததை மற்றவர்களிடமிருந்து அறிய வசதி ஏற்படுகிறது. இதனுல் தனிமை என்ற உணர்வு நீங்கிக்கற்றலில் கவனம் செல்கின்றது.

இவ்வயதுப் பிள்ளைகள் குறிப்பாக இதேவயதுடைய ஏனைய பிள்ளைகளைச் சந்தித்து அவர்களுடன் கலந்து பழகவும் விளையாடவும், பொருள்களைப் பகிர்ந்து கொள்ளவும் கற்க வேண்டியது அவசியம். மற்றவர்கள் செய்வதைத் தானும் பின்பற்றிச் செய்வதன் மூலமும் (தமது கற்பனு சக்தியைப் பயன்படுத்தி) விளையாட்டுக்களைப் புதிதாக 'உருவாக்குவதன்' மூலமும் பிள்ளைகள் கற்கின்றனர்.

விளையாட்டுக்கள் மூலம் சுயமாகச் சிந்திக்குபோது பலவித ஆக்கங்களை அவர்கள் வெளிப்படுத்துவர்.

பிள்ளைகளுக்கு கதை சொல்வது அவர்களுடைய கற்பனையை அபிவிருத்திசெய்வதற்கு நல்லதொரு சிறந்தவழியாகும்.

## ஆடல் பாடல்

ஆடல்பாடல்களிலே சிறுவர்களுக்கு விருப்புண்டு. இந்த விருப்பத்திற்கேற்ப ஆடல் பாடல்களில் அவர்களை ஈடுபடுத்துவதால் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புண்டாகும்.

குழந்தைகள் பாடி, ஆடி மகிழவும் பண்பான நெறி முறைகளை உணரவும் உதவும் குழந்தைப்பாடல்கள் குழந்தைகளுக்குப் பெரிதும் தேவைப்படுகின்றன. இரசிப்புத்தன்மையை விருத்திசெய்யவும் இது வழிவகுக்கின்றது.

கடின உலோகம் இரும்பு;
கண்ணில் விழுவது துரும்பு;
மலராமுல்லை அரும்பு;
இனிப்பாய் இருக்கும்
கரும்பு.

இதுபோன்ற பாக்கள்ஆடிப் பாட உதவலாம்.

நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான பேச்சாற்றலை வளர்த்தல் பேச்சுப்பாடத்தின் நோக்கமாக இருக்கின்றது.

பலவித விஷயங்களைத் தொடர்புபடுத்தும் போது அவைகருத்துள்ளவையாக அமையவேண்டும். குழந்தைகளின் தரம் உணர்வு ஆகியவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

பண்புடனும் இனிமையுடனும் நிதானத்துடனும் பேசும் பேச்சாற்றலை வளர்த்தல், சமூகத்தேவைக்கேற்பவும் சுயதேவைகளுக்காகவும் பிறருடன் உரையாடுதல் குறிப்பிட்டதலையங்கத்தில் மாணவர் மன்றக்கூட்டங்களிற் பேசும், கதைசொல்லும் ஆற்றலை வளர்த்தல், நாடகம் நடித்தல், பாடல் இசைத்தல், இயல்பாகப் பேச்சிற் காணப்படும் உவமானம் எதுகை மோனை போன்றவற்றின் உபயோகத்தை விருத்திசெய்தல், செம்மையான மொழியை உபயோகித்தலும் பேசும் ஆற்றலை வளர்த்தலும் பேச்சாற்றலை விருத்தி செய்யும் நோக்கமாக இருக்கிறது.

அனுபவங்களையும் இலகுவான தகவல்களையும் தெளிவாகவும், சுயமாகவும் வெளிப்படுத்தும் ஆற்றலை விருத்தி செய்தல், ஏற்ற அபிநயத்தோடு பேசும் ஆற்றலைவிருத்தி செய்தல், பிறருடன் அன்பாக பேசும் ஆற்றலை வளர்த்தல், சொற்களைச் சரியாக உச்சரிக்கும் ஆற்றலை விருத்திசெய்தல், புதிய அனுபவங்களை ஏற்படுத்தி உரையாடலுக்குத் தேவையான சொற்களஞ்சியத்தை விருத்திசெய்தல் நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான பேச்சாற்றலை வளர்த்தல், செவிமடுப்போரின் தரத்தையும் இரசிப்பையும் உணர்ந்து பேசுமாற்றலை விருத்தி செய்தல், பொருத்தமான தொனிவேறுபாடு உணர்ச்சி வெளிப்பாடு ஆகியவற்றை விருத்திசெய்தல் இவற்றுக்குப் பேச்சுப்பாடம் உதவுகின்றது.

மொழிக் கல்வியில் பேச்சும் வாசிப்பும் எழுத்தும் இன்றியமையாதவை; நெருங்கிய தொடர்புடையவை, பேச்சுப் பாடம் வாசிப்புக்கு முகஞ்செய்வதாய், கலந்துரையாடல், எல்லாரும் சேர்ந்து சொல்லல், எல்லாரும் சேர்ந்து பாடல் என்னும் அங்கங்களை உடையதாய் அமையும். சொற்களைச் சரியாக உச்சரிப்பதிலும் தகுந்த தரிப்புக்களுடன் ஒலிப்பதிலும் மாணவர்களுக்கு முதன்மையான பயிற்சியைத் தருவது பேச்சுப்பாடமேயாகும்.

## உச்சரிப்பும் கேட்டலும்

உச்சரிப்பு ஒருமொழியைத் திருத்தமாகவும் தெளிவாகப்பேசவும் எழுதவும் இன்றியமையாததாகும். எழுத்துப்பிழையின்றி எழுதவும் பிள்ளைகளுக்கு இது உதவுகின்றது. பொருள்விளக்கத்தோடு வாசிக்கும் ஆற்றலையும் இது வளர்க்கிறது,

கதைகள், கவிதைகள், உரையாடல்கள், நாடகங்கள் ஆகியவற்றை நயக்கும் வகையில் செவிமடுத்தல், பண்புடனும் பொறுமையுடனும் செவிமடுத்தல், ஒருவர் பேசுவதை அல்லது வாசிப்பதை நீண்ட நேரம் கேட்டுக் கிரகித்துக் கொள்ளும் ஆற்றலை வளர்த்தல், கேட்டவற்றைப் பற்றிச் சிந்தித்தலும் விஞஎழுப்பலும் போன்றவற்றை கேட்டல் மூலம் விருத்திசெய்யலாம்.

இலகு நடையிலமைந்த செய்திகள், அறிவுரைகள் கட்டளைகள் போன்றவற்றைக் கேட்டு அவற்றுக் கேற்பத் துலங்குமாற்றலையும் இதன் மூலம் விருத்திசெய்யலாம்.

## வாசிப்பு

பிறருக்கு விளங்கவைத்தல், இன்பத்துக்காக வாசித்தல் இரண்டும் வாசித்தலில் அடங்கும்.

இதன்போது குழந்தைகள் பற்றிய கதைகள், அன்றுடம் பெறும் விசேடமான நிகழ்ச்சிகள் ஆகியவற்றையும் உபயோகிக்கலாம். இதனுல் குழந்தையின் ஆர்வம் பெருகும்.

சொற்களஞ்சியத்தை விருத்தி செய்யும் நோக்குடன் சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறிய கதைகள் ஆகியவற்றை வாசித்தல் நலம், அகராதியைச் சொந்தமாகத் தயாரித்தல், உரைப்பகுதியைவாசித்து நயக்கும் திறனை வளர்த்தல், செய்யுளை வாசித்து நயக்கும் திறத்தினை வளர்த்தல் உரைப்பகுதி ஒன்றை வாசித்து முக்கிய அம்சங்களைக் குறித்து கொள்ளுமாற்றலை வளர்த்தல், கேட்கப்படும் கேள்விகளுக்கு விடை அளிப்பதற்காக குறிக்கப்பட்டநேரத்தில் மௌனமாக ஒரு பந்தியை வாசித்துக் கிரகித்துக் கொள்ளும் தன்மையை விருத்தி செய்தல், வாசிக்கும் வேகத்தை விருத்திசெய்தல் வரைபடங்கள், குறியீடுகள் ஆகியவற்றை விளங்கிக்கொள்ளுதல் இவைவாசிப்புப்பாடத்தின் சில நோக்கங்களாக அமைகின்றன.

பேச்சு வழக்கிலே திரிபு பெற்றுவரும் சொற்களின் முறைமையான வடிவங்களைப் பயின்று பழகுவதற்கு எழுத்துப்பயிற்சி பெருவாய்ப்பினை நல்குகிறது. சரியாக எழுதும் பழகத்தினை இளமை தொட்டே வளர்த்துவரல் நன்று. எழுத்துப் பயிற்சி இதற்குத் துணை நிற்கும்.

தனக்குத் தெரிந்த சொற்களையே எழுதிவாசிக்கப்பழகும் போது தாம் பலவற்றைக் கற்றுவிட்டோம் என்ற மகிழ்ச்சி ஏற்படுகின்றது: இந்தமகிழ்ச்சியால் மேலும் கற்கவேண்டும் என்னும் ஆவல் ஏற்படுகிறது.

கற்பித்தல் தொடர்பாக உள்ள கொள்கைகளை மாத்திரம் பின்பற்றுமல் ஒவ்வொரு குழந்தையின் நிலைக்கும் தகுந்தவாறு விசேட உதவியும் அப்பியாசங்களும் பெற்றுக் கொடுப்பது திறமை வாய்ந்த ஆசிரியரின் செயலாகும்.

கற்றலுக்குத் தேவையான திறன்கள், மனப்பாங்குகள் பழக்கங்கள் ஆகியனவற்றை விருத்தி சேய்தல் கற்றலுக்காகத் கல்விக் கருத்தினைஉணரவைத்தல் இவையெல்லாம் நல்ல அம்சங்களாகும்.

## முழுமை

மாணவர் பயிலும் கல்வியானது தனித்தனிப் பாடங்களாகத்துண்டுபட்டு நில்லாமல், உள்ளுறவுகளும் இடைத் தொடர்புகளும் கொண்ட முழுமையான தொன்ருக இருத்தல் வேண்டும் என்ற நோக்கா் பிரதானமானது.

## சுற்றுடற்கல்வி

ஒன்றிணைந்த சுற்றுடற் கல்விப் பாடத்திட்டத்தில் ஒவ்வொரு தலைப்புக்களின்கீழும் தரப்பட்டுள்ள அலகுகளை மட்டுமின்றி குழந்தைகள பற்றிய கதைகள், குழந்தைகளின் வாசிப்புப் புத்தகம், அன்றுடம் நடைபெறும் விசேஷமான நிகழ்ச்சிகள் ஆகியவற்றையும் உபயோகிக்கலாம். இவ்வாறு உபயோகிக்கும் போது குழந்தைகளின் ஆர்வம், விருப்பு, குழந்தைகளின் தரம், உணர்வு ஆகியவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும். பலவிடயங்களைத் தொடர்வு படுத்தும்போது அவை கருத்துள்ளதாக அமைய வேண்டும்.

## விஞ்ஞானம்

இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாடத்திட்டம் மாணவர்களிடையேவிசாரணையுடன் கூடிய உள்ளத்தையும், பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியில் அணுகும் மனப்பான்மையினையும் வளர்ப்பதை அடித்தளமாகக் கொண்டுள்ளது.

வளர்ந்துவரும் சமுதாயத் தேவையை நிறைவு செய்து மனிதன் பூரணத்துவமான வாழ்க்கை வாழ்வதற்கு விஞ்ஞானக் கல்வி மிகவும் அவசியமானது. இதனைக் கருத்தில் கொண்டே இன்றைய ஆரம்பக் கல்விப்பாடத்திட்டத்தில் விஞ்ஞானக்கருத்தில் கொண்டே இன்றைய ஆரம்பக்கல்விப் பாடத்திட்டத்தில் வஞ்ஞானப்பாடம் சேர்க்கப்பட்டுள்ளது. மாணவர்கள் எதிர்கால வாழ்க்கைக்குத் தம்மைத் தயார்ப் படுத்திக்கொள்வதற்கும் இக்கல்வியறிவு மிகவும் உதவுகின்றது. எதிர்காலக் கல்விக்குத் தேவையான அடிப்படையான திறமைகளையும் உருவாக்கவும் இக்கல்வி உதவுகின்றது.

## ஆக்கத்தொழில்

மாணவர் தாமே செயல் படத்தூண்டுவிப்பதும் இதன் மூலம் அவர்கள் தமக்குரிய அறிவு, திறன், அனுபம் என்பவற்றை பெறத்தூண்டிவதும் அனுபவத்தேடலுக்கு நம்பிக்கை கொள்ளச் செய்யத்தூண்டுதலும் திறமைகளை வெளிக்கொணரத் தூண்டுதலும் ஆக்கத் தொழிற்பாட்டின் குறிக்கோள்.

ஆக்கத் தொழிற்பாட்டில் முப்பரிமாணமும் ஆக்கப் பொருள்களினூடாகக் கருத்து வெளிப்பாட்டை மாணவர் வெளிப்படுத்த ஊக்குவிக்கப் படலாம்.

பட்டங்கள், முகமூடிகள், பொம்மலாட்டப் பொம்மைகள், வெளிச்சக் கூடுகள் முதலி

(14 ம் பக்கம் பார்க்க)

# வர்க்க சமுதாயத்தில் கல்வியின் அடிப்படையும் அதன் நோக்கமும்

அமரர் மு. கார்த்திகேசன் அவர்கள், எதிர்க் கட்சியினர் உட்படச் சகலராலும் 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' என்று அன்போடும், மதிப்போடும் அழைக்கப்பட்டவர். அரசியல் துறையில் மட்டுமன்றி, கல்வித்துறையிலும் அரிய சாதனைகள் புரிந்தவர். யாழ். இந்துக்கல்லூரியில் அதிபராகப் பணிபுரிந்த குறுகிய காலத்தில்; கல்வி என்பது நிருவாக இயந்திரத்தின் சட்ட வரம்புகள் தளர்த்தப்பட்டு சகல மக்களும் கல்வி பெறக்கூடிய சந்தர்ப்பம் அளிக்கப்படுவதன் மூலமே அதன் பயன்பாட்டைப் பெருக்கமுடியும் என்று ஓரளவு செய்துகாட்டியவர். இக் கருத்தினையே இக்கட்டுரையில் அவர் வலியுறுத்துகிறார்.

— நன்றி: 'களனி'

### ✯ மு. கார்த்திகேசன்

சரி பிழைகளைச் சொல்வதற்குதமக்கு அதிகாரம் உண்டு என ஒவ்வொருவரும் கருதுகின்ற விடயம் கல்வியாகும். அது சட்டமாக இருந்தாலென்ன, மருத்துவமாக இருந்தாலென்ன, பொறியியலாக இருந்தாலென்ன அல்லது கலையாக இருந்தாலென்ன அங்கு ஒரு கருத்தை வெளியிடுவதற்கு ஒரே விதமான உற்சாகமும் உறுதியும் இருப்பதில்லை. அவைகள் நிபுணர்களால் மட்டும் கருத்துக்கள் சொல்லப்படும் தலைப்புக்களாக கருதப்படுகின்றன. ஆனால் கல்வித் துறையைப் பொறுத்தவரை எவராயினும் தமது கருத்தை வெளியிடக் கூடிய ஒரு துறையாகக்கருதப் படுகின்றது.

இது ஏனெனில் கல்வி சிறு பிள்ளைகளுடன் சம்பந்தப்படுவதாலும் அத்துடன் எந்த வயது வந்தவனும் சிறு பிள்களுக்குஎது நல்லது என்பதைச் சொல்வதற்கு ஏற்ற முதிர்ச்சி உள்ளவன் தான் என்று கருதுவதாலுமாக இருக்கலாம். இன்றுகல்விசர்வவியாபகமானதாகத் கருதப்படுகிறது என்ற உண்மையும் சில வேளைகளில் மற்றக்காரணமாகவும் இருக்கலாம். ஆகவே கல்வி சம்பந்தமாகச் சரி பிழைகளைக் கூறுவதற்கு எவராயினும் போதியளவு கற்றுள்ளார்கள்.

ஆனால் பிரச்னை என்னவென்றால் கருதப்படுவதைப்போன்று கல்வி சர்வவியாகமானதா? இல்லையா? என்பதே. கூடுதலாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் கல்வி சர்வ வியாபகமானதாக மட்டுமல்ல, சட்டாயமானதாகவும் கருதப்படுகின்றது. பரந்த அளவிற்கும், ஒரு உயர்ந்த மட்டத்திற்கும் கல்வியை வளர்ச்சியுறுத்தக் கூடிய நாடு என்றுகருதப்படும் இலங்கையை எடுத்துக்கொண்டால், இந்தநாட்டின் எல்லாப் பிள்ளைகளுமே பாடசாலைக்குப் போகிறார்களா? இல்லை. அவர்கள் அப்படிச் செய்திருந்தாலும் கூட அவர்கள் எல்லோருமே சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கல்வியின் அடிப்படை, ஆகக்குறைந்த மட்டத்தைப் பூர்த்தி செய்கின்றார்களா? இல்லை.

இன்று இந்த இருபதாம் நூற்றுண்டில் சர்வ வியாபகமான, கட்டாயமான கல்வித் திட்டத்தின் கீழ் இதுதான் நிலையென்றால் கடந்த காலத்தின் நிலைமை என்ன? அன்று நிலைமை மிகவும் மோசமானதாக, ஜனத்தொகையில் மிகச் சிறுபான்மையினரின் வரம்புக்குள் மட்டும்தான் கல்வி இருந்தது. பாடசாலைக்கு அனுப்புவதற்கு வசதிபடைத்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு அல்லது சமுதாயத்தில் தமது வேலைகளைச் செய்வதற்காகப் படிப்பிக்கப்பட வேண்டிய சமூகத்தின் பிரிவுகளைச் சேர்ந்த சாதியினருக்கு, அல்லது பாரம்பரியமாகக் கற்றுத் தந்தவர்களின் பிள்ளைகளுக்கு மட்டும்தான் கல்வியிருந்தது.

ஆகவே வர்க்கங்கள் அல்லது சாதிகள் என்ற சமூகப் பிரிவினைகள் தான் கல்வி யாருக்கு? என்பதை நிர்ணயித்தன. அன்று கல்வி கற்க வசதி படைத்தவர்கள் முக்கியமாக ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் அது நிலப் பிரபுக்களுக்காக இருந்தது. முதலாளித்துவ சமூக அமைப்பில் நிலப்பிரபுக்களை ஆதரவாகக் கொண்ட முதலாளிகளுக்காக இருந்தது. இதுதான் மேற்கத்திய நாடுகளின் உண்மையான நிலைமை. ஆனால் கிழக்கில் சமுதாயத் தரங்கள் ஒரு வித்தியாசமான நிலையிலிருந்தன. யப்பானிலும், சீனவிலும் ஒரு தளர்ந்த பாரம்பரிய அடிப்படையில் கல்வி சமூகத்தின் ஒரு பிரிவுக்குள் கட்டுப்படுத்தப்பட்டது. அதே வேளையில் இந்தியாவில் பிறப்பால் நிர்ணயிக்கப்படுகின்ற இறுக்கமான சாதி அமைப்பில் சமூகத்தில் அவரவர்களின் கடமைகளுக்கேற்ப கல்வி நிர்ணயிக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் படிப்பு வாசனையற்ற - கல்வியே கற்காத அல்லது மிகச் சிறிதளவு படித்திருக்கக் கூடியதான பரந்த வெகுஜனங்களிடமிருந்து தங்களைப் பிரித்துக் கொண்ட, அவர்களிலும் பார்க்கத் தாம் மேலானவர்கள் என்று கருதுகின்ற ஒரு படித்த பிரமுகர்கள் கூட்டம் இயற்கையாகவே தோன்றியது. உதாரணத்திற்கு பிரித்தானியாவில் பொதுப் பாடசாலைகள் என்று கூறப்படுகின்ற ஆனல் உண்மையில் தனியார் பாடசாலைகளான எற்ரன், ஹரோ போன்றவைகள் ஆளும் வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும், வசதி படைத்த வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும் மட்டும்தான் கல்வியளிக்கின்றன. இவர்களில் சிலர்கல்வியின் உயர்ந்த மட்டத்தை யடைவதற்காக ஒக்ஸ்போட், கேம்பிறிட்ஜ் ஆகிய சர்வ கலாசாலைக்குச் சென்றனர். இந்தியாவில் வரம்புக்குட்பட்ட குருகுல அமைப்பில் படித்த பிரமுகர்கள் பிராமணர்களாவார். அதேவேளையில் சீனவில் ''மண்டரீன்ஸ்' எனப்படுவர்கள் படித்த பிரமுகர்களாக விளங்கினர்.

இன்று விவேகமான வாழ்வுக்கு ஒவ்வொருவருக்கும் கல்வி இவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படும் அதேவேளையில், கடந்த காலத்தில் இந்த வகையில் ஏன் கட்டுப்படுத்தப்பட்டது? மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாத வெறும் ஒரு ஆடம்பரப் பொருளாக, ஒரு பெருமை தரும் அணிகலனுக இது கருதப்பட்டதா?

இல்லை இது அதிகாரத்தின் ஒருகருவி — அரசியல், பொருளாதார, இராணுவ, சமூக அதிகாரத்தின் கருவி, உலக ரீதியான வாக்குரிமை, உலக ரீதியான கல்வி, ஜனநாயகம் மக்களின் மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற அரசாங்கம் என்று சொல்லப்படுபவைகள் இருந்த போதும்கூட இன்றும் இன்னமும் அது அதிகார வர்க்கத்தின் ஒரு கருவியேயாகும்.

இது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களை கீழ்நிலையில் வைத்திருப்பதற்கு ஆளும் வர்க்கத்தால் பாவிக்கப்பட்ட, பாவிக்கப்படுகின்ற ஒரு கருவியாகும். உழைக்கும் வெகுஜனங்களை அடக்கிச் சுரண்டுவதற்கான சட்டங்களை இயற்றியவர்களும், பொது விவகாரங்களை விவாதித்தவர்களும், சபைகளில் கூடியவர்களும் இந்தப்படித்தவர்களே. இதே படித்தவர்கள்தான் ஆளுநர்கள் என்ற தோரணையில் சட்டத்தை அமுல்படுத்தியவர்கள். சுரண்டப்படுபவர்களால் சுரண்டல் அமைப்பு முறைக்கு எதிராக எங்காவது பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டபோதெல்லாம் தெய்வ உதவி கோரப்பட்டது. கடவுளுடன் கூட யார் தொடர்பு கொள்ளக்கூடியவர்களாயிருந்தார்கள்? படிப்பு வாசனையற்றவர்களோ, அடிமைகளோ, விவசாயிகளோ, அல்லதுஅரைகுறை படிப்பாளிகளோ அல்ல. வேதங்களை ஓதக்கூடிய, அதன் புனிதமான' பொருளைக்கூறக்கூடிய, மந்திரங்களைச் சொல்லக்கூடிய படித்தவர்கள் மட்டுமே கட

(15ம் பக்கம் பார்க்க)

## ஆரம்பக் கல்வித் திட்டத்தின் நோக்கம்

[13ம் பக்கத் தொடர்ச்சி]

யனவற்றை மாணவர்கள் செய்வதற்கு உதவிபுரியலாம்.

களிமண் அல்லது வேறு பொருத்தமான பொருள்களைப் பயன்படுத்தி முப்பரிமாணச் சிற்பங்களை ஆக்கல், சூழலோடு தொடர்புடைய பொருள்களின் மாதிரி உறுப்புகளைச் செய்தல் ஆக்கப் பொருள்களை அழகான முறையில் ஒழுங்கு படுத்துதல், தென்னை ஓலை, பனைஓலை ஆகியவற்றினைப் பயன்படுத்திச் சிறிய பெட்டிகள், தட்டுக்கள், கூடைகள் ஆகியவற்றை இழைத்தல். இவை போன்ற இன்னும் பலவற்றை மாணவர் தமது விருப்பத்திற்கேற்ப திறமைக்கேற்பச் செய்து ஆக்கத்தொழிற்பாட்டில் ஆர்வம் கொள்வதோடு எதிர்காலத்திலும் அவர்கள் இதன்மூலம் பயன் பெற வழி அமைத்து விடலாம்.

### பொம்மலாட்டம்

பொம்மலாட்டம் ஆக்கத் தொழில்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவு பங்கினைப் பெறுகிறது. அது அழகியல் உணர்வை மாணவர் உள்ளத்தே ஊக்குவிப்பதோடு மனமகிழ்ச்சியையும் தேடித்தருகிறது, சற்சனை வளத்தை மாணவர்களிடையே அதிகரிக்கச் செய்து பெரியதொரு எதிர்காலத்தை அவர்களுக்குத் தேடித்தர உதவுகிறது கல்வித்துறையில் இந்தப் பொம்மலாட்டம் பயனுள்ள ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுகிறது.

Puppetry provides one of the richest fields of cre ti-veness, innovation aesthetic stimulation, and entertain-ment as far as Children are Concerned. It will capture their imagination and ins pire them to explore the almost limitless scopes it provides. Entertainment aside, puppetry can form a very useful function in edu-cation. What better way to illustrate a lesson than with the aid of little imaginative pupptry.

### அழகியற்கல்வி

அங்க அசைவுகள் மூலமாகவும், முகபாவம் மூலமாகவும் கருத்துக்களை வெளிப்படுத்த தூண்டுதலே அழகியற் கல்வியின் நோக்கமாக இருக்கிறது.

இ பாடத்தின்போது (மன ஒருமைப்பாட்டுடன்) மிகக் குறுகிய, நீண்ட, மிக நீண்ட சுவாசப்பயிற்சிகள், வெவ்வேறு கருத்து வெளிப்பாடு தொடர்பாக குரலையும் நாதத்தையும் கட்டுப்படுத்தல், குரலை வெவ்வேறு கருத்து வெளிப்பாடு தொடர்பாக உயர்த்தலும், தாழ்த்துதலும், லயத்துடன் கூடிய அசைவு, தாளத்துடன் அசைவு நடத்தல், பாய்தல் முதலின] அபிநயமூடாக, வெவ்வேறு மெய்ப்பாடுகள், கதாபாத்திரங்கள், நிகழ்ச்சிகள், சம்பவங்கள் ஆகியவற்றைச் சித்தரித்தல், நல்ல மெருகுடன் கூடிய தொழில் தொடர்பான கிராமிய நடனம் முதலி" போதிக்கப்படுவதற்கு வழியமைக்கப்படுகின்றது.

### உடற்கல்வி

தேசப் பயிற்சிப் பாடத் திட்டத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றான உடல் நிலையைப் பேணச்செய்தலே இப் பாடத்தின் முக்கிய அம்சமாக இருக்கிறது.

உடன் உறுப்புக்களின் ஒத்திசைவை வலுப்படுத்தத் தூண்டும் முயற்சிகளில் பயிற்சியளித்தல், தசைநார் வலுப்படும் பயிற்சிகளில் ஈடுபடல், கால்கள், முழங்கால்கள், இடுப்பு, முள்ளந்தண்டு, கைகள், வயிறு, கழுத்து, தசைக்குரிய உடற்பயிற்சியை அளித்தல்—தாளஅப்பியாசங்களில் பெறப்படும் சந்தோஷத்தை அனுபவிக்கத் தூண்டுதல், உட்காரும் போதும், நடக்கும்போதும், நிற்கும்போதும் கடைப்பிடிக்க வேண்டிய நிலைகள் இவை பற்றி உணரத் தூண்டுதல், சுவாசம், இரத்தோட்டம் துரிதமடையும்வகையில் இயங்குதல், ஓடுதல், பாய்தல், கெந்துதல், துள்ளுதல், குதித்தல் முதலியவற்றின் பயிற்சிகளைப் பெறுவதற்கு அமைத்தலும் உடற்பயிற்சி அளித்தலின் நோக்கமாக இருக்கிறது.

சுதந்திர வாழ்க்கை, குழுவாக வாழ்தல் பற்றிய அனுபவம் பெறுதல், பாதுகாப்புடைய சுகாதாரப் பழக்க வழக்கங்களைப்பெறல், திட்டமிடல், அன்றாட வாழ்க்கைத் திறன்பெறல், தலைமைதாங்கும் பண்பு, பின்பற்றல்களுக்கான பயிற்சி பெறல் ஆகியவை இக் கல்வி மூலம் சிறுர்கள் பெற்றுக் கொள்ளத் தூண்டப்படுகிறார்கள்.

சரியான ஆளுமை வளர்ச்சியைத் தூண்டும் காரணியாக உடற்பயிற்சியைக் கொள்ளுதல் வேண்டும்.

### பிரச்னைகளுக்கான தீர்வுகள்

கலந்துரையாடல் மூலமாக பிள்ளைகளது பல பிரச்னைக்கு இயன்ற வரையிலான தீர்வு காணமுயலும் அதேவேளையில் ஆசிரியர்கள் பிள்ளைகளதுகேட்டல் சம்பந்தமான பிரச்னைகளை உன்னிப்பாக அவதானித்துக் கொள்ளவேண்டும்.

இவ்விதபிரச்னைகளில் பாதிப்புறும் பிள்ளையை வகுப்பில் முன் வரிசையில் அமர்த்துவதற்கான ஒழுங்கினை மேற்கொள்ளுதல் அவசியம். இவ் வித ஆலோசனையை சிறுவர் கல்விசம்பந்தமான அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பிள்ளை பேசும்போது நேரடியாக அவனது முகத்தை அவதானிப்பதால் பிள்ளை சரியாகத் தெளிவாகப் பேசுகின்றன் என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

### புதிய மாற்றங்கள்

கல்வித்திட்டத்தில் ஏற்பட்டு வரும் புதிய புதிய மாற்றங்களை அவ்வப்போது அறிந்து கொள்வதும் இவைபற்றி விரிவாக தெரிந்து கொள்வதும் இவற்றை சிறந்த முறையில் மாணவரது தரத்திற்கேற்ப செயற்படுத்துவதும் இந்த நோக்கங்கள் வெற்றி பெற பெரும் துணையாக இருக்கும்.

மாணவரின் அனுபவத்தேடலுக்கு ஆசிரியர் துணையாக நிற்கவேண்டும்என்பதும்மாணவரின்ஆக்கத்திறமை, ஆளுமை தன்னம்பிக்கை, மனப்பங்கில் மாற்றம் ஆகியவற்றை வெளிக் கொணரும் திட்டம் புதிய கல்வித் திட்டத்தின் நோக்கம் என்பதும் இத் துறையில் அனுபவம் மிக்கவர்களின் கருத்து.

எதிர்காலக் கல்விக்கு ஆரம்பக்கல்வியின் அத்திவாரம் சிறந்ததாக இருக்கவேண்டும் என்பதனை நாம் மறந்துவிட முடியாது.

### பெற்றோரின் பங்கு

பாடசாலையில் பிள்ளை என்ன செய்கின்ருன் என்பதனை அக்கறையோடு கவனித்துக்கொள்வதும், கல்வித் திட்டத்தின் புதிய மாற்றங்களை அறிந்து கொள்வதும் பெற்றோரின் பொறுப்பாக இருக்கிறது.

முரண்பாடுகளைத்தவிர்த்துக் கொள்ளவும் பிள்ளையின்கல்வி தடங்கலின்றி வளரவும் இது மிகவும் உதவுவதாகவும் இருக்கும்.

பிள்ளையின் பேச்சு, காது, கண்தெளிவு விஷயங்களில் பெற்றோர் மிக்க அக்கறை கொள்வது அவனது கல்வி தடையின்றி நடைபெற உதவும்.

மாணவன் வீட்டில் குறித்த அளவுநேரம் படிப்பதை உறுதி செய்து, மேற்பார்வை செய்து உதவி செய்வதன் மூலம்மாணவர் அதிக தேர்ச்சி பெறப் பெற்றோர் உதவ முடியும். மாணவரின் கல்வி முன்னேற்றம் உடல், உள நலன்களில் தங்கியுள்ளது பெற்றோர் இவ்விரண்டையும் பெறும் வகையில் குடும்பச் சூழலை அமைப்பதன் மூலம் மாணவர் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவமுடியும்.

மாணவருடைய முன்னேற்றம், தேவைகள்தொடர்பாகப் பெற்றோர் பாடசாலை அதிபர் ஆசிரியர்களுடன் வாய்ப்புள்ள போது கலந்துரையாடுவதும் நல்ல பயன் தரும்.

''காலை எழுந்தவுடன்
படிப்பு — பின்பு
கனிவு கொடுக்கும்
நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு
— என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு
பாப்பா''

— பாரதியார்.

# தமிழர் கல்வி வறட்சி: பொறுப்பாளிகள் யார்?

சமூக நலன் என்ற இலட்சியத்தை அடைவதற்கான சாதனங்களில் கல்வியும் ஒன்று. இதைக் கருதியே சுதந்திர சமூகங்களில் கல்வி பொருளாதார விருத்தி மனித சமுதாயத்தின் வளர்ச்சி — இம் மூன்றுக்குமிடையே காரணகாரியத் தொடர்பை நன்குணர நேரிட்டது. ஆகவே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அதிகரித்து வரும் தேவைகளுக்கேற்ப ஏற்புடைய கல்வியை, அதாவது சமுதாயம் வேண்டி நிற்கும் கல்வியை வழங்குவது அவசியமாகின்றது. அன்றியும் குடியாட்சியின் முக்கிய பங்கு மக்கள் எல்லோரையும் எழுத்தறிவு படைத்தவராக்குவதாகும். அதுவும் சமநிலையற்ற சமுதாய வளர்ச்சிப் பகைப் புலத்தில் உள்நாட்டுத் தேசிய வாதம் (Local Nationalism) எழுகின்ற நாடுகளில் - குறிப்பாக கிழக்கு, வடக்கு, மலையகப் பகுதிகளில் - ஆற்றலுக்கேற்றவாறு எல்லோருக்கும் கல்வயிலும் வாழ்க்கையின் சகல துறைகளிலும் சமவாய்ப்புக் கிடைப்பது அரிதாகும்.

இலங்கையில் அரசியல் துறையில் ஆதிக்கம் செலுத்தியிருந்த மேனாட்டாரின் நடவடிக்கைகளும், கிறிஸ்தவ மிஷனரிமாரின் ஸ்தாபன அமைப்புகளும் சுதேசிய கல்வி மரபினது வளர்ச்சியைத் தடைசெய்தது. கல்வியின் பரிபாலனம் மிஷனரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

1960, 1961 இல் இயற்றப்பட்ட சட்டங்களினால் கல்வியின் பரிபாலனத்தை அரசாங்கம் கையேற்றது. பல சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய கல்விமுறை அறிமுகம் செய்யப்பட்டதும், கல்வியின் அடிப்படை அமைப்பில் தொடர்ந்தாற்போல் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஆங்கில மொழி போதனா மொழியாக இருந்த ஏற்பாடு மாறி அன்னைமொழி போதனா மொழி என்ற அந்தஸ்தைப் பெற்றது. 1970 களில் தரப்படுத்தல், மாவட்ட ரீதியிற் பல்கலைக்கழகத்துக்கு மாணவரைத் தெரிவு செய்தல் என்பன தமிழ் மாணவர்களை என்றுமில்லாதவாறு பாதித்தது.

சுவாமி விவேகானந்தர் கூறியதுபோல் ''நமக்குத் தேவையானது மனிதனை உருவாக்கும் கல்வியேயாகும்'' ஆனால் எமது இளையாரின் ஆர்வங்கள், திறமைகள், ஆளுமை என்பன மறுக்கப்பட்ட நிலையில் இன்று நாம் வாழ்கின்றோம். வாழ்க்கையின் மதிப்புத் தரங்களில் ஒரு நெருக்கடியான கட்டத்தில் இருந்து வருகிறோம். மாவட்ட அடிப்படையில் பல்கலைக் சழகத்துக்கு மாணவரைத் தெரிவு செய்தல், தரப்படுத்தல் ஆகிய இன்னோரன்ன நடவடிக்கைகள் மாணவரிடையே விரக்தியை உண்டாக்கியது, தமிழ் மாணவர்களின் வாழ்க்கைக்கு வசதியின்மை, இடர் ஆகியன ஏற்பட்டன. இவற்றின் விளைவாக தமிழ் மாணவர் சமூகத்தின் ஒரு பெரும் பகுதியினர் குழப்பத்துக்குள்ளாகியிருப்பதோடு, உணர்ச்சி வகையான பிரச்னைகளுக்கும் வழிவகுத்

**ஈ. ஆர். திருச்செல்வம்**

துள்ளது. தமிழ் மாணவர் அச்சம், பாதுகாப்பின்மை போன்ற மனோநிலைகளுக்கும் ஆளாகி வருகின்றனர். இதன் காரணமாக அவர்கள் புலம் பெயர்ந்து வேற்று நாடுகளில் தஞ்சமடைந்து வாழ்க்கையில் பல இடர்ப்பாடுகளுக்கெல்லாம்உள்ளாகவேண்டியுள்ளது இன்றுவரை இப்பிரச்னைகள் கவனிக்கப்பட்டதுமில்லை; தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுமில்லை, இந்நிலையில் கல்வியானது மனிதனின் பல் துறை வளர்ச்சிக்கும் துணை புரியும் ஒரு முழுமையான செயலாகும் என்ற கருத்து பொருளற்றதாகி விடுகிறது.

கற்றோரிடையே வேலையின்மை எமது இளையார் மத்தியில் காணப்படும் ஒரு நிகழ்ச்சியாகும். நீண்ட காலமாகவே இப்பிரச்னை இருந்து வருகிறது. ஒரு சமூகம் தன் அறிவுத் திறனை வீணுக்க முடியாது. வேலை அமர்வு, வேலை இல்லாப் பிரச்னை இனியும் தொடர்ந்து இருந்து வரும் என்ற அச்சம் நிலவுகிறது. கல்வி பொருளாதார முன்னேற்றத்துக்கான ஒரு கருவியாகும். அதனால் கல்வி முழுவதுமே பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது என்பதும் அல்ல. கல்வியின் பொருளாதாரப் பங்கைப்பற்றி தமிழர்களாகிய நாம் போதுமான கவனம் செலுத்துவதில்லை. ரியூட்டரிகளில் படிப்பதோடு கதை முடிவடைகிறது. எமது சிறார் பெற்ற கல்வியை பொருளாதார வகையில் பயன்படுத்தினால்தான் அதற்குப் பயன்பாடு உண்டு. அல்லாவிடில் கல்விக்காகப் பெற்றோரால் செய்யப்படும் முதலீடு பயனற்ற செலவீடாகவும் செலவுக்கேற்ற வருமானமற்றதாகவும் அமைந்துவிடும். இதனால் எமது பாரம்பரியப் பிரதேசங்களில் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்துவிடலாம் கல்வி கல்விக்காக என்றுநினைக்காமல் எமது பொருளாதாரத் தேவைகளுடன் தொடர்புபடுத்திகொள்ளவேண்டும் சிறந்த கல்வி'யை அளிப்பதுதான் தங்களுடைய பணி என்று அதற்குப் பொறுப்பானவர்களும் மற்றவர்களும்எண்ணக் கூடாது. எனவே கல்வியைத் தமிழ்ப்பிரதேசங்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கான ஒரு நீண்டகால முதலீடாகக்கருதி, மற்றவர்களை நம்பியிராது ஒரு சமுதாயப் பணி என்ற வகையில் நாம் செயல்படவேண்டும். கற்றவர்கள் வேலைதேடும் நோக்கத்தைக் குறைக்கவும் சொந்தத் தொழில் செய்யக்கூடிய நோக்கத்தை உள்ளடக்கூடிய வகையிலும் கல்வியின்நிருவாகத்தை மாற்றியமைப்பதுஇன்றியமையாதது. இதைக்கவனமெடுக்காவிட்டால் பொருளாதாரத்தின் மீது சுமத்தப்பட்டசுமையாகக் கல்விமாறக்கூடும், இதனால் கல்வியின் உயர் விழுமியங்கள் பயனற்றனவாகி விடும்.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை உள்ளடக்கிய சமூகக் கட்டமைப்பில் சமநிலையற்ற வளர்ச்சி வாழ்க்கையின் சகல துறைகளிலும் உள்ளது போல், பாடசாலை, சர்வகலாசாலைக் கலைத்திட்டங்களிலும் சமநிலையற்ற பண்பு காணப்படுகின்றது! எமது மாணவரும் தொழில் வாய்ப்புக்கள் கருதி விஞ்ஞானம், வர்த்தகம், கணக்கியல், கணிதம் ஆகிய துறைகளில் அதிகம் ஈடுபாடு காட்டுகிறார்கள். கலை, விஞ்ஞானம் ஆகிய பாடங்களை இருகூறுகளாகப் பிரித்தல் குடியேற்ற நாட்டுக் கல்விச் சிந்தனையின் மிச்சசொச்சங்களாகும். உயர் வகுப்புக்களில் சமூக, அரசியல், பண்பாடு, வரலாறு போன்ற பாடத் துறைகளை ஒதுக்கும் ஒரு மனோபாவம் இன்று நம்மவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. விஞ்ஞானம்- பண்பாடு, அரசியல் ஆகிய அனைத்திலும் பிரயோகிக்கத்தக்க துறை என்பதையும் நாம் வரலாற்று அடிப்படையில் நம் முன்னோரின் அருஞ்செல்வங்களை அறிய வேண்டியது என்பதையும் இன்றைய நிலையில் உணர்ந்து கொள்ளவேண்டும் இன்றேல் எமது கலையும் கலாசாரமும் கருவழியும், எதிர்காலத்தில் தமிழினம்

(16-ம் பக்கம் பார்க்க)

## முதியோர் கல்வி

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய கல்வித் திட்டத்தில் முதியோர் கல்வித்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து பத்து ஆண்டுகளுக்குள் சோவியத் ஒன்றியம் எழுத்தறிவை முற்றாக ஒழித்து விட்டது.

இலங்கையைப் பொறுத்தவரையில் முதியோர் கல்வியில் பல்கலைக்கழகங்களின்பங்குமுற்றாக உணரப்படவில்லை. தமிழ் மக்கள்மத்தியில் முதியோர் கல்வியை விரிவாக்கவும், மேம்படுத்தவும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி, பயிற்சி, வெளியீடுகள் முதலிய முயற்சிகளை மேற்கொள்ளலாம் இன்றைய நிலையில் குறுகிய வளசாதனங்கள் இருந்தாலும் அதை முதியோர் கல்வித் துறையில் பயன்படுத்த நாம் வழி செய்ய வேண்டும்.

## வர்க்க சமுதாயத்தில்

(14ம் பக்கத் தொடர்ச்சி)

வுளுடன் தொடர்பு கொண்டவர்கள் அது மட்டுமல்ல தேவைப்பட்டால் பிசாசுகளையும் கூப்பிடக்கூடியவர்களாயிருந்தார்கள்!

'ஸ்கூல், என்ற வார்த்தையின் மூலத்திலிருந்தே வர்க்க அதிகாரத்தின் கருவியாகக் கல்வி இருந்துவந்துள்ளது என்பது காட்டப்படுகின்றது ஓய்வு என்று பொருள்படுகின்ற 'ஸகொலா' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து இந்த வார்த்தை தோன்றியது. ஓய்வு நேரத்தைக் கொண்டிருக்கக் கூடிய வர்க்கத்தட்டைக் சேர்ந்த பிள்ளைகளுக்கே கல்வி இருந்துள்ளது என்பது வெளிப்படையான முடிவாகும். தனது வேலைகள் சகல வற்றையும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைஅல்லது வர்க்கங்களைக் கொண்டு செய்வித்த, செய்வதற்கு தனக்கென ஒரு வேலையுமே இல்லாத சொத்துடைமை வர்க்கத்தைத் தவிர வேறு யாருக்குஓய்வு நேரம் இருந்தது? சொத்துடைமை வர்க்கந்தான்ஆளும் வர்க்கமாக இருந்தது, இன்றும் இருக்கின்றது. ஆகவே கல்வி மிகச் சமீபகாலம் வரைக்கும் ஆளும் வர்க்கத்துக்கே உரியது.

அடுத்த கேள்வி என்னவெனில், கல்வியின் நோக்கம் என்ன? என்பதாகும். அது ஆளும் வர்க்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதுடன் மற்றைய வர்க்கங்களுக்கும் ஆளும் வர்க்கத்தால் கொடுக்கப்பட்டாலும் வர்க்க ஆதிக்கமுள்ள சமூகத்தின் அமைப்பு, கொள்கைகள்தத்துவம் ஆகியவற்றை ஆளும் வர்க்கத்தின் பிள்ளைகளுக்கு போதிப்பதே அதன் நோக்கமாகும். ஒரு சமூகம் எந்தளவுக்கு வேலைசெய்தது. ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக எப்படி ஒரு சமூகம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டது.

மற்ற வர்க்கங்களைச் சேர்ந்த பிள்ளைகளைப் பொறுத்தவரை சர்வவியாபகமான கல்வியின் நவீன நடைமுறையின் கீழ் வர்க்க சமூகத்தின் பண்புகளோடு அதனுடைய கூறப்படுகின்ற விடுதலை, சமத்துவம், தோழமை, ஜனநாயகம்,உலக நீதி ஆகியவற்றையும் போதித்து வர்க்க ஆதிக்க சமூக அமைப்பை ஏற்றுக் கொள்ளவும், பாதுகாக்கவும் போதிக்கப்படுகின்றது.

ஆகவே வர்க்க சமுதாயத்தில் அடக்கி,ஒடுக்கி சுரண்டப்படுகின்ற மக்கள், வெகுஜனங்கள் கல்வியின் உண்மையான வர்க்க அடிப்படையைஅறிந்து கொள்வது அவசியம். இதன் மூலம்தான் மக்களின் சகல பகுதியினருக்கும் கல்வி வசதியை விஸ்தரிப்பது வர்க்க அடக்கு முறையில் இருந்து அவர்களை விடுவிக்கும் என்ற சிந்தனை வழிநடத்தப்படாமலிருக்க முடியும்.

இன்றைய கல்வியும், வர்க்க ஆட்சி தொடர்ந்திருப்பதை சகித்துக்கொள்ளும்படி அவர்களைஏமாற்றுகிறது.

கல்வி அழகே அழகு

★ அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்
★ கல்லாதவர் செல்வத்திலும் கற்றவர் வறுமை நலம்
★ கல்வி இல்லாச் செல்வம் கற்பில்லாஅழகு
★ கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு
★ கொடுக்கினும் கல்வி கேடுபடாது
★ சொல்வல்லவனை வெல்லுதல் அரிது

மில்க்வைற்
சவர்க்காரத் தொழிலகம்
525/2, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மில்க்வைற் நீலசோப் புதுமெருகு ஊட்டப்பெற்று எங்கும் விற்பனையாகின்றது.

★ மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு மக்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் நற்பணிக்கே உதவுகிறது.

# கல்விச்சபைகளும் கல்வித் திட்டங்களும்

கருங்கல்லைச் சிலையாக வடித்தெடுக்க வேண்டுமானால் நாம் அதனைக் கல்லுதல்வேண்டும். அதுபோல், மனித அறிவு வளர்ச்சியுற வேண்டுமானால் நாம் உள்ளத்தைக் கல்லுதல் வேண்டும். இளமொட்டாக இருந்த தாமரை கதிரவன் ஒளியினால் மலர்வது போல உள்ளடங்கியிருந்த அறிவு கல்வியினால் மலர்கின்றதுஎன்பது அரிஸ்டோட்டிலின் கொள்கையாகும். அறிவு வளர்ச்சிக்கும் அதனால் தொழில் செய்து பொருள் தேடுவதற்கும், பிற நன்மைகளுக்கும் உதவியாகும்படி முன்னோர்கள் கல்வி அறிவைக் கருத்தாகப் பெருக்கினார்கள். ''பிச்சைபுகினும் கற்கை நன்றே'' என்றார் ஔவையார் ''அறிவுடையவர்களே எல்லாம் உடையவர்கள், அறிவு இல்லாதவர்கள் என்ன உடையவர்களாக இருந்தாலும் எதுவும் இல்லாதவர்களே'' என்பதும் அவர்கள் கருத்தாக இருந்தது.

கல்வி என்றால் என்ன? கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக என்பதாகும். அரிஸ்டோட்டிலும்இதே கருத்தையே கொண்டிருந்தார். வளர்ச்சியுறும் ஜீவன் ஒன்று ஈற்றில் அடையப்போகும் நிலையினியல்பு இப்பொழுதே இதனுள் அடங்கிக் கிடக்கின்றது என்று அவர்கூறுகின்றார். ''கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணிப்பதன்று. கற்கும் விஷயங்கள் நன்றாகச் சீரணமாகிப் பயன்படவேண்டும். அவை உயிர் ஊட்டுவனவாய், ஊக்கம் அளிப்பனவாய், மனிதத்தன்மை தருவனவாய், ஒழுக்கம் வகுப்பனவாய் இருத்தல் வேண்டுமென்று எடுத்துரைத்தார் சுவாமி விவேகானந்தர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வி நமது நாட்டில் எப்படி இருக்கின்றது?

**புத்தொளி ந. சிவபாதம்**
**இ. த. ஆ. சங்க யாழ். மாவட்ட பிரசாரச் செயலாளர்**

இலங்கையில் 1841ல்மத்திய கல்விக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதுவே நமது நாட்டுக் கல்வித்திட்டத்துக்கு வித்திட்டமுதற்படியாகும். 1865ல் கல்வி விசாரணைச் சபை சில முக்கிய சிபார்சுகளைச் செய்தது. ஒரு கல்வித் திணைக்களம் நிறுவப்படவேண்டுமென்பதும் ஆரம்பப் பாடசாலைகளில் தாய்மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டும் என்பதும், உயர்கல்விக்காக ஒரு கல்லூரி நிறுவப்படவேண்டும் என்பதுமே அச்சிபார்சுகளாகும். இதன்படி 1869ல் கல்வித் திணைக்களம் ஒன்று நிறுவப்பட்டது. இதனைத் தொடர்ந்து இருபது ஆண்டுகளின் பின் சுயமொழி ஆசிரிய பயிற்சிக்கழகம் ஒன்றும் நிறுவப்பட்டது. இவற்றினால் இந்நாட்டின் கல்வித் தேவையைப் பூரணமாக அமுல் நடத்த முடியவில்லை.

1940ம் ஆண்டு மூன்றுவது கல்விச்சபையின் சிபார் சில பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை அமுல் நடத்துவது, ஆரம்பக் கல்வியைத் தாய் மொழியில் புகட்டுவது, ஆங்கிலம் இரண்டாவது கட்டாய பாடமாக்கப்படுவது என்பன இச்சபையின் முக்கிய சிபார்சுகளாகும்; இதனை அரசு அமுல் நடாத்தியது.

1951ம்ஆண்டின் கல்விச் சட்டத்தின்படி தாய்மொழியே போதனாமொழியாக்கப்பட்டது. காலப்போக்கில் எல்லாப்பாடசாலைகளும் இதனை ஏற்கவேண்டியேற்பட்டது. அத்துடன் 1963ல் மிகச்சில பாடசாலைகளைத் தவிர மற்றைய பாடசாலைகள் யாவும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டன. இவ்வாறு பாடசாலைகள் விஸ்தரிக்கப்பட்டபோதிலும் கல்வியின் நோக்கத்தில் பூரணமாற்றம் ஏற்படவில்லை.

ஆங்கிலேயர் உயர்ந்த உத்தியோகங்களையே நோக்கமாகக் கொண்டு குறிப்பிட்ட தொழில்களுக்கு வேண்டிய பயிற்சி மட்டுமே அளித்தனர். ஆகவேதான் பாடத்திட்டத்தினுள் வெவ்வேறு பாடங்களும அவற்றைக்கற்பிப்பதற்கு விசேடபயிற்சியும் வேண்டியிருந்தது. மாணவனின் முன்னேற்றத்துக்கு ஒருகுறிப்பிட்ட ஆசிரியர் பொறுப்பாக இல்லாத நிலை காரணமாக மாணவனின் ஒழுக்கத்திற்குத்தனியான ஓர்ஆசிரியரின்வாழ்க்கை எடுத்துக்காட்டாக இருக்க முடியவில்லை. மாணவர்கள் பெற்றோருக்கு அடங்கிநடக்காமலும் ஆசிரியர்களுக்குப் பயமின்றியும்இன்றுவாழ்க்கையை நடாத்துகின்றார்கள். குருகுல முறையில் அக்காலக்கல்வி விளங்கியது. உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றுவந்தனர். குருவுக்காக மாணவர் எதுவிதபணிவிடைகளையும் செய்துவந்தனர். ஆசிரியரும் மாணாக்கனின் மனத்தின் நிலைமைக்குத் தன் மனதையும் இழுத்துக் கொண்டு வந்து தன்மனம் முழுவதையும் அவன் மனத்தின்பால் செலுத்தி, அவன் எண்ணுகிறமாதிரி எண்ணி அவன் சிரமங்களை அறிந்து அவற்றை நீக்கி அவன் மனதில் அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தினார். அகத்தியரின் மாணவர் பன்னிருவரென்றும், அவருள் தொல்காப்பியர் சிறந்தவரென்றும் கூறுவர். வடநாட்டுப் பாரத காவியத்தே துரோணருக்கும் ஏகலைவனுக்கும் இருந்த ஆசிரிய மாணவர் தொடர்பை இன்று காணமுடியாமலிருக்கின்றது.

இன்று பிரமாண்டமான அழகிய கட்டடங்கள், போக்குவரத்து வசதிகள், இலவசக்கல்வி, இலவச சுகாதார வசதிகள், இலவசபாடநூல் இவற்றுக்கிடையே மாணவன் கல்வி கற்கிறான். அப்படியிருந்தும் தொழிற்கல்வி வளர்ச்சி பெறவில்லை.

அமெரிக்கா, ருசியா போன்ற நாடுகளில் கல்வி கற்கும் மாணவன் தொழிலின் மகத்துவத்தையும் உணர்ந்து ஏதோ ஒரு தொழிலை நாடுகிறான். கல்லூரிமாணவன் படித்துக்கொண்ட கைத்தொழிற்பாட நேரத்திற்கு அயலிலுள்ள கைத்தொழில் நிலையத்துக்குச்சென்று பயிற்சி பெற்றுப் பயனடைகிறான். ஜப்பான் ஜெர்மனி போன்றநாடுகளில் அனைவரும், அரச உத்தியோகஸ்தரும் தமது ஓய்வு நேரத்தில் ஏதோ ஒரு கைத்தொழிலைச் செய்து நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு முன்நிற்கிறார்கள்.

மாறிவரும் உலகில் பொருந்தி வாழும் தன்மைக்கேற்ப இன்றைய கல்வித்திட்டம் மாற்றப்பட்டு, எல்லா மாணவரும் ஏதோ ஒரு தொழிலைக் கற்று வெளியேற வழி ஏற்படவேண்டும். துரிதமாக அபிவிருத்தியடைந்துவரும், பொருளாதாரம் மேலோங்கிவரும் தேவைகளைச் சமாளிப்பதற்கும், இளந்தலைமுறையினருக்குச் சிறந்த வேலைவாய்ப்புக்களை ஏற்பாடு செய்வதற்கும் வசதியாகக் கல்வித்திட்டம் விளங்கவேண்டும்.

புதிய கல்வித்திட்டத்தில் விவசாயத்துறையில பசுமைப் புரட்சி ஏற்படுத்துவதற்கும், கைத்தொழில் துறையை விருத்திசெய்வதற்கும் வழிவகை காணப்படவேண்டும். பாடத்திட்டத்தில் சமயக் கல்விக்கும் முதலிடம் கொடுக்கப்படவேண்டும். புதிய கல்வித் திட்டம் மேற்கு நாடுகளைப் பின்பற்றாது நமது சூழலுக்கேற்ப வகுக்கப்படவேண்டும். நாட்டிலுள்ள நல்லறிஞர்கள் ஒன்றுகூடி நன்கு ஆராய்ந்து வகுக்கும் கல்வித்திட்டமே இன்றைய தேவையாக இருக்கின்றது.

தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை கல்விநிலை இன்று நிலைகுலைந்து காணப்படுகிறது. கல்வி இடை இடையே குழப்பியடிக்கப்படுகிறது. தமிழ் மாணவரைப் பொறுத்தவரை கல்விதான் பெரும் செல்வமாகும். இச்செல்வத்தை மேலும் விருத்தி செய்யக் கல்விமான்களைக் கொண்ட கல்விச்சபை நிறுவப்படவேண்டியது அவசியமாகின்றது.

# தமிழர் கல்வி வறட்சி

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் 'கலாசாரப் பாலைவன'த்தில் (Cultural Desert) வாழவேண்டிய நிர்க்கதிக்குள்ளாக நேரிடும். இதனால் எம் மக்களின் இலட்சிய ஊற்றுக்கள் வறண்டுவிட்டனஎன்றுஅர்த்தமில்லை. ஈழத்தைப் போன்ற பண்டாட்டுக் கோலமுள்ள பாரதத்தில் சுதந்திர இயக்க காலத்தில் கவியரசர் தாகூரும், மகாகவி பாரதியும், மைக்கேல் மதுசூதன் தத்தும் கலைப்பண்புள்ள இலக்கியங்களைப் படைத்தார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது.

சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. தமிழர் வாழும் பகுதிகளில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிறுவனங்களும் (Tutory), சமீபத்தில் தனியார் மருத்துவக் கல்லூரியும் நிறுவப்பட்டுள்ளன. உயர்ந்த உத்தியோக வர்க்கத்தினரும், பணவசதியுள்ளவர்களும நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு இல்லாமல் உடனடி இலாபம் பெறும் வகையிலேயே தனியார் கல்வி நிறுவனங்களை அமைத்துள்ளார்கள். கல்வி முறையின் தரத்தையும் அதன் செயல்பாட்டையும்தீர்மானிப்பதில் பெற்றோருக்கும் முக்கிய பங்குண்டு. ஆனால் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவைப்படும் கல்வியைப பணம் கொடுத்து வாங்கிக் கொள்வோர கவே பெற்றோர் கருதி நடக்கின்றனர். அரசாங்க மட்டத்தில் இனரீதியான தரப்படுத்தல் என்றால் இங்கு பணரீதியான தரப்படுத்தல் இடம்பெறுகின்றது எனலாம். இது சமூக அமைப்பில் தமிழர் மத்தியில் காலப்போக்கில் பல விரிசல்களை உண்டுபண்ணும். இன்று எமது நாடு ஒருஅரசியல், பண்பாட்டுத்துறை புரட்சியையும் கூட அடைந்து கொண்டிருக்கின்றது. இன்று எமது மாணவர்கள் பெற விரும்புவது சமூகத்தகுதியேயாகும், அவர்கள் சமூகத்தில் தகுதியையும் சப வாய்ப்புகளையும் சமஏற்றை'யும் விரும்புகிறார்கள். ஆகவே பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் பணரீதியாகவும் இனரீதியாகவும் மாணவர்களைச் சேர்த்துக் சொள்வது என்பது சமூக சமத்துவக் கொள்கையை மறுதலிப்பதாகும். சமூக ஏற்றத் தாழ்வுகளையும் வேறுபாடுகளையும் களையக் கூடிய ஆண்களைய பெண்களையும் உருவாக்குவதற்குப் பதிலாக மாணவரில் ஒரு பகுதியினர் வசதியற்றவர் என்ற காரணத்தால் கல்வியின் நலத்தைப் பெருதவராகவே இருக்கவும் கூடும். இதனால் எதிர்காலத்தில் பாரிய விளைவுகள் ஏற்பட இடமுண்டு. தனியார் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் அமெரிக்காவில் சில உயர்கல்வி நிறுவனங்களும் முறையே அரசிடைமையளிக்கப்பட்டன. மூடுவிழா நடாத்தப்பட்டதும் கல்வி உலகம் அறிந்ததே.

எது எப்படியிருப்பினும் தமிழ் மாணவரின் கல்வித்தரங்கள் திருப்தி அற்றவையாக இருப்பதற்கும் கல்வித்தரக் குறைவான பரீட்சைப் பெறுபேறுகளுக்கும் வேலைவாய்ப்பின்மை, தரப்படுத்தல், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின்மை ஆகியனவும் காரணங்களாகும் இந்த இடர்ப்பாடுகளுக்கெல்லாம் அடுத்தடுத்துவரும் அரசாங்கங்களின் கல்விக் கொள்கைகளும் ஒரு காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

கற்ற மாணவர்கள் ஒரு நாட்டின் வரப்பிரசாதம் என்பதைத் தமிழ் மக்கள் உணரவேண்டும் இவர்களின்வலுவை ஒருமுகப்படுத்தி வழிப்படுத்துவதால் வையத்தைப் பாலித்திடலாம்.

# வடக்கு, கிழக்கை இணைத்து ஒரு கல்விச் சபை வேண்டும்!

அடிக்கடி நடைபெறும் பொது இடர்களே மக்களைத் தேச அடிப்படையில் ஒருமித்து இணைத்துள்ள தென்பதை நாம் வரலாற்றில் காணலாம். ஆங்கிலேயர் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஈடுபட்டிருந்த பயங்கரமான வருடங்களிலேயே மாபெரும் 1944-ம் ஆண்டுக் கல்விச்சட்டத்தினைத் திட்டமிட்டுப் படிப்படியாக உருவாக்கி அமைத்தனர். 1938-ம்

**குணசேகரம் நேசையா**

ஆண்டு ஸ்பென்ஸ் அறிக்கை, 1941-ம் ஆண்டு நோர்வுட் அறிக்கை, 1944-ம் ஆண்டு மக்மெயர் அறிக்கை 1944-ம் ஆண்டு பிளமிங் அறிக்கை என அறிக்கைகள் தொடர்ந்து வெளிவந்தன. இக்காலகட்டத்தில் அங்கு வாழ்ந்த தலைவர்களின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் யுத்த வெளிப்பாடாக அமைந்த கருத்துக்களைக் கொண்டிருந்தன. வின்ஸ்ரன் சேர்ச்சிலின் இரண்டு கூற்றுக்கள் இங்கு நோக்கற்பாலது. ''உலகின் எதிர்காலம் கல்வி மேம்பாடுடைய இனத்தவரிடமே உள்ளது'' [பி பி. ஸி. 1943) ''யுத்தத்தில் வெற்றிகிடைத்தவுடன் இதுவரை சமூகத்தில் ஒருசிலரால் மட்டுமே அனுபவிக்கப்பட்ட உரிமைகளும், நன்மைகளும் எல்லோரும் பயன்படக்கூடிய முறையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். ''(றரோ பரிசளிப்பு விழா] ஆங்கிலேய மக்கள் யுத்த நெருக்கடி நிறைந்த காலகட்டத்தில் கூட குடியேற்ற நாடுகளில் உயர்கல்வியினை முன்னேற்றும் கடமைப்பாட்டினைத் தொடர்ந்து மேற்கொண்டமை சிறப்பாக நோக்குதற்குரியது. 1945 -ம் ஆண்டு அங்குவித் அறிக்கையில இந்நோக்கம் தெளிவாகவுள்ளது. ''பிரித்தானிய பல்கலைக்கழகங்கள் தமது கடமைப்பாடாகச் சுதந்திரம் பெறுவதற்கு முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளில் பலகலைக்கழகங்களைப் பிரித்தானிய அரசின் நிதியுதவியுடன் நிறுவுதல் வேண்டும்.'' யுத்த காலங்களில் பாடசாலை மாணவர்கள தாக்குதல்களுக்குள்ளாகாத இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். யுத்த முடிவில் யுத்தத்தில் பங்கு கொண்ட இளைஞர்களுக்குப் பல்கலைக் கழகங்களில விசேட வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன.

### மலையகத்தமிழர் குழந்தைகள்

இன்று கல்வியில் சிறிலங்காவிலுள் தமிழர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் கெடுதிகள் நிறைந்தனவாகும். இந்நாட்டின் கல்விமுறைக்கு இன்றும் குடியேற்ற ஆட்சியில் நிறைவேறிய 1939-ம் ஆண்டு கல்விப் பிரகடனமே அடிப்படையாக உள்ளது. இன்றுவரை ஒரு நவீன கல்விப் பிரகடனம் வெளியிடப்படவில்லை. பாடசாலை மட்டத்தில் பாடசாலை செல்லும் வயதுடையோரில் அரைப்பங்கினர் ஒன்றில் பாடசாலைக்குச் செல்லாதவர்களாகவோ அன்றேல் இடைநடுவில் பாடசாலைக்கல்வியை விட்டு விலகியவர்களாகவோ உள்ளனர். மலையகத்திலுள்ள தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் எல்லோராலும் மறக்கப்பட்டவர்களாகவுள்ளனர். 1948-ம் ஆண்டு மனித உரிமைப் பிரகடனத்தின் 26-ம் வாசகத்திற்கும் 1942-ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கும் மாறாகச் சமத்துவமான உயர்கல்வி வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டுள்ளன. 1970-ம் ஆண்டு முதல் தமிழ் மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதியில் பாரபட்சம் காட்டப்பட்டமையால் திறமையுள்ள தமிழ் இளைஞர்களின் கல்வி இழப்பும் அவர்களின் சேவையை நாடு இழக்கவேண்டிய நிலையும் உருவாகியுள்ளன.

(19ம் பக்கம் பார்க்க)

## குண்டடிபட்ட--

(1-ம் பக்கத்தொடர்ச்சி

தரும் தந்தை செல்வாவின் நினைவுச் சின்னத்தின் உச்சியிலுள்ள ஸ்தூபியே குண்டடிபட்டுக்காயப்பட்டுள்ளது.

எவரும் சாதாரண நிலையில் செல்லமுடியாத யாழ்ப்பாணம் கோட்டைக்கு அண்மையில் உயர்ந்துநிற்கும் தந்தை செல்வாவின் நினைவுத்தூபியில் எவரும் இலகுவில் கண்டு கொள்ளமுடியாத வகையில் இக்குண்டுத்தாக்குதல் அத்தூபியில் காயத்தைஏற்படுத்தி 'சிற்பக்கலை' வேலைப்பாடு செய்யப்பட்டுள்ள பகுதியின் செங்கற்களை வெளியேகாட்டி நிற்கிறது.

தைப்பொங்கல் தினமான 14- 1- 1978ல் அத்திபாரம் போடப்பட்டு தந்தை செல்வா இறந்த மூன்றும் ஆண்டு நினைவு தினமான 22-4-1980ல் திறந்து வைக்கப்பட்ட இத்தூபிக்கு சுமார் ஒரு லட்சம் ரூபாவரை செலவு செய்து அறங்காவல் குழுவினர் கட்டி முடித்திருந்தர்ன.

''இத்தூபி கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்ட அன்றே இதற்குத் தமிழ் மக்கள் முப்பதாயிரம் ரூபாவை வழங்கி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1977ம் ஆண் சித்திரைமாதம் 26ம் திகதி தந்தைசெல்வா அமரத்துவம் அடைந்தார். (ஐ)

கடைசிநேர வரிவிளம்பரம்

வாடகைக்கு

யாழ்ப்பாணம், 6 கடைச்சாமி வீதியில் சிறிய பிராமண அல்லது சைவக் குடும்பத்திற்கு பகுதி வீடு வாடகைக்கு உண்டு. மேலே உள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். [C 390)

சுண்டுக்குளி பாடசாலைக் கண்மையில் சகல வசதிகளுட்பட வீடு வாடகைக்குண்டு தொடர்பு:- 52, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி. [C/A 387]

WANTED

Urgently required experienced Inspector of works for Mannar water Supply Project Salary, Terms and conditions negotiable. Please Apply to E E C 5, Council Lane, Dehiwela. (C 389)

நாளை முதல்
உஷா மினி
War Devils
(சிறந்த தாக்குதல் படம்)

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
விஜயகாந்த் -- நளினி
கரிமேடு கருவாயன்

லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
சிவகுமார்-லட்சுமி
ஸ்ரீபிரியா-தேங்காய்
மனோரமா
அவன்-அவள்-அது
(புதிய பிரதி கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
கமலகாசன்—சுஜாதா
நடித்த
உயர்ந்தவர்கள்

## முடிச்சு மாறிகள் எச்சரிக்கை

(வவனியா)

மருதானை ரயில் நிலையத்தில் முடிச்சு மாறிகளும், பிற்பொக்கட் திருடர்களினதும் கைவரிசைக்கும் வடபகுதிப் பிரயாணிகள் சிக்கிக் கொள்கிறுர்கள்.

மருதானை ரயில் நிலையத்திற்கு வரும் வடபகுதிப் பிரயாணிகள் தமது உடமைகளில் மிகவும் அவதானமாக இருக்கும் படி ஆலோசனை கூறப்படுகின்றது.

சனக் கூட்டமாக செல்லும் வாகனங்களில் குறிப்பாக தனியார் பஸ்களில் பயணம் செய்யும் போது அவதானமாக இருக்கும்படி கொழும்பு செல்லும் வடபகுதி பிரயாணிகளுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## கோப்பாய் ஊடாக பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி ஊடாகச்சென்ற வ. பி. போ. ச, பஸ்கள், மறியல் போராட்டம் காரணமாக மீண்டும் நேற்று கோப்பாய் ஊடாகச் சென்றன.

யாழ். கச்சேரிக்கு முன்வீதியும், யாழ். கல்விக்கந்தோர் முன்வீதியும் மறியல் போராட்டத்தினுல் தடைசெய்யப்பட்டிருந்ததால், பஸ்கள் கோப்பாய் ஊடாகச் சென்றன. (க)

## அமைதித் தீர்வு--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காக இந்தியா தன்னை முழுமையாகப் பயன்படுத்தும்.

''கடந்த ஆண்டு இந்திய-இலங்கை உறவில் பல முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. இலங்கையில் பிரிவினைக்கு முழுமையான எதிர்ப்பை இந்தியப் பிரதமர் உறுதியாக வெளியிட்டுள்ளார். இந்தக் கொள்கைப்பாட்டில் இலங்கை இனப்பிரச்னைக்கு அமைதித் தீர்வுகாண இந்தியமக்களும் இந்தியஅரசுக்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். (ய-செ)

## காந்தி நினைவு--

(1-ம் பக்கத தொடர்ச்சி)

நேற்று தீர்மானித்துள்ளது.

நல்லூர் இந்துவிடுதியில், பிரஜைகள்குழு இணைப்புக்குழுத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நேற்று நடந்த பிரஜைகள் குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேறியது.

இம்மாதம் 30ம்திகதி யாழ் நகரில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த மூன்று முக்கியஸ்தர்களிடம் முதலில் கையெழுத்துபெறுவதென்றும், பின்னர் பெப்ரவரி 1ம்திகதி காலை நல்லூர் இந்து விடுதியில் பிரஜைகள் குழுவினரிடமும், அதைத் தொடர்ந்து பொதுமக்களிடமும் கையெழுத்து பெறுவதென்று முடிவுசெய்யப்பட்டது.

தமிழில் இக்கோரிக்கைகள் எழுதப்பட்டிருக்கும் என்றும், அதன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இருக்குமென்றும், 18 வயதிற்கு மேற்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களிடம் பிரஜைகள் குழுக்கள் மூலம் கையெழுத்து பெறுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தினுல் ஏற்பட்டுள்ள பாதிப்புபற்றி ஜனுதிபதிக்கு நாளை மகஜர் ஒன்று அனுப்புவதென்றும் இதுதொடர்பாக ஜனுதிபதி, அல்லது தேசிய பாதுகாப்பு அமைச்சர் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அதில் பங்குபற்றுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. (க)

# சுவிஸிலுள்ள தமிழர் திருப்பியனுப்பப்படுவர்?

(பேர்ன்)

சுவிஸில் அடைக்கலம்கோரியிருக்கும் இலங்கைத் தமிழர்களை மீண்டும இலங்கை அனுப்புவதா இல்லையா என்பது அடுத்த சில வாரங்களுக்குள் தீர்மானிக்கப்படும் என சுவிஸ் அரசு அறிவித்துள்ளது சுவிஸில் அடைக்கலம் கோருப் வெளிநாட்டவரின் எண்ணிக்கை கடந்தவருடம் மிகவும் அதிகரித்திருந்ததாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் நீதி அமைச்சர் திருமதி எலிசபெத் கொப் தசவல் தருகையில் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இரு சுவிஸ் அதிகாரிகளின் அறிக்கையை ஆராய்ந்தபின்னர், கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நிறுத்தப்பட்டிருந்த மீண்டும் தாயகம் அனுப்பும் திட்டம் மீள் பரிசீலிக்சப்படும் என்றுர். இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என உலக மன்னிப்புச்சபை அறிவித்திருந்ததைத் தொடர்ந்த இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது'' என்றுர்.

கடந்த வருடம் சுவிஸில் அடைக்கலப் கோரியவர்களின் எண்ணிக்கை 9703 ஆகும் இவர்களில் மூன்றிலொரு பகுதியினர் துருக்கியர்களும். தமிழர்களும் ஆவர்.

சுவிஸ் அரசாங்கம், அடைக்கலம் கோருபவர்கள் தாயகம் திரும்பும் பட்சத்தில் நிச்சயமாக பாதிக்கப்படுவார்களெனில் அவர்களுக்கு அடைக்கலம் அளிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சுவிஸ் அரசாங்கம், வெளிநாட்டுப்பத்திரிகைகளில் சுவிஸிலுள்ள அகதிகளின் உண்மைநிலையை விளக்கும்பொருட்டுபிரசாரம்செய்யவுள்ளது. (ய-செ)

## வாகனப் போக்குவரத்து இல்லை

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி இராணுவ முகாமிற்கு முன்னுல் உள்ள வீதியினுல் நேற்று வாகனப் போக்குவரத்து நடைபெறவில்லை.

நேற்றுக்காலையும், அப்பகுதியில் துப்பாக்கி சூட்டுக் சத்தம் கேட்டதாக கூறப்படுகி படுகிறது.

நாவற்குழி சந்தியிலிருந்து நேற்றுக்காலை அவ்வீதியால் யாழ்ப்பாணம் நோக்கி சைக்கிளில் சென்ற இருவர் துப்பாக்கிவெடிச்சத்தம் கேட்டதைத் தொடர்ந்து திரும்விட்டாகளாம்.

சகல வாகனங்களும் நேற்று கோப்பாய் ஊடாகச் சென்றதாகக் கூறப்படுகிறது, (+]

## நாளை பரிசீலனை

(கொழும்பு)

இலங்கையில் நாடற்றவர்ளுக்கு பிரஜாவுரிமை வழங்குவது தொடர்பான சட்ட மூலம் நாளை திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பிரதம நீதியரசர் திரு எஸ். சர்வானந்தா, நீதியரசர்கள் திரு. ரணதுங்கா, எல். எக்ஸ் பி. அல்விஸ் ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்றம் விசாரணை நடத்தவுள்ளது.

இந்த சட்டமூலம் அரசியல் யாப்புக்கு ஏற்புடையதா என்பதை ஆராய்ந்தே நீதிமன்றம் தீர்ப்பளிக்கும். (ச)

## யாழ் நகரில் சீனிக் கப்பல்!

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை துறைமுகத்தை நோக்கி 950 தொன் சீனியுடன் 'மேர்க்செரண்டிப்' என்னும் கப்பல் ஐந்து வாரத்தின்பின் வந்துள்ளது!

இந்த கப்பலைத் தொடர்ந்து 'மயூரட்ட' என்னும் கப்பல் 950மெட்ரிக் தொன் சீனியுடனும், அதைத்தொடர்ந்து 900 தொன் சீனியுடன் 'மாத்தற' என்னும் கப்பலும் யாழ்ப்பாணம் வருகின்றன.

யாழ்ப்பாணத்துக்குக் கடைசியாக கடந்த வருடம் டிசம்பர் 13ம் திகதியேசீனியுடன் கப்பல் வந்தது 'தங்காலை' என்னும் இந்தக்கப்பல் சுமார் ஐந்து மாத இடைவெளியின் பின்னர் டிசம்பர் மாதம் சீனியுடன் வந்தது. (ச)

## கடத்தப்பட்ட--

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்பெண்மணி பத்திரிகையாளர் இல்லை எனவும், பிரிட்டனில் உள்ள பாதுகாப்புப் பயிற்சி நிறுவனம் ஒன்றின் அங்கத்தவர் என்பது பூரணமாக நிரூபிக்கப்பட்டுள்ளது

### பிந்திய செய்தி

அவ்வாறு இருந்தும் அவரை விடுதலை செய்வது என தீர்மானித்துள்ளோம் எனவும் பூர்வாங்க விசாரணை முடிந்த பின்னர் விடுதலை செய்யப்படுவார் எனவும் தெரிவித்த ஈரோஸ் பேச்சாளர் இவருக்கு எதிராக எக்கப்படும் நடவடிக்கை இத்தகைய நோக்குடன் வருகின்ற அனைவருக்கும் எச்சரிக்கையாக இருக்கும் எனவும் நம்புவதாகத் தெரிவித்துள்ளார். மேலும் தேவையான வைத்திய சிகிச்சை அவருக்கு அளிக்கப்படுவதுடன் சகல சௌகரியங்களும் இருக்கிறது எனவும் புதுடெல்லியில் ஈரோஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (செ-ய)

## காயமடைந்தோர்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

(32 வயது), தங்கராசா ரூபகாந்தன் (15 வயது), நல்லையா கமலதாசன் (6 வயது), பெரிய கறுப்பன் சோமயன் 58வயது எம். தர்மலிங்கம் (29 வயது), அருணுசலம் ஆறுமுகம் (55 வயது).

## திடீர்...

( 1-ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கியால் சுட்டனர்.

பத்துப்பேருக்குமேல் பலியாகினர்; பதினெருபேருக்கு மேல் படுகாயமடைந்தனர்.

புகையிரதப்பகுதி ஒரே இரத்தவெள்ளமாகக் காணப்பட்டது,

அம்மேடையில் நின்றவர்கள் ஊழியர்கள் உட்பட சகலரும் இச்சம்பவத்தால் பதற்றமடைந்து நாலாபக்கமும் சிதறிஓடினர்.

யாழ்தேவி ரயில் கிளிநொச்சி ரயில் நிலையத்தை வந்து சேருவதற்கு முன்னர், துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களும்; காயமடைந்தவர்களும் உடனடியாக ஆயுதப்படையினரால் 'ட்ரக்'குகளில் ஏற்றி கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அதேசமயம் அங்கு நிறைந்திருந்த இரத்தமும், உயிர்தப்பியஊழியர்களினுல் மற்றவர்கள் கண்களிக்குத் தெரியப் படுத்தக் கூடாதென்பதற்காக நீரினுல் கழுவப்பட்டு துப்பரவு செய்யப்பட்டது.

இந்தப் பயங்கர சம்பவம் முடிந்து சிலமணி நேரங்களுக்குப்பின்னர், 3-30 மணியளவில் யாழ்தேவி ரயில் கிளிநொச்சி ரயில் நிலயத்தை வநதடைந்தது.

இறந்தவர்களின் சடலங்கள் ஒரு வாகனத்திலும், காயமடைந்தவர்கள் ஒருவாகனத்திலும் ஆயுதப்படையினரால் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனது.

இறந்தவர்களின் சடலங்கள் கிளிநொச்சிஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டன. படுகாயமடைந்தவர்கள் இ. போ. ச. பஸ் மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டனர். (மா)

## ரயில் ஓடும்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் நேற்று அசம்பாவிதங்கள் ஏற்பட்டபோதும் ரயில்சேவையல எவ்வித பாதிப்பும் ஏற்படாது எனவும் வழமைபோல் ரயில்சேவை நடைபெறுமெனவும்ரயில்வேதிணைக்களம் தெரிவித்துள்ளது. [ச]

## ஆகாயத்தாக்குதல் ஒருவர் காயம்!

[யாழ்ப்பாணம்]

ஆத்திக்காடு, மணியம் தோட்டம, அரியாலை, செம்மணி, கைதடி ஆசிய பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற ஆகாயத் தாக்குதல்களுக்குப் பயந்துஇப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வீடுகளை விட்டுப் பாதுகாப்புத் தேடி ஓடினுர்கள். இப்பகுதிகளில் உள்ள வீட்டுக் கூரைகளின் மேல் மழைபோல குண்டுகள் வந்து வீழ்ந்தன. இக்குண்டுத்தாக்குதலின் போது 'இரகு' என்ற இளைஞர் காலில் காயமேற்பட்டதால் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஐ]

## பயங்கரவாதி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

2 மணி இருக்கும். ஒரு குண்டு வெடித்த சத்தம் கேட்டது. துப்பாக்கிகளுடன் இராணுவத்தினர் வந்தனர். என்னுடன் நின்ற பலர் ரயில் நிலைய அறை ஒன்றுக்குள் ஓடி மறைந்தனர். துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டன. எங்கள் அறைக்குள் வந்தவர்களும் துப்பாக்கியால் சுட்டார்கள். நான் நிலத்தில் வீழ்ந்து விட்டேன். சிலமணி நேரத்தின் பின்னர் கிளிநொச்சிஆஸ்பத்திரிக்கும், அங்கிருந்துயாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கும் கொண்டுசெல்லப்பட்டேன்.

## நாவற்குழிச் சம்பவம்!

(கொழும்பு)

நாவற்குழி இராணுவமுகாம் மீது நேற்று முன்தினம் நடாத்திய தாக்குதலை தமிழ்ஈழ விடுதலைப்புலிகள். தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய தீவிரவாத இயக்கங்களே நடாத்தினவென்றும், இத்தாக்குதலின்போது தீவிரவாதிகள் பீரங்கிகள், ரொக்கெற்றுக்கள், இயந்திர துப்பாக்கிகள் ஆகியவற்றை பயன்படுத்தியுள்ளார்கள் எனவும் அரசு அறிவித்துள்ளது.

சுமார் 12 மணி நேரமாக நடைபெற்ற இத்தாக்குதலில் பாதுகாப்புப் படையினரும் பீரங்கிகளால் எதிர்த்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனரெனவும் தாக்குதலின்போது காயமடைந்தோர் உயிரிழந்தோர் விபரம் இதுவரை மதிப்பிடப்படவில்லையெனவும் அரசு மேலும் அறிவித்தது. (ச)

## அப்பாவி--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல்களை அதிகரித்து வருகிறது'

''மட்டக்களப்பிலுள்ள இருதயபுரம் கிராமத்தில் அண்மையில் ஆயுதப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் வேண்டுமென்றேசெய்யப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும். இங்கு ஒரு கத்தோலிக்க தேவாலயமும் அதன் மதகுரு ஒருவரும் தாக்கப்பட்டது உட்பட 30 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர்'' என்று கூறியுள்ளது. [ய-செ]

# கிளிநொச்சி காணும் புனர்வாழ்வுப்பூங்கா

ப. வை. ஜெயபாலன்

**1983** ஆடிக் கலவரத்தின்போது பாதிக்கப்பட்டு அகதிமுகாங்களில் தங்கி, இறுதிவரை போக்கிடம் இன்றி இருந்தவர்களின் குடியேற்றப்பகுதியாக - புனர்வாழ்விடமாக - கிளிநொச்சி மாவட்ட மேற்கு எல்லைக் காடுகளின் இடையே இரு புதிய கிராமங்கள் பூத்துள்ளன. ஆனைவிழுந்தான் தும்புருவில் ஆகியனவையே அவை. நாவற்குழியில் குடியேற்றப்பட்ட கைதடி முகாம் குடும்பங்கள் நீங்கலாக ஏனய முகாங்கள் அனைத்திலும் இருந்த 630 குடும்பங்கள் இங்கே குடியேற்றப்படுகின்றன.

ஆனைவிழுந்தான் கிளிநொச்சியின் முறிகண்டி பாதையில் அக்கராயனுக்கு அப்பால் 9-ம் மைல்கல்லின் வலது உட்புறமாக அமைக்கப்பட்டுள்ள கிராமம். தும்புருவில் என்ற தற்போதய ஜெயபுரம் அதே பாதையில் வன்னேரி பன்றிவெட்டி குளத்துக்கு அப்பால் அமைக்கப்பட்டுள்ளது. இது பரந்தன். மன்னார் பாதையில் பல்லவராயன்கட்டு 36-ம் மைல்கல்லின் இடது உட்புறமாக உள்ளது.

ஜெயபுரம்; புங்குடுதீவு அகதி முகாம்களிலிருந்து வந்த 26 குடும்பங்கள், மல்லாவி முகாமின் 26 குடும்பங்கள், மன்னார் முகாமின் 62, பெரியகட்டு முகாமின் 43, ஓமந்தை முகாமின் 28. கைதடி முகாமின் 04, கிளிநொச்சி ஶ்ரேட்டறிக்கழ முகாமின் 18, அக்கராயன் முகாமின் 88, சென்திரேசா முகாமின் 32, கோணவில் முகாமின் 35, குருகுல முகாமின் 85 ஆக மொத்தம் 447 குடும்பங்களைக் கொண்டுள்ளது. இவற்றில் 172 குடும்பங்களை வவனியா சர்வோதயமும் 149 குடும்பங்களை செடேக் எனப்படும் மனித முன்னேற்ற நடுநிலையமும், 50 குடும்பங்களை தென் இந்திய திருச்சபையும், 50 குடும்பங்களை யாழ். விஷ்வ இந்து பரிஷித்து என்ற ஸ்தாபனமும், 26 குடும்பங்களை யாழ் சர்வோதயமும் பொறுப்பேற்று குடி அமர்த்தி புனர்வாழ்வு அளிக்கின்றன. ஆனைவிழுந்தான் றெட்பாறு நிறுவனத்தால் பரிபாலிக்கப்படுகின்றது. இங்கே 183 குடும்பங்கள் குடி அமர்த்தப்படுகின்றன. அக்கராயன் அகதி முகாமின் 113 மற்றும் கொழும்பு அகதி முகாங்களின் 75 குடும்பங்கள்இங்கே இணைந்துள்ளன.

இவ்வருடம் தை மாதம் இவர்கள் இக்கிராமங்களுக்கு, முகாங்களில் இருந்து வரவழைக்கப்பட்டனர். ஏற்கனவே வந்த ஒவ்வொரு குடும்பத் தலைவர்களும் காடுகளைத் துப்பரவாக்கி அமைத்த தற்காலிக குடிசை இவர்களின் இருப்பிடம் ஆனது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒன்றரை ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. தனித்தனி காணிகளில் கிணறுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. நிரந்தர இல்லம் கட்டிகொடுப்பதாக திட்டம்.

அரசாங்கம் தன்பங்களிப்பை புனர்வாழ்வு அமைச்சின் பொறுப்பில் காணி ஆணையாளர் திணைக்களம் ஊடாக செயற்படுத்துகின்றது. அரசுகுடியேற்றப்பட்ட முதல் ஆறுமாதமும் ஒருவருக்கு ஒரு நாளுக்கு ரூபா 10 என்ற ரீதியில் வழங்கியது. தொடர்ந்து ஒரு வருடத்துக்கு ஒருவருக்கு ஒருமாதத்திற்கு ரூபா 100 என்ற ரீதியில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் உணவு உதவிப்பணம் வழங்கப்படுகிறது. குடும்பத்தில் ஐவருக்கே இது வழங்கப்படும். நற்காலிக குடிசை அமைப்புக்காக 20 நகரங்களும் ரூபா 500 உதவிப்பணமும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்பட்டன.

தத்தமது 1½ ஏக்கர் காணியிலும் கட்டைபிடுங்கி துப்பரவு செய்ய ரூபா 750 வேலிக்கு ரூபா 1800 முட்கம்பி விவசாய உபகரணங்கள் நாற்றுக்கள் விதைகள் ஆகியனவும் இத்திணைக்களம் வழங்க உள்ளது. ஆனால்வேலைகள் பூர்த்தியாக்கப்படவில்லை. ஒவ்வொரு கிணற்றிற்கும் புனர்வாழ்வு அமைச்சு 10,000 ரூபாவும் நலன்புரி ஸ்தாபனம் 5000 ரூபாவும் செலவிடுவதாக ஒழுங்கு. அமைக்கப்படவுள்ள இல்லங்களுக்கு அமைச்சு சார்பில் ரூபா 13500 கலவர காலத்தில் உலகெங்கும் அரசு பெற்ற நன்கொடைகள் புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக இவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது. இதிலும் இலங்கை பிரசை அல்லாதவர்களுக்கே இன் நன்கொடைகள் பயன்படுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு நலன்புரி ஸ்தாபனத்துக்கும் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. சில அவற்றில் பணிமனைகளை அமைத்து பணியாளர்கள் மூலமாக இயங்குகின்றன. பாடசாலைகள், மருத்துவநிலையம் ஆகியனவற்றையும் நலன்புரி ஸ்தாபனங்கள் தம்பகுதியில் அமைத்து வருகின்றன. வவனியா சர்வோதய ஸ்தாபனம், பாடசாலை, மருத்துவநிலையம் ஆகியனவற்றை இயக்க ஆரம்பித்துவிட்டது. கிணறுகள் அமைப்பு, சலூன், வர்த்தக நிலையங்கள் அமைப்பு, கலை கலாச்சார சமய நிகழ்ச்சிகள் அமைப்பு ஆகியனவற்றிலும் இது முன்னணி வகிக்கின்றது. ஒழுங்கான ஒரு பணிமனையும் திட்டமுகாமையாளர் திரு. தம்பிஐயா அவர்கள் தலைமையில் கணக்காளர், மருத்துவர் சமூக இணைப்பாளர்கள் என்றவாறு சிறந்த பணியாளர் குழுவையும் இத்தாபனம் கொண்டுள்ளது. செடேக் நிறுவனம் கிணறுகள் அமைப்பு, பாடசாலை இயக்குதல், கட்டிட அமைப்புகள் ஆகியனவற்றில் சிறப்பானசெயற்பாட்டைச் காட்டி வருகிறது. துடிப்பான இளைஞர் திரு.

அவர்களின் பொறுப்பில் ஆசிரிய, ஆசிரியைகள், இளைஞர்களைப் பணியாளர்களாக கொண்டு இது இயங்குகின்றது. தென் இந்தியதிருச்சபையின் ஆக்கவேலைகள் தற்போது மிகத் துரிதம் கண்டுள்ளது. கட்டிமுடிக்கப்பட்டுள்ள குழந்தைகள் பராமரிப்பு நிலையம், வர்த்தகநிலையம் ஆகியன விரைவில் திறக்கப்பட உள்ளன. திரு. நிமால் பொறுப்பாக நின்று பணியாற்றுகிறார்.

உணவு உதவிப்பணம் வழங்கப்படும் ஒன்றரை ஆண்டு காலத்தள் குடும்பங்கள் தம் நிலத்தில் தம் கிணற்று நீர் மூலமான உபஉணவுப் பொருள் உற்பத்தி மூலம் வருவாயில் சுய திருப்தி காணும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஓராண்டு பூர்த்தியாகும் இந்நிலையிலும் காணித்துப்பரவாக்கம் முடிவுறவில்லை. மொத்தம் சுமார் 100 கிணறுகள் மட்டுமே பூர்த்தியாகியுள்ளது. எதிர்ப்பட்டுள்ள மழைகாலத்தில் இவ்வேலைகள் நடைபெறவும் முடியாது. வேலிகள் அடைக்கப்படாததால் இம்மாரிகால நாற்றுக்கள், விதைகள் பயிரிடுகைகள் கூட நடைபெறல் இயலாது. பணவரவு, போக்குவரத்து போன்றனவும் சீர்கெட்டுள்ள நாட்டுநிலையும் இத்திட்டம் நிறைவுநிலை அடைதலைத் தடுக்கும் முக்கிய காரணிகள் எனவாம். ஆயினும் நலன்புரி ஸ்தாபனங்கள் தம்செயற்பாட்டை மேலும் தீவிரமாக்கல் விரும்பத்தக்கது. ஸ்தாபனங்களின் ஒத்த ஒரேவித செயற்பாடுகளும் இங்கு மேற்கொள்ளப்படுதல் நலம் எனலாம். கிணறுகள் விஷயத்தில் காணப்படும் வேறுபாடுகளும் கொடுப்பனவுகளும் இதற்கு உதாரணம். வீட்டு அமைப்பிலும் ஸ்தாபனத்துக்கு ஸ்தாபனம் மாறுபாடான மாதிரி திட்டங்களை கொண்டிருப்பதாக தெரிகிறது. அருகருகே உள்ள வீடுகள் வெவ்வேறு ஸ்தாபனங்களின் பராமரிப்பின் கீழ் வருகின்றன. மாதிரிகள் மாறுபடும்போது குறைந்த பயன் பெறும் குடும்பம் வித்தியாசம் கண்டு வேதனைப்படுவது இயற்கையானதே.

## ஜனனியின் கணக்கு - 3

எண்களிலே மிகவும் அதிசயமான எண் எது தெரியுமா? நீங்கள் ‘அந்த’ எண்ணை எந்த எண்ணால் பெருக்கினாலும் வரும் தொகையின் கூட்டுத்தொகை அந்த எண்ணாகவே இருக்கும். ‘அந்த’ அதிசயமான எண் எது தெரியுமா?

**விடை: ஒன்பது.**

உதாரணமாக ஒன்பதை மூன்றால் பெருக்குவோம். இருபத்தேழு ஆகும். ‘இருபத்தேழு’ல் இருக்கும் இரண்டையும் ஏழையும் கூட்டினால வரும் விடை ஒன்பதேதான். இவ்வாறு ஒன்பதை எந்த எண்ணாலும் பெருக்கி விடையைக் கூட்டிப் பாருங்கள். ‘ஒன்பது’ ஒரு அதிசயமான எண்! இல்லையா!

— புஷ்ப ஜனனி.

✶ காலமுன்னேற்றம் கண்டுள்ள சாதனைகள்!

# 5000 ஆண்டுகளில் தொலைதொடர்பு சாதனங்களின் வியத்தகு வளர்ச்சி!

✶ ஊரெழு
த. முத்துக்குமாரசாமி

**கி. மு. 3300 ல்**

மெசப்பொட்டெமியாவின் கீழ்ப்பகுதியில் வாழ்ந்த சுமேரியர்கள் களிமண் தட்டுகளிலே படங்களை வரைந்து தமது எண்ணங்களை வெளிப்படுத்த முயன்றார்கள். எனினும் இவர்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் மற்றவர்கள் அறியும்படி செய்ய முடியவில்லை.

**கி. மு. 3100**

இக்காலகட்டத்தில் எகிப்தியர்கள் ஈரலிப்புள்ள களிமண் தகடுகளில் மிருகங்கள், பறவைகள் மற்றும் பொருள்கள் முதலியவற்றின் படங்களை வரைந்து தமது எண்ணங்களை வெளியிட்டார்கள். இதன் மூலம் குறிக்கப்பட்ட குறியீடுகளுக்கு நிரந்தரமான கருத்துக்களை ஏற்படுத்தினர்.

**கி. மு. 2800 - 2600**

இக்காலகட்டத்தில் எகிப்தியர்கள் களிமண் தட்டுகளில் படங்களின் மூலம் குறிக்கப்பட்ட கருத்துக்களை வெளியிடாமல் நேர்க்கோடுகள் V போன்ற வளைவு கோடுகள் மூலம் தங்களது எண்ணங்களை வெளியிட்டார்கள். இக்கோடுகளே எழுத்துக்களின் ஆரம்பம் எனச் சொல்லலாம்.

**கி. மு.1100**

இக்காலகட்டத்தில் பொனிசியர்கள் (Phoenicians) எழுத்துக்களின் அட்சரங்களைக் கண்டு பிடித்தார்கள். இவ்வெழுத்துக்கள் கிரேக்கர்களினால் பாவிக்கப்பட்டு ரோமானியர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இதுவே இன்றைய எழுத்துக்களின் அத்திபாரமாகும்.

**கி. பி. 100**

தாவரங்களின் நார்களைக் கடைந்து கூழாக்கி அதன் மூலம் மடிக்கக்கூடிய காகிதத் தாள்களைச் செய்யலாமெனச் சீனர்கள் சிந்தித்தார்கள். இதன் வளர்ச்சிதான் இன்றைய காகிதத் தாள்கள்.

**கி. பி. 1440**

ஜொகன்ஸ் கட்டன்பேர்க் [Johannes Gutenberg]என்னும் ஜெர்மானியர் மெயின்ஸ் [Mainz] நகரில் முதலாவது அச்சகத்தை நிறுவினார்.

**கி. பி. 1479**

பிரெஞ்சு நாட்டு பதினொராம் லூயி மன்னன் [Louis XI] ரோமானியர்களின் அடிப்படையில் குதிரைவண்டிமூலம் முதலாவது தபால் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

**கி. பி. 1794**

பிரான்சில் முதலாவது தந்திச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. [AIR Telegraph] என்னும் ஆகாயத் தந்திச் சேவை மூலம் 600 கிலோ மீற்றர் தூரமுள்ளஇடத்துக்குச் செய்தியை அனுப்ப எட்டு மணித்தியாலங்கள் சென்றன.

**கி. பி. 1844**

Samuel Morse என்பவர் Morse Code என்னும் முறை மூலம் அதிவேக தந்திச் சேவையை அறிமுகப்படுத்தினார். மின்சார மூலம் செயல்பட்ட இத் தந்திச்சேவை நிமிடத்துக்கு முப்பது சொற்களை தந்திமூலம் அனுப்பியது.

**கி. பி. 1851**

பிரான்ஸுக்கும், பெரிய பிரித்தானியாவுக்கும் இடையில் உள்ள கடலுக்கடியில் [Cables] தந்திக் கம்பிகள் கோலியாத் [Goliath] என்ற கப்பல்மூலம் இடப்பட்டு இரு நாடுகளுக்கிடையில் தந்திச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

**கி, பி. 1854**

தொலைபேசிச் சேவையில் எவ்வாறு மின்சாரஅமைப்பை பூரணமாகப் பயன்படுத்தலாம் என்பது பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையை பிரான்ஸ் நாட்டவராகிய சால்ஸ் போசியல் [Charles Borseul] ‘இலஸ்ரேஷன்’ [Ilustration] என்ற ஏட்டின் மூலம் வெளியிட்டார்.

**கி. பி. 1876**

அமெரிக்கரான அலக்சான்டர் கிரகாம் பெல் [Alaxander Graham Bell]என்பவர்தொலைபேசியைக் கண்டு பிடித்தார்.

**கி. பி. 1887**

ஜெர்மானியரான ஹேட்ஸ் [Hertz] என்பவர் றேடியோ மின்அலை மனிதகுரலை ஒருநீள் கோட்டில், இடையில் எவ்வித சாதனமும் அமைக்கப்படாமல் கொண்டுசெல்லக் கூடியது என்பதை அவதானித்தார்.

**கி. பி- 1896**

பிரான்சின் பிரான்லி[Branly] என்பவரின் ஒலிவாங்கியின் தத்துவத்தைப் பின்பற்றி [Principles of Antenna]மார்க்கோனி [Marconi] வானொலியைக் கண்டுபிடித்தார்.

**கி. பி. 1925**

பிரிட்டனைச் சேர்ந்த ஜோன் எல் பேயிர்ட் [John' L Baird] என்பவர் உலகின் முதலாவது ஒளிபரப்புச் சேவையை [Telivision System] கண்டு பிடித்தார்.

**கி. பி. 1928**

பங்குனி 27-ம் திகதி பிரான்ஸ் - அமெரிக்கா - ரேடியோ ரெலிபோன் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

**கி. பி. 1946**

ஆங்கிலேயர் ரெலெக்ஸ் சேவையை அபிவிருத்தி செய்தார்கள்.
[Telegraph - Exchange- Telex]

**கி. பி. 1956**

நியூபவுண்ட்லாண்ட் — ஸ்கொட்லான்ட் [Newfoundland - Scotland] கடல் தந்திச் சேவை வட அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டது.

**கி. பி. 1962**

ஜூலை 10 - 11 இரவில் அத்திலாந்திக் சமுத்திரத்துக்கப்பால் அமெரிக்கா ரெல்ஸ்ரார் [Telstar] செய்மதி மூலம் ஒளிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

**கி. பி. 1965**

அமெரிக்காவினால் ஏலிபேட் [Early Bird] என்ற சர்வதேச தொலைதொடர்புச் செய்மதி விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

ஆதிமனிதன் அஞ்சலோட்ட [Marathan Race] முறையைப் பின்பற்றிச் செய்திகளை ஓர் இடத்திலிருந்து மற்றோர்இடத்துக்கு எடுத்துச் சென்றான். இன்று விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் செய்மதிகளின் உதவியால் சிலஎண்களைச் சுற்றுவதன் மூலம் அயல்நாடுகளில் உள்ளவர்களை சில விநாடிகளில் தொடர்பு கொள்ளலாம். இன்னும்ரெலிகொப்பியர் [Telecopier]மூலம் வரை படங்களையும் எண்களையும், குறிப்புகளையும் ஒரு நாட்டிலிருந்து மற்றநாட்டுக்குச் சில விநாடிகளில் தொலைபேசி எண்களைச் சுழற்றி அனுப்பிவைக்கலாம். விஞ்ஞானத்தின் விந்தைதான் என்ன? நாளை விடிந்தால் இன்னும் பல புதிய சாதனைகளை நாம் காணக்கூடியதாய் இருப்பின் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆதாரம்:
France Information.
12—1—1984.

## சிவதொண்டன்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ரில் இருப்பதை சிவதொண்டன் பத்திரிகையின் தனித் தன்மை என்றே பாராட்ட வேண்டும்.

சைவப்பெரியார் சிவாதசுந்தரம், காஞ்சிப்பெரியவர் போன்ற பேரானர்களின்தமிழ் கட்டுரைகளும் ராஜாஜி ரீ. எம்.பி. மகாதேவன்போன்றோரின் ஆங்கிலக் கட்டுரைகளும் இந்த நூல் எக்காலத்தும் பொன்னேபோற் போற்றிப் பேணத்தக்கது என்று உறுதி கொள்ளச் செய்கின்றன.

மரத்துக்குதான் மரம்...... என்னும் பந்தியைப்போன்ற பல பந்திகளைக் கொண்ட பண்டிதமணியின் கட்டுரையும் என் நெஞ்சில் இடங்கொண்ட யோகசுவாமிகள், இந்துப்பண்புகள், சிவானுபூ திவாசகம், திருவாசகம், திருமுறைகளின் பெருமை முதலிய கட்டுரைகளை திரும்பத் திரும்பவாசிப்பதால் ஒரு சைவசமயி கணிசமான சமய விளக்கத்தையும், சமய ஒழுக்கத்தையும் பெற முடியும்.

சந்தா நேயர்களுக்கு 15 ரூபா வென்றும் ஏனையோருக்கு 25 ரூபாவென்றும் விலை குறிக்கப் பெற்றிருக்கும் இந்தப் புத்தகத்தின் சிவதொண்டன் என்னும் பெயருக்கு சிவதொண்டுக்குவும், சிவதொண்டருக்கும், பிரிய மாணவனுகவும் விளங்கும் பத்திரிகை என்றேசொல்ல வேண்டும்.

இராமகிருஷ்ண விஜயம், ஞானபூமி போன்ற பத்திரிகைகளின் அமைப்பு நோக்கங்களைக் கொண்டு சிவதொண்டன் பத்திரிகை வெளிவந்தால் சிவதொண்டன் என்னும் பெயருக்கு சாதாரண சைவமக்களைச் சிவதொண்டுக்குவது என்ற கருத்தையும் சொல்லமுடியும். இப்படியான சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கின்ற பெறக்கூடிய யாழ்ப்பாண சைவ சஞ்சிகை சிவதொண்டன் ஒன்றே எனத் துணிந்துகூறலாம்.

—அருளாளன்

## பிரசாத்திற்கு இன்று ஒரு வயது



தனது பிறப்பின் ஓராண்டு நிறைவை இன்று திருநெல்வேலி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்திற்கு அருகாமையில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடும் செல்வன் பிரசாத்தை வாழைச்சேனை தேசியகடதாசிஆலைகூட்டுஸ்தாபனத்தில் கடமையாற்றும் அப்பா, அம்மா, அம்மம்மா, பெரிமாமா, அத்தை, சித்தப்பா, சித்தி, சின்ன மாமா, சின்னச்சித்தி, அப்பப்பா, அன்ரிமார், சித்தப்பாமார் அனைவரும் பத்திரகாளி அம்பாளின் அருள்பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

''சோதி வாசம்'' பத்திரகாளிகோவிலடி, திருநெல்வேலி.

(C 385)

## தைப்பூசத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு ஸ்ரீசெந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00மணிக்கு விசேஷ அபிஷேகமும் அதனைத்தொடர்ந்து வசந்த மண்டப பூஜையும் செந்தில்குமரன் வள்ளிதேவசேனு சமேதராக உள்வீதி வலம்வருதலும் இடம் பெறும். நண்பகல் 12-00 மணிக்கு மகேஸ்வர பூசையும் (அன்னதானம் நடைபெறும்.

## வடக்கு, கிழக்கு அரச அதிபர்கள் நாளை கொழும்பில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஒன்பது மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் நாளை திங்கட்கிழமை புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளனர்.

இந்த இரு மாகாணங்களிலும் தீவிரவாத நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்ட அகதிகளை மீண்டும் குடியேற்றுவதற்கான திட்டங்கள் பற்றி இச்சந்திப்பில் ஆராயப்படும். (ச)

## வடக்குக்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

1980-ம் ஆண்டு முதல் தமிழர்களின் கல்விக்கான சவால் பலதுறைகளிலிருந்து எழுந்துள்ளது. பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தமது கல்வி வாய்ப்பினை இழந்துள்ளனர். இந்த நெருக்கடி மிகுந்த தருணத்தில் கல்வியமைப்பில் முக்கியமாக வடக்கு கிழக்கு மாகாணங்களை முழுமையாக நோக்கி எமக்கெனத் தற்காலிக வெள்ளை அறிக்கையினை உருவாக்கி அவற்றைப் பகுதி பகுதியாக வேனும் இப்பொழுதிருந்தே செயற்படுத்த ஆரம்பிக்க வேண்டும்.

### சில யோசனைகள்

இத்திட்டத்தில் பின்வரும் சில கருத்துக்களும் இடம் பெறலாம். அண்மையாகவுள்ள பொது இடங்களில் ஆரம்ப பாடசாலைகளை அமைத்தல், இடைநிலைப் பாடசாலைகள், கொத்தணிப் பாடசாலைகளைத் தொகுதிரீதியாக அமைத்தல், பன்மொழிப் பாடசாலைகளைக் கலப்பு இனப் பிரதேசங்களில் அமைத்தல், இன்றைய நெருக்கடிகளால் உயர் கல்வி வாய்ப்பை இழந்தவர்களுக்கு மாற்றுவழிகள் மூலம் உயர் கல்வி அளித்தல், அங்கவீனர்களுக்கான விசேட கல்விமுறைகள், கல்வியை அபிவிருத்தி முயற்சிகளுடன் தொடர்பு படுத்தல், தொழிற்கல்வி முறைகள், கலவி முறையுடன் வேலைவாய்ப்பையும் ஒருங்கிணைத்தல், இரண்டு மாகாணங்களிலுமுள்ள நகரங்கள், கிராமங்களைஉள்ளடக்கியதாக நூலக அமைப்புமுறையை விரிவாக்கல், இரண்டு மாகாணங்களிலுமுள்ள பல்கலைக்கழகங்கள் இப்பிரதேச வளர்ச்சிக்கு முழுமையான பங்களிப்பினை செய்வதுடன் கல்வியின் தரத்தையும் உயர்த்த உதவ வேண்டும்.

எல்லாவற்றிலும் மேலாகப் பல்கலைக்கழகங்களும் பாடசாலைகளும் மாணவர்களிடையே உரிமைகள், கடமைகள் பற்றிய உணர்வை அவர்களின் இருதயத்திலும் எண்ணத்திலும் உருவாக்கும் விதத்தில் கற்பித்தல் நடைமுறைகளை வெளிப்படுத்தல்வேண்டும்.

இத்தகைய திட்டத்தினைஉருவாக்க வடக்கு, கிழக்கை இணைத்து, பிரதேச கல்விச் சபை உடனடியாக அமைக்கப்படல்வேண்டும். எனது எண்ணப்படி இப்பிரதேச கல்விச் சபை அமைக்கும் நோக்கிற்குக் கூடுதல் முக்கியத்துவத்தை நாம் இக்காலகட்டத்தில் அளித்தல்வேண்டும்.

# இந்தியப் பாராளுமன்றம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

டேல், சரோஜினி நாயுடு, மௌலானு அபுல் கலாம் அஸாத், டாக்டர் ராஜேந்திர பிரசாத், ஜவஹர் லால் நேரு, சி. ராஜகோபாலாச்சாரியார், சுபாஸ் சந்திரபோஸ் போன்ற இந்திய தேசியத் தலைவர்களின் படங்களும் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

லோக சபை, ராஜ்ய சபை கூடும் மண்டபங்கள் அரை வட்ட வடிவமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. லோகசபை சபாநாயகரின் ஆசனத்துக்கு மேலே ''தர்மசக்ரப்ரவர்த்தனய'' என்று எழுதப்பட்ட விருது வாக்கியமொன்று காணப்படுகிறது. 'உரிமைக் காகச் சுழலும் தர்ம சக்கரம்' என்று இது பொருள்படும். இந்த விருது வாக்கியம் மின் சாரத்தின் மூலம் அலங்கார ஒளியேற்றப்பட்டு அவைவரின் கவனத்தையும் பளிச்சென்று கவர்கிறது.

இதேபோல் ராஜ்ய சபைத் தலைவரின் ஆசனத்துக்கு மேல் ''இறைவனே எமது வழி காட்டி'' என்ற வாக்கியம் எழுதப்பட்டிருக்கிறது. இந்தியப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தங்கள் வாழ்க்கையை உன்னத நிலைக்கு உயர்த்திக்கொள்வதற்கு உதவும் முகமாக இந்தத் வேத வாக்கியங்கள் அங்கே இடம் பெற்றிருக்கின்றன.

இந்தியப் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு பாராளுமன்றத்துக்கு உள்ளேயே சகலவித மான வசதிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த வசதிகளை யெல்லாம் உள்ளடக்குவதற்காக அந்த மாபெரும் கட்டடம் ஒரு சிறிய நகரமாகவேயிருக்கிறது. மாணிக்கப் பட்டிருக்கிறது நூல் நிலையம் ஒன்றும் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து அறிந்துகொள்வதற்கான தகவல் பிரிவு, எந்த ஒரு விடயத்தையும் பற்றி அறிந்து கொள்வதற்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் ஒய்வு பெறும்போது தேநீர், கோப்பி சிற்றுண்டி வகைகளைச் சுவைப்பதற்குத் தேவையான வசதிகள் எல்லாமே ஒரே குடையின் கீழ் அங்கே உள்ளன.

இந்தியப் பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளும் கூட்டங்களை நடத்தாத காலங்களில் பாராளுமன்ற அங்கத்தவர்கள் நீண்டநாள் ஓய்வெடுத்துக்கொள்கிறார்களே என்று நினைப்பது தவறு. அங்கே கூட்டத்தொடர்கள் நடைபெறு விட்டாலும் பல்வேறுவிதமான விடயங்களை ஆராய்வதற்கு ஆலோசனைக் கமிட்டிக் கூட்டங்கள் நடைபெறுவதுண்டு. இந்தக் கூட்டங்களுக்கெல்லாம் அவர்கள் அடிக்கடி வந்து போகத்தான்வேண்டும். இதனுல் பாராளுமன்றக் கூட்டங்கள் இடம்பெறுத நாட்களில் கூட இந்தியப் பாராளுமன்றம் சுறுசுறுப்பாகவே இருக்கும்.

பாராளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பப்படும்போதும், சட்டமூலங்கள், தீர்மானங்கள், பிரேரணைகள் மீதான விவாதங்கள் இடம்பெறும் போதும், அவற்றுக்கு அமைச்சர்கள் பதில் அளிக்கும்போது பல்வேறுவிதமான உறுதி மொழிகளைக் கொடுப்பது வழக்கம். இந்த உறுதிமொழிகள் யாவும் உரியவிதத்தில் நிறைவேற்றப்படுகின்றதா என்பதைக் கவனித்துக்கொள்வதற்கென்றே தனிக் கமிட்டி ஒன்று இயங்கிவருகிறது. இந்தக் கமிட்டியில் அமைச்சர்கள் அங்கத்தவர்களாக இருக்க முடியாது. எம்.பி.க்கள் மாத்திரமேஇதில் அங்கம் வகிக்கமுடியும். அரசாங்கம் அமைச்சர்கள் மூலமாகக் கொடுக்கும் உறுதிமொழிகளை நெறிப்படுத்தி இந்த உறுதிமொழிகள் அரசாங்கத்தினுல் நிறைவேற்றப்படுகிறதா என்பதை இந்தக் கமிட்டி அறியத்தரவேண்டும்.

## சேர். பொன்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

போது வேதவிதிப்படி எரி மூட்டித் தீமைகளை வராமற் தடுப்பவர் வாழ்கின்றதிலேல என்று ஞானசம்பந்தர் பாடுகிறர். 'கற்றுங்கு எரியோம்பி கலியை வாராதே செற்றார் வாழ்தில்லை' என்று அத்தேவாரம் தொடங்குகின்றது. எரியோம்புதல் என்ற நித்தியாக்கினியைக் குறிக்கும்.

### திருவிழா

இக்கோயிலில் திருவிழா பங்குனி மாதம் பத்து நாட்கள் நடைபெறும். பங்குனி உத்தரத்தன்று தீர்த்தத்துடன் திருவிழா நிறைவுபெறும். பிரதோஷம், ஆவணிமூலம், திருவெம்பாவை, மகாசிவராத்திரி முதலிய திருநாட்கள் விமரிசையாகக் கொண்டாடப்படும். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று ஸ்ரீ சக்கர பூசையுடன் இராஜராஜேஸ்வரி உற்சவம் நடைபெறும். சமயகுரவர் பூசையும் விசேடமாக நடைபெறுதல் வழக்கம். தேர்த்திருவிழாவில் அம்மனுடைய தேரைப் பெண்களே இழுப்பது இக்கோயிலுக்கு அமைந்ததொரு விசேடமாகும்.

### நேபாள மன்னர் வழிபாடு செய்த கோயில்

1957ஆம் ஆண்டு இக்கோயிலின் நூற்றாண்டுப் பூர்த்தி கொண்டாடப்பட்டது. அப்பொழுது உலகின் ஒரேயொரு இந்து மன்னராகிய 'மகேந்திரா' என்ற நேபாள மன்னர் கோயிலுக்கு வந்து வழி பாடு செய்தார்.

தமிழ்நாட்டுக் கோயில்களையும் அங்குள்ள சிற்பச் செல்வங்களையும் பற்றி விரிவான முறையில் நூல் செய்தவர் அந்நாட்டைச் சேர்ந்த சைவப் பெரியார் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான். அப்பெரியார் ஈழம் வந்தபோது இவ்வாலயத்தைத் தரிசித்துச் சென்று, இவ்வாலயச் சிற்ப வடிவுகள் பற்றியும் போற்றி எழுதியுள்ளார்.

இங்ஙனம் எல்லாச் சிறப்புகளும் நிறைந்த இராஜராஜேஸ்வரி அம்பாள் சமேத பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை ஒருமுறையாவது சென்று தரிசிக்கும் பேறு பெற்றவர்கள் பாக்கியவான்களே.

## போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பகுதிகளில் இராணுவ முகாம்களைச் சுற்றிப்போடப்பட்டிருக்கும் ஆயிரம் மற்றர் பாதுகாப்பு வலயத்தை உடன் வாபஸ் பெறுமாறு கோரி, வெலிணை உதவி அரசாங்கஅதிபர் காரியாலயத்தின் முன் மறியல் போராட்டம் ஒன்றை நாளைதிங்கட்கிழமைநடாத்தப் போவதாக புங்குடுதீவு வெகுஜன விழிப்பு ஒன்றியம் அறிவித்துள்ளது.

## பொன்னுலை—

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நல்கியுள்ளது. ஞாயிறு தோறும் நடைபெறும் பஜனையிலே இந்தப்பாடல்கள் பலவும் தவறாது இசைக்கப்பட்டு வருகின்றன. பொன்னுலைப் பதியினிலே, பரந்தாமன் புகழ் பாடும் ஆர்வத்தால் அவன் காலடிதனைப்பணிந்து அவனருளுந்தான் பெற்று ஆண்டு பலவாக பஜனை மனமுதான் பொழிந்து பாடுகின்ற ஞானமும், கூடவரப் பாட்டெழுதிப் பாராயணம் செய்து பக்தர்களைப் பாடவைத்து, நல்ல திருத்தொண்டு நயமுடனே ஆற்றிவரும் வல்லவன் சிவகுருநாதன் என்ற அன்பர்கள் பாராட்டும் பெருமை பெற்ற நாராயணதாசனின் ''பொன்னுலை ஸ்ரீமந நாராயணன் பக்திரசக்கீர்த்தனைகளும் பஜனைப் பாடல்களும்'' என்னும் நூல் தைப்பூசத் தினமான இன்று ஆலயவாயிலிலே வெளியடப்படுகின்றது. சுமார் 40 வருடகாலமாக ஞாயிறு தோறும் இந்தப் பஜனையை விடாது தொடர்ந்து நடத்தி வரும் திரு. சிவகுருநாதன் அவர்கள் நாராயணன் மீது நல்ல பல பாடல்களை ஆக்கி அதற்கு இசையமைத்து அதனைத்தானே பாடிப் பரவியதே ஒரு சிறப்பு அம்சமாகும். இவருடைய பாடல்களைப் பல பெரியார்கள் புகழ்ந்து பாராட்டியுள்ளனர்கள். பல இசைவாணர்கள் இசையரங்குகளிலும் வானொலி-தொலைக்காட்சியிலும் பாடி வருகின்றார்கள் காரணம் இசைப்பாடலுக்குரிய இலக்கணவரம்புகள் கொண்டதாகவும், நல்ல இசையமைப்பு உடையதாகவும். வெவ்வேறு தாளங்களில் அமைந்தவையாகவும், கருத்தாழமும் பக்திச்செறிவும் அழகும் உடையனவாகவும் அவை இருப்பதாகும்.

நாராயணதாசனின் பாடல்கள் ஆண்டவனை நினைத்து உருகி உள்ளம்கனிந்து பாடவும் இசையரங்குகளில் பாடவும் தகுதியுடைய சிறந்த பாடல்கள். இந்தப்பாடல்களை இந்த ஆலய வாசலிலே வருடந்தோறும் நாராயணன் திருமுன்னர் இசைவிழாவாக நடத்துவதற்கு இசைப்புலவர்கள் திட்டமிட்டு வருகின்றார்கள் இதுவும் ஒரு திருவையாறு உற்சவம்போன்று பொன்னுலையில் வருடந்தோறும் நடந்தேற நாராயணனின் நன் மலர்த்தாளை வணங்குவோமாக.

இந்த இசைப்பாடல் நூலைச் செட்டியார் அச்சகத்தினர் நல்லமுறையில் அச்சுப்பதிவு செய்து வெளியிட்டுதவியுள்ளார்கள். வழிபடுவோர் சபையினரும் அச்சகத்தினரும் பாராட்டுக்குரியவர்களே!

ஓர் அடியான்.

★ 12-01-86ல் வந்த வடகோவை தி. செம்மனச் செல்வியின் 'என்ன நேரம் என்ன நடக்குமோ' என்னும் கவிதைக்கு தென் மட்டுவில் சி. சதாசிவம் பதில்.

## வீண்பயம் வேண்டாம்

என்ன தங்கச்சி செம்மனச் செல்வி
உன்னை ஒண்டு சொல்லுறன் கேளனை
என்ன நேரம் என்ன நடக்குமோ
எண்டு நீயேன் 'அறளை' அறுக்கிறுய்?

வசந்தி சாந்தன் ராணி எல்லாம்
வளரும் பயிர்கள் வைதிடல் வேண்டாம்
முரளித் தம்பியை மூலைக்குள்ளே
முடங்கிடச் செய்தால் வந்திடும் விசரே

நாளைக்கு நாங்கள் சாவதானுலும்
இன்றைக்கு எங்கள் கடமையைச் செய்வோம்
அடுத்த கணத்தில் மரிப்ப தானுலும்
இந்தக் கணத்தில் செய்வதைச் செய்வோம்.

சாட்டுச் சொல்லித் தப்புதல் வேண்டாம்
நாட்டு நிலமையைத் திருத்திடப் பார்ப்போம்
பாட்டுப் பாடிப் பதிலும் தந்தேன்
சினம் கொள்ளவேண்டாம் செந்தமிழ்ச்செல்வி!

-தென்மட்டுவில் சி. சதாசிவம்

# ஈழநாடு
# வார மலர்
THE EELANADU VARAMALAR


## 'சிலிண்டர் வெடி'
# இராணுவ தரப்பில் சேதம் என அறிவிப்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பகுதியில் இடம்பெற்ற 'சிலிண்டர் குண்டு'த் தாக்குதலில் ஆயுதப் படையினர் சென்ற ஜீப் வண்டி முற்றுச் சேதமடைந்ததுடன் அதிலிருந்த 4 சிப்பாய்கள் பலியானார்கள். இருவர் படுகாயமுற்றனர் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இரு ஜீப் வண்டிகளிலும், இரு கவச வாகனங்களிலும் ரோந்துசென்ற ஆயுதப்படையினர் மீதே இத்தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின் பின்னர் பொதுமக்களின் இரு வீடுகள் எரிக்கப்பட்டன. பலியானவர்களின் சடலங்களும் காயமடைந்தவர்களும் ஹெலிகொப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டனர். (மா)

## மரம் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மத்தி சனசமூக நிலையம், வாசிகசாலை ஆதரவில் அடுத்தமாதம் 2 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தொழில் அதிபர் க. கனகராசா (ஜே. பி) தலைமையில் மரம் நாட்டு விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

தொல்புரம் மத்தி சன சமூக நிலைய மைதானம் கொட்டடி பதி ஆதிமுத்துமாரி அம்மன் ஆலயம், இந்து இளைஞர் மன்றம், அ மி. பாடசாலை சர்வோதயக் காணி உட்பட தொல்புரத்திலுள்ள பல்வேறு பொதுநல ஸ்தாபனங்களிலும் மரங்கள் நாட்டப்படவுள்ளன.

இதற்கான ஒழுங்குகளை யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ பொதுச் செயலாளரும் தொல்புரம் மத்திய இந்து இளைஞர் மன்ற உபதலைவருமாகிய திரு எஸ் எஸ். வரதராசா செய்துள்ளார். (ச)

## "போராளிகளுக்கு மக்கள் ஆதரவு மிக முக்கியமானது"

(புங்குடுதீவு)

"விடுதலைப் போராட்டங்கள் அகிம்சை ரீதியில் அமைந்தலென்ன, ஆயுத ரீதியாக நடந்தாலென்ன மக்கள் ஆதரவும் எழுச்சியும் இன்றேல் வெற்றிபெறமுடியாது மக்கள் ஆதரவில்லாத போராட்டங்கள் வெற்றி பெற்ற சம்பவங்கள் உலகில் எங்கும் நிகழ்ந்ததில்லை. தென்னிலங்கையிலுள்ள இடதுசாரிக்கட்சிகள் தமிழர்களின் நியாயமான போராட்டங்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பினும் மக்கள் ஆதரவின்மையல் எதுவித பிரயோசனமும் ஏற்படாதிருக்கிறது 1971ம் ஆண்டு இடம்பெற்ற ஜனதாவமுகதி பெரமுனையின் ஆயுதப் போராட்டம் வெற்றிபெற முடியாமைக்கு மக்கள் ஆதரவு அவர்களுக்குக் கிடைக்காமையே காரணமாகும் காந்தியடிகளின் அகிம்சைப்போராட்டம் வெற்றிபெற்று, அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அசைத்தமைக்குக் காரணம், மக்கள் காந்தியடிகளுக்களித்த அபரிமிதமான ஆதரவேயாகும்."

ஊரைதீவு சனசமூக நிலையத்தினரும், புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத்தினரும் இணைந்து நடத்திய "விடுதலையை வென்றெடுப்பது அகிம்சையா, ஆயுதமா?" என்ற தலைப்பிலான பட்டிமன்றத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தமிழர் கலாசாரச் சங்கத் தலைவர் சட்டத்தரணி திரு. எஸ் கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அகிம்சைக்காக வாதிட்ட மன்றத்தினருக்கு மன்றத்தலைவர் ஸ்ரீதானும், ஆயுதத்துக்காக வாதிட்ட நிலையத்தினருக்கு நிலையத்தலைவர் திரு செ. நித்தியானந்தனும் தலைமையேற்று வாதிட்டனர் மன்ற அணியில் ந. தனபாலசிங்கம், சொ. நமிழரசி ஆகியோரும் நிலைய அணியில் அநிமலன், ந. அன்பரசி ஆகியோரும் பேசினர்.

## மினிபஸ் - சைக்கிள் மோதல் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்]

மினிபஸ் - சைக்கிள் மோதலில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார்! மற்றுமொருவர் படுகாயங்களுக்குள்ளானார்!

இச்சம்பவம் நேற்று நண்பகல் புங்குடுதீவு மடத்துவெளி என்னும் இடத்தில் நடைபெற்றது.

புங்குடுதீவைச் சேர்ந்த பா அரிச்சந்திரன் [15-வயது] என்பவரே ஸ்தலத்தில் பலியானவராவார் இவர் ஒரு மாணவராவார். படுகாயங்களுக்குள்ளாகி யாழ் அரசினா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பவர் சி. நகுலேஸ்வரன் [12-வயது] என்பவராவார் இவரும் ஒரு பாடசாலை மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களிருவரும் நேற்று சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் உடன்மோதியதினாலேயே இவ்விபத்து நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

## தெல்லிப்பழை தாக்குதல்:
# புலிகள், ஈ. பி. ஆர். எல். எவ். ரெலோ முறியடிப்பு!

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள், ஈ. பி. ஆர் எல். எப், ரெலோ ஆகிய இயக்கங்கள் கூட்டுச் சேர்ந்து தெல்லிப்பழையில் கடந்த 23 ம் திகதி நிகழ்ந்த இராணுவத் தாக்குதலை முறியடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினம் கனரக வாகனங்களிலும், இராணுவதுருப்புக்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களிலும் காங்கேசன்துறை இராணுவ முகாமில் இருந்து தெல்லிப்பளை நோக்கி வந்துள்ளனர். இவர்களுக்கு பீரங்கி பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர் ஆகாயப் பாதுகாப்பு அளித்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

இதனிடையே திருகோணமலை மாவட்டத்தில் கும்புறுப்பிட்டியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாமொன்றை இராணுவத்தினர் பிடிக்கச் சென்ற சமயம் தமிழீழ விடுதலைப் புலிகளால் அம்முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. ஈழப் தேசிய விடுதலை முன்னணியினை ஆதாரங் காட்டி 'சென்னை இந்து' இத்தகவலை வெளியிட்டிருந்தது. (ய-செ)

## நாவற்குழி பீரங்கிமுழக்கம்: சோலாகலத் திறப்புவைபவம்

(எம். ரி. சந்திரகுமார்)

நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா நேற்று மாலை வெகு கோலாகலமாக நடைபெற்றது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சி. வீ கே. சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நிலயத்தைத் திறந்துவைத்து உரையாற்றினர்

"எந்தவிதமான தாக்குதல்கள் எம்மை எதிர்கொண்டாலும் நாம் நமது பணிகளிலிருந்து ஓய்ந்துவிடக்கூடாது. நேற்று முன்தினம் அரியாலை, நாவற்குழிச் சந்தி, நாயன்மார்கட்டுப் பகுதிகளில் ஏற்பட்ட பதற்றமும், பீதியும் இன்று கட்டடத் திறப்புவிழா நடைபெறுமா என்ற ஐயத்தைத் தோற்றுவித்தது ஆனல் பல்வேறு இன்னல்களுக்கும் மத்தியில் பாரதி சனசமூக நிலையத்தையும், படிப்பகத்தையும் திறப்பதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ள இளைஞர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். இப்படியான பணிகளில் எமது மக்கள் சேவையாற்ற வேண்டிய காலகட்டம் வந்துள்ளது" என்றுர்.

விழாவில் தோழர் செந்தில்வேல், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன். உட்பட இன்னும் பலர் சிறப்புரையாற்றினர். [ச]

## பென்சன் மோசடி
# குற்றப்பத்திரம் தாக்கல்செய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இறந்து போனவர்களின் பெயரில் (பென்சன் )ஓய்வூதியம் பெற்றுக்கொண்டது தொடர்பாக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ள யாழ் ஓய்வூதியக்கிளை ஊழியர் ஒருவர்மீது குற்றப்பத்திரிகை கொடுப்பதற்கான நடவடிக்கை தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுருவவதாகத் தெரிகிறது.

இத்துடன் ஓய்வூதியக் கிளையின் பதிவேடுகளுக்கென தனியான களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளதாம்.

யாழ் ஓய்வூதியக்கிளையில் உத்தியோகம் பார்த்துஇறந்துபோன 10க்கு மேற்பட்டவர்கள் பெயரில் ஓய்வூதியத்தை சட்டத்துக்கு மருக நீண்டகாலமாகப் பெற்று வந்தமை. 1985 ஏப்ரல் மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டு இக்கிளையில் கடமை புரிந்த இருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தனர் என்பதும், ஒருவர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டும் இருந்தார்.

இதன்பின்பு ஓய்வூதியக்கிளை புனரமைப்புச் செய்யப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. ]ஐ]

## சிறுமி கிணற்றுக்கு பலி!!

[யாழ்ப்பாணம்]

கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்குச் சென்ற சிறுமி அக்கிணற்றுக்கே பலியானர்!

இச்சம்பவம் பாஷையூரில் நடைபெற்றுள்ளது. அருளப்பு ஸ்ரயிலாதேவி [10 வயது] என்பவரே கிணற்றுக்கு உயிரைப் பறிகொடுத்தவராவார்.

மரணவிசாரணை நடாத்திய யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன், தவறி விழுந்ததையடுத்துநீருள் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். [ச]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126

## கிழக்கில் 500 பேர் கைது

[அம்பாறை]

பாண்டிருப்புத் தொகுதியை நேற்று முன் தினம் சுற்றிவளைத்துத் தேடுதல் நடாத்திய ஆயுதப்படையினர் 500 க்கும் மேற்பட்ட இளைஞர்களைக் கைதுசெய்தனர்.

நேற்று அதிகாலை 3-30 தொடக்கம் நண்பகல் 1-30 வரை இத்தேடுதல் வேட்டை இடம் பெற்றது.

15 க்கும் 40க்குமிடைப்பட்ட வயதினரே கைது செய்யப்பட்டனர். இவர்கள் கழுவாஞ்சிக்குடி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ய-மா)

## அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சோவிலுக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த நரின் மோட்டார் சைக்கிளை கோப்பாய் பாலத்தில்வைத்து இனந்தெரியாத நபர்கள் பறித்தெடுத்துச் சென்றுள்ளனர்

கோப்பாய் தெற்கு நாவலடியைச் சேர்ந்த திரு. எஸ். இராமலிங்கத்தின் 'ஹொண்டா 125' மோட்டர் சைக்கிலே இவ்வாறு பறிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## இடைத் தேர்தல்கள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை உடுப்பிட்டி, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னர், முல்லைத்தீவு, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்கள் தற்போது அமுலிலிருக்கும் அவசர காலச் சட்டம் காரணமாகப் பிற்போடப் பட்டுள்ளன.

இதற்கான அறிவித்தல்கள் விசேட அரசாங்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது. [ய-செ]

## 'விமானங்கள் மீண்டும் வரும்' இன்று வெளியீடு

[யாழ்ப்பாணம்]

'ஈழநாடு' நிறுவனமும் யாழ். இலக்கியவட்டமும் இணைந்து நடாத்திய இரசிகமணி சனகசெந்திநாதன் ஞாபகார்த்த குறுநாவல் போட்டியில்முதற்பரிசு பெற்ற நவல்களுள் ஒன்றுன நெல்லை க. பேரனின் 'விமானங்கள் மீண்டும் வரும்' நூல் வெளியீட்டுவிழா இன்றுஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

## வாழ்த்துமடலில் தமிழ் புறக்கணிப்பு

[பண்டத்தரிப்பு]

வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி யாழ். மாவட்டதிலுள்ள பாவனையாளர் பாதுகாப்புசங்கங்களுக்கு புதுவருட வாழ்த்துமடலை தபால் மூலம் அனுப்பிவைத்துள்ளார். சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் புத்தாண்டு வாழ்த்துக்கள் இந்த மடலில் தெரிவிக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழி இடம்பெறவில்லை. முகவரியும் தனிச்சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது.

## லலித் பலாலி விஜயம் -செய்திப் பலகை

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, அங்குள்ள அதிகாரிகளுடன் இரகசியக் கூட்டம் நடத்தியதாக 'ஈழம் செய்திப் பலகை சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ பி. ஆர். எல். எவ். இயக்கத்தால் வெளியிடப்பட்டுள்ள இச்சுவரொட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தந்திரி மலையில் மக்கள் விடுதலைப்படையின் பி. எல். ஏ] கண்ணி வெடித்தாக்குதல். கொமாண்டர் ஒருவர், 6 இராணுவத்தினர் மாண்டனர் இராணுவ வாகனம் முற்ருக சேதம். தெல்லிப்பழையில் மக்கள் மீது குண்டு பொழிந்த அவ்ரவிமான ஓட்டி திஸநாயக்கா, போராளிகளின் பதில் தாக்குதலில் காயமடைந்து சத்திர சிகிச்சையின்போது மரணம்.

அமைச்சர் லலித் அத்துலத் முதலி பலாலி முகாமுக்கு திடீர்விஜயம் அதிகாரிகளுடன் ரகசியக்கூட்டம். பாதுகாப்பு வலயத்திற்கெதிரான சர்வதேச பிரசாரம். வரும் 30 முதல் மாபெரும் கையெழுத்து இயக்கம், மும்மதத் தலைவர்கள் முயற்சி, திருமலையில் சேனையூர், சம்பூர் அகதி முகாமில் கூலிப்படையினரால் 5 தமிழர்கள் சுட்டுக்கொலை. விசேட அடையாள அட்டை பெறச்சென்ற 13 பேர் மூதூரில் கைது.